Registered as a News Paper

பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-33 15-21 ஒக்டோபர் 2004



# திருமுக அறிமுகம்

தண்டமிழில் இடி குமுற மின்னல் பாயச் சரசரன வசைமாரி பொழிந்துநிற்கும் வண்டமிழ் வேற்பிள்ளை என்னும் கவிஞர் - எனத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் நாவன்மையாளர் ஆசுகவி வேலுப்பிள்ளையை கல்லடி வேலுப்பிள்ளை என்றே அனைவரும் அறிவர்.

கல்லடிவேலன் சொல்லடிக்கு எவரும் தப்பிவிடமுடியாது என்றே தமிழறிந்தோர் கூறுவர். கண்டனத்திற் கை தேய்ந்த புலவரான அவரின் கண்டனங்கள் யாவும் நெற்றிக்கண் திறப்பினும் அஞ்சாத நியாயமிகு நக்கீர விமர்சனங்களேயாகும்.

கல்லடிவேலுப்பிள்ளை ஒரு கவிஞர் மட்டுமல்ல, கைதேர்ந்த-கற்றோரை பிரமிக்க வைக்கும் உரைநடை ஆசிரியர், பத்திரிகையாசிரியர், வரலாற்று மற்றும் ஆராய்சி வல்லுநர், சமூக சீர்திருத்தவாதி, பகுத்தறிவாளர், தமிழுணர்வாளர், தேசபக்தர்... என பல பரிமாணங்களைக் கொண்டவர்.

தமிழ்மேதைகளான சிவசம்புப்புலவர், மறைமலையடிகள் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை, சேர்.பொன்.இராமநாதன், சுவாமி ஞானப்பிரகாசர், நவநீத கிருஷ்ண பாரதியார் போன்றோரால் வியந்து புகழப் பெற்ற பல்துறை வித்தகர்.

எல்லாவற்றிலும் விட மிகச்சிறந்த நகைச்சுவையாளன். ஒரு மேதை என்பவன் மிகச் சிறந்த நகைச்சுவையாளனாகவே இருப்பான் என மேலை நாட்டு சிந்தனையாளர் ஜெயர்சன் கூறியதை இங்கு நினைவிற் கொள்வது அவசியமாகும்.



கல்லடி வேலுப்பிள்ளை

ஆசுகவியின் பிறப்பு 07.03.1860 இல் யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு வசாவிளானில் நிகழ்ந்தது.

பெற்றோர்கள்:- கந்தப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகள் இயல்பிலேயே விவேகியாக விளங்கிய அவர் நல்லறிஞர்களின் மாணவனாக கற்றுச் சிறந்தவித்துவத்தைப் பெற்றார். இருதாரம் கண்டவர். முதல் மனைவி ஆச்சிக்குட்டி, அவர்சில வருடங்களில் இறக்க அவரது தங்கை ஆச்சி முத்துவை மணந்தார். நான்கு புதல்வர்களின் தந்தையான ஆசுகவி வாரிசுகளும் சாமானியர்களல்ல.

ஆசுகவியவர்கள் சமூகத்தின் சின்னத்தனங்கள் கண்டு சீற்றம் கொண்டவர். அடக்கு முறைகளுக்கு அஞ்சாதவர். அகங்கார மற்ற கம்பீரம் கொண்டவர். நெஞ்சிலுரமும் நேர்மைத்திறனும் கொண்ட பத்திரிகையாளராக அவர்தன்னை ‘சுதேச நாட்டியம்’ என்ற பத்திரிகையினூடாக அடையாளப்படுத்தியுள்ளார். ஆசுகவியை நமக்கு முழுமையாக அடையாளம் காட்டுவது ‘சுதேச நாட்டியம்’ பத்திரிகையேயாகும். சுமார் 30வருடகாலம் அவர் அப்பத்திரிகையை வெளியிடும் பணியில் இருந்தார். அவர் தனது பத்திரிகையின் இலக்கைப் பின்வருமாறு அதன் முதலிதழில் பிரகடனம்செய்துள்ளார்.

எப்பிரபுக்களாயினும், எவ்வதிகாரிகளாயினும், எவ்வுத்தியோகத்தராயினும், எக்குருவாயினும், எந்நண்பராயினும், எக்கலாஞானி யாயினும் நீதியற்ற கிரியைகளை செய்கின்றவராய்க் காணப்படுவராயின், அக்கிரியையையும், அவரின் கீழ் நிலையையும், எடுத்து வெளிப்படுத்த எதற்காயேனும் அஞ்சி என்மனஞ் சிறிதாயினும் பின்நிற்கப்போவதில்லை. இதுவே நடுநிலயும் பொது நன்மையும் விரும்பும் பத்திரிகா லட்சனமாகும். இது ஒன்றே போதும் கல்லடி வேலுப்பிள்ளையின் கருத்தியல் நேர்மையினை உணர்ந்து கொள்ளவதற்கு....

ஆசுகவியவர்கள் சுமார் 20 நூல்கள்வரை எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. எனினும் சில நூல்களே இப்போது கிடைக்கக் கூடியதாக உள்ளது. அவரின் சிறந்தநூல் ‘யாழ்ப்பாண வைபவ கௌமுதி’ என்பதாகும். இது அவரின் சரித்திர ஆய்வுப் புலமைக்கு சான்று பகரும் நூலாகும். ‘அழகம்மா கும்பி’ என்ற மற்றொரு நூல் அவரின் சர்ச்சைக்குரிய நூலாகும். அந்த நூலில் உள்ள பாடல்களை யாரும் பாடக்கூடாதென அந்நாளில் தடைவிதிக்கப்பட்டிருந்தாம்.

கடைசியாக ஆசுகவி பற்றிய ஒரு கவிதையை இங்கு குறிப்பிடுவது அவசியம். அதுவே இதற்கு முத்தாய்ப்பாகவும் அமையும்.

கண்டனத்திற் கைதேர்ந்த கானமேகம்
கருது தமிழ்க் கன்னிகை மோகத்தால் ஈழ
மண்டலத்தில் வயவையென்னும் சிற்றூர் தன்னில் வந்துதித்தான்
எனக்கவிகள் ஏங்கி நிற்கத்
தண்டமிழில் இடி குமுற மின்னல் பாயச்
சரசரென வசைமாரி பொழிந்து நிற்கும்
வண்டமிழ் வேற்பிள்ளையென்னும் கவிஞர்-நின்னை மறந்திடுமோ
தமிழுலகம் மறவாதன்றே...!


வ.இராசநாயகம்.

அட்சயன்

# காரசாரம்

## பெண்களின் மலையளவு சாதனை உள்ளத்தை பூரிக்க வைக்கிறது

காலங்காலமா அடிமைப்பட்டுக் கிடந்த தமிழனுக்கு நல்ல காலம் பிறந்தது போல சில இயக்கங்கள் வந்து அங்கின இங்கின ரெண்டொரு ஆமிய அடிச்சளவில பூமிய மீட்டுப்போட்டமெண்டு ஒதுங்கீற்றினம். - பிறகென்னடா எண்டா மக்களில கரிசனை கிளம்பினதில சனநாயக வழியில வெளிக்கிட்டு மக்களின்ர எது? தமிழ் மக்களின்ர எதிர்காலத்தில மிகப் (மோ) பாசமான அக்கறைய வச்சிருக்கிற சில இயக்கக்காறர்- இந்திய அமைதிப்படையோட முன்னை சேந்து நிண்டு தேசியப்படை சேத்து வைச்சு பின்னுக்குச் சிறிலங்கா அரசபடைய எதிர்க்கவெண்டு அவையட்ட விசேட பயிற்சியும் பெற்று ஆயுதமும் பெற்றவை. அதோட



அவைபோனதோட பயிற்சியையும் மறந்து பிரிவுத் துயரில மாட்டாமல், ராமன் இருக்குமிடமே அயோத்தியெண்டு போனவை.

அவையள்ளையும் கனபேர் குடியும் குடித்தனமுமாய் போக மற்றவை சிலர் ஒருவரையொருவர் பகைச்சுச் சிக்குப்பட்டு மக்குப்பட்டுப் போக-போராடப் புறப்பட்டு, இறுதிவரை தங்கட லட்சியத்தை விடாமப் பிடிச்சிருக்கிற விடுதலைப்புலியள் மட்டும் தங்கட இலக்கில தொடர்ந்து நிக்கினம். இவை இப்பிடி நிக்கிறதால தான் கனபேற்ற வீட்டில அடுப்பெரியுது.

அந்த அடுப்பில எரியிற நெருப்பில அஞ்சாறு தணலை அள்ளி நெஞ்சில கொட்டுறமாதிரிச் சில பேர் இப்ப அறிக்கையள் விடுகினம்.

இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன். “நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்.”

எண்டதுபோல புலியள் ஆயுதமேந்திப் போராடினதென்னவோ தமிழீழ விடுதலைக்குத் தான். இந்த ஆயுதப் போராட்டத்துக்கு எதிராகப் புறப்பட்டிருக்கிற தேசாபிமானமுள்ள?! மொழிப்பற்றுள்ள?! அறிஞர்களையெல்லாம் இப்ப அரசாங்கம் தன்னோட சேர்த்து வைச்சிருக்கு.

உலக நாடுகளுக்கு இவைதான் தமிழர், இவைக்குத் தான் ம(ா)க்கட் பண்பிருக்கு எண்டு காட்டத்தான் சேர்த்து வைச்சிருக்கு. ஆனா இன்னொண்டு சொல்லியிருக்கிறா ஔவையார். “ஆற்றங்கரையின் மரமும்- அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ” இப்ப அறிக்கைக்கு மேல அறிக்கை விடுகிற ராசா அறிஞ்ச குடியளுக்கும் விடுதலைப்புலியள்தான் சோறு போடுகினம். அதை அவை மறக்கவும் மாட்டினம், மறுக்கவும் மாட்டினம்.அரிவாளுமாடக் குடுவையுமாடும். அரிவாளுந்நிக்கக் குடுவையும் நிக்கும். சண்டை நடந்தா வெல்லோ. அறிக்கைக் காறருக் கும் அரியாசனத்தோட ஒரு சரியா சனம்.

எங்க இப்ப புலியள் “சண்டைய விட்டிட்டம். இனிமேல் சண்டையில்லை. ஆயுதங்களைக் கீழ போடுறம். சிறிலங்கா அரசு ஏதோ... பாத்துத்தாறதைத் தரட்டும்.” எண்டு ஒருவார்த்தை.... ஒரேயொரு வார்த்தை சொல்லட்டும்.... ஏன்... ஏன் வாயப்பொத்திச் சிரிக்கிறியள். இந்த அறிக்கைக் காறத்தமிழரெல்லாம் சுண்டிவிட்டுப் பறக்கவேண்டிவரும். பிறகேனய்யா உவங்களை அரசாங்கத்துக்கு “மக்களில நீங்கள் கொண்ட கருணையெல்லாம் வெறும் புரட்டெண்டு உங்களுக்கே தெரியும்.” எண்டது புதினமோ.

ஏதோ புலியளும் சண்டைய நிப்பாட்டிப்போட்ட உங்கடபாடு அந்தரம் எண்டு தெரிஞ்சுதானே அடிக்கடி தட்டியும் விட்டுக்கொள்ளுகினம்.



சமாதான காலம் வந்த உடனயே இவங்கட சாயம் வெளுத்துப்போச்சு. சமாதானம் வந்திட்டா.... பரிதாபமாப் போயிரும்.

பிறகென்ன கொழும்பில தாய்மடி சுகமெண்டு கிடக்கிற சுகமும் இல்லாமப் போயிரும். நாய்க்கு நடுக்கடல்ல போனாலும் நக்குத் தண்ணியே நக்குத்தண்ணி.

அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள். இந்தமுறை மிகத்திறமாகச்செய்து போட்டினம். ஆயிரம் மேடை போட்டுப் பேசினாலும் விளங்காத விசயங்களை அஞ்சு நாளைக்குள்ள சுத்தமா விளங்க வச்சிட்டினம். பெண்களின்ர சாதனையளப்பற்றிச் சும்மா கேள்விப்பட்டவைக்குச் சுத்திப்பாத்ததில நாரி நவிண்டு போச்சு .இந்த ராமாயணத்தில ஒரு பாட்டு வரும்.“ தோள் கண்டார் தோளே கண்டார்.” எண்டு அது போல பிள்ளையளின்ர போர்க்கள அறிவைப் பார்த்து வியக்காதவை இல்லை.

அதிலும் குறிப்பா இராணுவக் கட்டுப்பாட்டுக்கயிருந்து வந்த இளவட்டங்கள் சிலர் இந்தளவுக்கு இவை வளந்திருக்கினம் எண்டத நினைச்சும் பார்க்கேல்ல. இவ்வளவு சாதனைகளைப் படைத்த பெண்களின் அபாரத்திறமையைப் பல இடங்களில் பரீட்சை பண்ணிப் பார்த்தபடியே போன புதிய மக்கள் புளகாங்கிதமடைந்தனர்.

மருத்துவத்துறையின் மகத் தான முன்னேற்றம் மலைக்க வைத் தது. புகைப்படக் கண்காட்சியின் மீது மக்கள் உறைந்து போய் நின் றனர்.

தென்கிழக்கடலுள் நின்ற வான்மதியில் ஏறிப்பார்த்து விட்டு வர எண்ணிக்கை மிகுந்த மக்கள் வரிசையில் நின்றனர். ஆயுதக்கண்காட்சியும், சலிக்காது நின்று விளக்கமளிக்கும் போராளிகளைப் பார்த்து பலரும் வியந்தனர். எல்லா வற்றிக்கும் மேலாக விடியல் படைவீடு அருமையான அமைப்பும் அதனுள் அமைக்கப்பட்டிருந்த போட்டி நிகழ்வுகளும் ஏராளமான மக்களையும், இளைஞர்களையும் கவர்ந்திழுத்தது.

எல்லாவற்றையும் பார்த்து விட்ட திருப்தியோடு காவல் துறை மகளிர் விவகாரப்பிரிவினுள் நுழைந்தால் அங்குதான் சமுதாயப் பெண்களைப் பார்க்கமுடிகிறது. பெண்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டு. என்னென்ன சட்டப்பாதுகாப்புகள் உண்டு. அத்தியாவசிய சட்ட விளக்கங்கள், சிறுவர் உரிமைகள், துஷ்பிரயோகம் என்று பல விடயங்கள் நன்கு விளக்கப்பட்டிருந்தன.

பெண் காவல்துறையினரின் வரலாற்றுப் புகைப்படங்கள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொணணூற்றிரண்டாம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தில் உரையாற்றிய தலைமைக்காவலர் கார்த்தியாயினி உட்படப்பல மாவீரர்கள்.

இங்கே ஒரு கேள்வியெழுகிறது. இவ்வளவு பெரிய அளவிலான பெண்கள் எழுச்சி நிகழ்வுகளின் பின்னணியில் சமுதாயத்திலுள்ள சாதாரண பெண்கள் விடுதலையடைந்துள்ளார்களா? அல்லது விடுதலையை நோக்கி முன்னேறியுள்ளனரா?


(24ஆம் பக்கம் பார்க்க)

மாயா

# சந்திரிகாவை நம்பி சமாதானம் செய்யலாமா?

நிலாந்தன்





அண்மைக்காலமாக ரணில் விக்கிரம சிங்காவும் ஜி.எல்.பீரிசும் ஒரு விசயத்தை அழுத்தமாக கூறிவருகின்றார்கள். அதாவது சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை யு.என்.பி. எதிர்ப்பெதையும் காட்டாது என்று.

இலங்கைத்தீவின் அரசியலைப் பொறுத்தவரை ஒரு எதிர்க்கட்சி ஆளும் கட்சிக்கு இப்படி ஆதரவை வழங்கமுன்வந்திருப்பது என்பது நூதனமான ஒரு விசயமே. பொதுவாக ஆளும் கட்சி செய்யும் எதையும் கண்மூடித்தனமாக எதிர்ப்பதே எதிர்க்கட்சியின் வேலை என்றிருந்து. வரும் ஒரு மூன்றாம் தர அரசியல் பாரம்பரியத்தில் யு.என்.பியின் இந்த முடிவு விதிவிலக்கானது போலவும் நூதனமானது போலவும் தோன்றக்கூடும். இப்பொழுது பிரச்சினையாய் இருப்பது ஆளும் கட்சிக்குள் உள்ள பிளவுகளே தவிர, எதிர்க்கட்சி அல்ல என்ற ஒரு பொதுவான அபிப்பிராயத்தின் அடிப்படையில் சமாதானத்தை விரும்புவோர் மத்தியில் ரணிலின் மீதான மதிப்பு மேலும் உயர்வதற்கு இது உதவக்கூடும்.

சந்திரிகாவின் தேசிய ஆலோசனைச் சபை எனப்படுவது ரணிலை நோக்கி வீசப்பட்ட ஒரு வலையே. ரணில் சமாதானத்துக்கு ஆதரவு என்றால் அவர் அதில் பங்குபற்றியாகவேண்டும். ஆனால் அவர் பங்குபற்ற மாட்டார் என்பதை முன்கூட்டியே நன்கு தெரிந்துகொண்டுதான் சந்திரிகா அதை அமைத்தார். சந்திரிகாவின் இந்தச் சமாதான நாடகத்துள் தானும் ஒரு அங்கமாகி மறுபடியும் ஒரு தடவை ஏமாற்றப்பட ரணில் தயாரில்லை. தேசிய ஆலோசனைச் சபையை நிராகரிக்கும் அதேசமயம் சமாதானத்துக்கான தமது ஆதரவை திரும்பத்திரும்பத் தெரிவிப்பதன்மூலம் ரணில் தேசிய ஆலோசனைச் சபை எனப்படுவது ஒரு நாடகமே என்பதை வெளிக்கொண்டுவர முயற்சிக்கிறார்.

அதேசமயம், மெய்யான சமாதானத்துக்குத் தான் தயார் என்பது போலவும் ஒரு தோற்றத்தைக் காட்டிவருகிறார்.

ஆயின் ரணில் மெய்யாகவே சமாதானத்துக்காக சந்திரிகாவுடன் ஒத்துழைக்க தயாராக இருக்கிறாரா?

இல்லை. அவர் சமாதானத்தை ஒரு பொறியாக்கி சந்திரிகாவை அத னுள் வீழ்த்திவிட முயற்சிக்கிறார் என்பதே மெய் நிலை.

முன்பு சந்திரிகாவை யுத்தத்தை நோக்கி முன்நோக்கித்தள்ளி அதன் மூலம் அவரைத் தோற்கடித்துவிட ரணில் முயற்சிசெய்தார். முஸ்லிம்களும், மலையகத் தமிழ்களும் சந்திரிகாவின் பக்கம் போவதை தடுக்கும் விதத்தில் அவர்களுக்கு அளவுக்கு மிஞ்சிய சலுகைகளையும் செய்தார். அதன் மூலம் சந்திரிகாவை சமாதானத்தின் எதிரிகளில் தங்கியிருக்கச் செய்வதன்மூலம் ஒரு யுத்தத்தை விரைவுபடுத்தி அதன் மூலம் சந்திரிகாவின் கனவுகளை சிதறடித்து விடலாம் என்றும் அவர் திட்டமிட்டார்.

ஆனால் சந்திரிகாவின் தந்திரங்கள் சூழ்ச்சிகள் நிறைந்த தலைமைத்துவத்தை அசைப்பது ரணிலுக்கு அவ்வளவு எளிதானது அல்ல என்பதையே கடந்த சில மாதங்கள் நிரூபித்திருக்கின்றன. தொண்டமானைத் தன் பக்கத்தில் வைத்திருப்பதில் ரணில் எதிர்பார்த்த வெற்றியை பெறமுடியவில்லை. தவிர ஹெல உறுமயவும் ஈடாடிவருகிறது.

எனவே இப்பொழுது ரணில் தனது வியூகத்தை மாற்றிக்கொண்டுவிட்டார். சந்திரிகாவை சமாதானத்தை நோக்கித் தள்ளுவதன் மூலம் அவருடைய எதிர்காலக்கனவுகளை முறியடித்துவிடலாம் என ரணில் நம்புவது போலத்தெரிகிறது. இதில் அவருக்கு இரண்டு இலக்குகள் இருக்கலாம்போல் தெரிகிறது. ஒன்று அவருடைய எஜமானர்களான மேற்கு நாடுகளுக்கு விசுவாசமாக சமாதானத்தை ஆதரிப்பது, மற்றது சந்திரிகாவை சமாதானத்தின் பலி ஆடாய் மாற்றுவது. இது எப்படி என்று சிறிது விரிவாகப்பார்ப்போம்.

சமாதானத்தை நோக்கி சந்திரிகா போக முடியாத அளவிற்கே அவருடைய கூட்டு முன்னணியின் அக யதார்த்தம் காணப்படுகிறது. அவர் சமாதானத்தை நோக்கிப்போவாராக இருந்தால் அவருடைய கூட்டு முன்னணி உடையும் வாய்ப்புக்களே அதிகமுண்டு. எனவே சமாதானத்தை நோக்கி சந்திரிகாவைத் தள்ளுவதன்மூலம் அவருடைய பலத்தின் அடித்தளத்தை உடைத்துவிட ரணில் முயல்கிறார். சந்திரிகாவிற்கு இப்பொழுதுள்ள பிரச்சினை சமாதானமல்ல ரணிலும் அல்ல. அவருடைய பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது எப்படி என்பதே.

இந்தக் கனவை நோக்கி காரியமாற்றுவதாக இருந்தால் அவர் இப்போது வைத்திருக்கும் பலத்தை தொடர்ந்தும் பேணி ஆகவேண்டும். அவர் சமாதானத்தை நோக்கி முழு அளவில் போவாராக இருந்தால் ஜே.வி.பி யைக் கையாள்வது கடினமாகிவிடக்கூடும். இது அவருடைய கூட்டு முன்னணியை பாதிக்கக்கூடிய விசயம்.

இது காரணமாகவே ரணில் சந்திரிகாவை சமாதானத்தை நோக்கித்தள்ள எத்தனிக்கிறார். ஆனால் சந்திரிகா ரணிலைப் பொருட்படுத்தும் ஒரு தலைவியாக என்றைக்குமே இருந்ததில்லை. சூழ்ச்சிகளும் பொய்ச்சத்தியங்களும் நிறைந்ததும் கனவான் அரசியலுக்கு வெகுதூரத்தில் இருப்பதுமாகிய சந்திரிகாவின் அரசியலைப் பொறுத்தவரை ரணில் ஒரு பொருட்டே இல்லை. அவர் ரணில் வகுக்கும் வியூகங்களுக்குள் விழக் கூடிய ஒரு ஆளுமையும் அல்ல.

கடந்த பத்தாண்டு காலத்துள் ஒரே ஒரு தேர்தலிற்தான் ரணில் வெல்லக்கூடியதாக இருந்தது என்பதிலிருந்தே சந்திரிகாவின் ஆளுமையை எடைபோட முடியும். அந்த வெற்றியைக் கூட தொடர்ச்சியாக பேணமுடியாத அளவிற்கு ரணில் சக்தியற்றவராக இருந்ததன் விளைவாகவே சமாதானம் மேலும் சோதனைக்குள்ளாகியது.

நாடாளுமன்றத்தை தான் கலைக்கப்போவதில்லை என்று சந்திரிகா முன்னாள் இந்தியத்தூதுவர் நிருபம் சென்னுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் யகூசிஅகாசிக்கும் உறுதி அளித்திருந்தார். இது இந்த இரு தூதுவர்களுக்கூடாகவும் ரணிலுக்கு சொல்லப்பட்டது. ஆனால் சந்திரிகா ரணிலை மட்டுமல்ல அகாசியையும், நிருபம் சென்னையும் கூட சிறுவர்களைப்போல பேக்காட்டிவிட்டார்.

எனவே ரணில் என்னதான் வியூகங்களை வகுத்தாலும் அவற்றை எல்லாம் முறியடிக்கும் சக்தி மிக்கவராகவே சந்திரிகா இதுவரையிலும் தன்னை நிரூபித்து வந்திருக்கின்றார்.

எனவே அடுத்த சனாதிபதித்தேர்தல்வரையிலும் காத்திருப்பதைத்தவிர ரணிலுக்கு வேறு தெரிவுகள் இல்லையென்றே தோன்றுகிறது. ஆனால் அதற்கிடையில் சந்திரிகா ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கான ஏதாவது குறுக்குவழிகளை கண்டுபிடிப்பதற்கு முன் அவருடைய பலத்தை உடைத்துவிடவேண்டுமென்று ரணில் விரும்புகிறார். இதுகாரணமாகவே அவர் சமாதானத்துக்காக பரிந்து பேசுகிறார். அவருடைய கனவும் சந்திரிகாவினுடையது போல சமாதானமல்ல. அடுத்த சனாதிபதியாக வருவதே அவருடைய இறுதி இலக்கு.அதற்கான அவருடைய மூலோபாயத்தின் ஒரு பகுதியே சமாதானமும் ஆகும். அடுத்த சனாதிபதியாக வருவதுதான் அவருடைய கனவு. நிச்சயமாக சமாதானம் அல்ல.

உண்மையாகவே அவர் சமாதானத்தை விரும்புவாராக இருந்தால் அதை ஏற்கனவே செய்து காட்டி இருந்திருக்கவேண்டும். அவருடைய ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களின் போதும் அவர் சமாதானத்தின் பால் தனக்கிருக்கும் ஈடுபாட்டை நிருபித்திருந்திருக்கவேண்டிய எத்தனையோ சந்தர்ப்பங்கள் தரப்பட்டன. ஆனால் அவர் அப்படி எதையும் செய்திருக்கவில்லை. இப்பொழுதும் அவர் சமாதானத்தை சந்திரிகாவுக்கு எதிரான ஒரு வியூகமாகவே முன்வைக்கிறார். ஆனால் சந்திரிகாவை அவரால் அசைக்கமுடியுமா என்பதே சந்தேகமே.

அவரால் மட்டுமல்ல அவருடைய எஜமானர்களான மேற்கு நாடுகளாலும் கூட சந்திரிகாவை அசைக்கலாம்போல் தோன்றவில்லை. இப்படிச் சொல்வதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது இப்பத்தியில் கடந்த வாரம் சொல்லப்பட்டது போல பேரரசுகள் மற்றும் பிராந்தியப் பேரரசுகள் என்பவற்றிற்கு இடையிலான போட்டி காரணமாக இலங்கைத்தீவின் கவர்ச்சி அதிகரித்து வருவதும் இதனால் அரசின் பேரம் பேசும் சக்தி உயர்வாய் இருப்பதும்.

இதன்படி மேற்கு நாடுகள் சந்திரிகாவை நிர்ப்பந்தித்தால் அவர் தனது பிராந்திய நண்பர்களை நோக்கிப் போவார்.

இரண்டாவது காரணம், ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவிற்கு சவாலான ஒரு தலைவராக இல்லை என்பது தனக்கு மிகவும் சாதகமாயிருக்கும் சர்வதேசச் சூழலை சந்திரிகாவுக்கு எதிராக ஒருங்கு குவிக்கும் சக்தியற்றவராக ரணில் காணப்படுகிறார்.

மூன்றாவது காரணம், சந்திரிகாவின் தனிப்பட்ட சுபாவம். ஜெயலலிதாவைப் போலவே இவரும் ஒரு வித கதம்பமான கணங்களின் சேர்க்கையாக காணப்படுகின்றார். அவர் எதைச் செய்வார் எதைச் செய்யமாட்டார் என்று எதிர்வுகூறமுடியாதபடி அடிக்கடி மாறும்; அடிக்கடிதடம்புரளும்; முன்பின் முரணாக கதைக்கும் ஓர் ஆளுமை வார்ப்பாக அவர் காணப்படுகிறார். அவரை நம்பி எதையுமே செய்யமுடியாது.

இந்த மூன்று காரணங்களும்தான் அவர் சமாதானத்தோடு விளையாடுவதற்குரிய அரசியல் மற்றும் உளவியல் அடிப்படைகளை உருவாக்குகின்றன. எனவே இனிமேலும் அவர் சமாதானம் செய்ய வந்தாலும் கூட அவரை நம்பமுடியாது. சமாதானம் எனப்படுவது கண்ணியமான கனவான் அரசியலுக்கே உரியதொன்று. அத்தகைய கண்ணியம் மிக்க கனவான் அரசியல்வாதிகள் கொழும்பில் மிகக் குறைவு என்பதிலிருந்தே இலங்கைத்தீவின் துயரம்அனைத்தும் தொடங்குகின்றது. ●

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...! நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## பதவியைக் காப்பாற்ற முயலும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ...!



நாடு எல்லாவகையிலும் ஒரு அவலமான நிலைக்குத்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கையில் அதனை காப்பாற்றும் முகமாக எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசு எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக சனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் நான்கு ஆண்டுகள் நீடித்து அவரை அந்தப் பதவிக்கதிரையில் இருந்து இறங்காமல் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கும்வகையில் அரசியல் அமைப்பினைத் திருத்தப் போவதாக சிறிலங்காப்பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இன்று நாட்டின் அதிமுக்கிய பிரச்சினையான இனவிவகாரத்திற்கு சுமுகமாக அரசியல் தீர்வொன்றைக் காணும்வகையில் மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுக்கும் இடையூறாக இருப்பது சிறிலங்காவின், சனநாயகப் பண்புகளுக்கு முரணான, நிறைவேற்று அதிகார-சர்வாதிகாரத் தன்மைகொண்ட சனாதிபதியை முதன்மையாகக் கொண்ட நீதியற்ற அரசியல் யாப்பேயாகும்.

சனாதிபதியிடம் அதிகாரங்கள் அனைத்தையும் முழுமையாகக் கையளித்துவிட்டு நாடாளுமன்றத்தை சுயமாக முடிவெடுக்கும் தனிமையற்ற, அதிகாரவலுவற்ற அமைப்பாக, மாற்றிவிட்டுள்ள ஜே.ஆர் காலத்து சர்வாதிகார ஆட்சிமுறையின் ஆதாரமையமான இன்றைய அரசியலமைப்பு முற்றாக அழிக்கப்படாதவரை- தலைகீழாக தேசிய நலனுக்கேற்றவகையில் உடனடியாக மாற்றப்படாத வரையில் இனப்பிரச்சினை உட்பட நாட்டின் பல்வேறு நெருக்கடிகளுக்கு எந்த வகையிலும் தீர்வுகாணமுடியாது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாக இருக்கையில், அதே சர்வாதிகார சனாதிபதிப்பதவியில் சந்திரிகாவை மேலும் நான்குவருடங்கள் குந்தியிருக்கும்..... வகையில் அரசியலமைப்பை மாற்றப் போகிறாராம் மகிந்தர்.

இதுதான் தொடர்ந்து பிரதமமந்திரிக் கதிரையில் அசையாது வீற்றிருக்க அவர் போடும் திட்ட உள்நோக்கத்தின் வெளிப்பாடேயாகும். நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து மீண்டும் நாடாளுமன்றத்திடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைப்பேன் என வாக்குறுதியளித்து 1995இல் ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகாவுக்கு அந்தப்பதவியின் சொகுசு அதனை நீக்கும் மனத்தை இல்லாது கொன்றுவிட்டது.

ஒரு மக்கள் தலைவியாக இருப்பதைவிடவும் அதிகார வெறிகொண்ட ஒரு சர்வாதிகாரியாகவே இருக்க அவர் விரும்புகிறார் என்பதேயுண்மை. அந்த சர்வாதிகாரியை அவர்பதவியில் தக்க வைத்திருப்பதன் மூலம் தனது நாற்காலிக்கு ஆபத்து வராமல் பாதுகாக்கவே மகிந்தர் முயல்கிறார். அதிகார ஆணவம்மிக்க சர்வாதிகாரியின் கீழ் ஒரு கொத்தடிமைச் சிற்றரசாக இருப்பதை பெருமையாகக் கருதுகிறாரா? சிங்கள மக்களின் ரட்சதனான பௌத்த மதபீடாதிபதிகளால் மகுடம் சூட்டப்பட்ட மகிந்த ராஜபக்ஷ சீ வெட்கம்!...

# தர்மராஜ்ஜிய கும்பலுக்குள் குடுமிப்பிடிச் சண்டை



பௌத்த கோட்பாட்டின் அடிப்படையில் தர்மராஜ்ஜியம் அமைக்கப் போவதாக சூளுரைத்தபடி அரசியல் அரங்கினுள் அட்டகாசமாக நுழைந்த அந்த முற்றும் துறந்த(அரசியல் ஆசையைத்தவிர.... பதவிப்பற்றைத்தவிர....) அந்த காவியுடைப்பிக்குகள் அணி தாம் சாமானிய திருவோடு தூக்கிகள் அல்ல என்பதை இப்போது நிரூபிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதாவது தாங்கள் அரசவாழ்வைத் துறந்து புத்தத்தை சரணடைந்த பிக்குகள் அல்ல... அரசாங்கத்தினுள் ஊடுருவ அரசியலை ஆட்டிப்படைக்கும்-அதாவது குழப்பும் சக்திகள் என்பதை அவர்கள் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

முதலில் அந்தப்பெரும் புகழ்பெற்ற பேரினவாதவெறியர் S.L குணசேகராவின் தலைமையில் வில்லும் அம்பும் ஏந்தியபடி (சிகலஉறுமயவின் தேர்தல் சின்னம் வில்லும் அம்பும்தான்) அரசியல் அரங்கில் தனிச்சிங்கள ராஜ்ஜியம் அழைக்கும் பிரகடனத்துடன் நுழைந்த சிகல உறுமயவினர் தாங்கள் மட்டுமே பௌத்த சிங்கள இனத்தின் ரட்சகர்கள் என பிரசாரம் செய்யத் தீவிரம்காட்டியது போது. ஏனைய பேரினவாதிகள் கதிகலங்கிப் போனது உண்மைதான்.

பின் S.L குணசேகராவையே, அவர் பௌத்த சிங்களவரல்ல கிறீஸ்தவ சிங்களவர் எனக்கூறி கட்சியை விட்டு நீக்கிய அந்தத் தாடிக்கார இனவெறியர் திலக் கருணாரத்னாவும், சம்பிக்க ரணவக்கவும் கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தூய பௌத்த சிங்கள வாதம் பேசியதையும் கேட்க முடிந்தது.

பின் அதனை ஜாதிக ஹெல உறுமயவெனப் பெயர்மாற்றி அதனை பௌத்த குருமாருக்கு அரசியல் தானமாக (பல்வேறு உள்நோக்கங்களுடன்) வழங்கி அவர்களை அரசியல் வாதிகளாக்கி நாடாளுமன்றம் அனுப்பிவைத்த போது பிக்குமாரை பகடைக்காய்களாக்கி அரசியல் ஆதாயம்பெற நினைத்த திலக்கருணாரத்னா கும்பல் இப்போது அந்த பிக்குமாராலேயே தூக்கி எறியப்பட்டுள்ளனர்.


முற்றும் துறந்த பிக்குகளை முற்றும் அறிந்த அரசியல்வாதிகளாக்கியதில் சிகல உறுமய என்ற அந்த முன்னாள் கட்சிக்காரர்களுக்கு பெரும்பங்குண்டு. மதவாதத்தை அரசியல் வாதத்திற்குசாதகமாக மாற்றிய சிங்கள இனவாதத் தலைமைகள் இப்போது அதற்கே பலியாகத் தொடங்கிவிட்டனர். திலக் கருணாரத்னா தனது பழைய ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவிவிட்டார். 'சம்பிக்க' தனது பழையஜே.வி.பி தோழர்களுடன் சேர்வது அனுகூலமாக இருக்கும் என யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

தர்மராஜ்ஜியக் கும்பலுக்குள் குடுமிப்பிடிச்சண்டை (அவர்களுக்கு தான் குடுமியில் லையே...) ஆரம்பமாகிவிட்டது.

தேரர்மாரை தேர்வு செய்த மக்கள்தான் பரிதாபத்திற்குரிய அகட்டு அப்பாவிகள்.

இந்தப் பௌத்த பிக்குமார் தனது பெயரில் தர்ம ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவர் என ஞானத்துயிலில் கனவு கண்டுகொண்டிருந்த புத்தபகவான் தான் மீண்டும் அரசனாகி இந்தப் பிக்குமாரை அழித்து பௌத்த தர்மத்தைக் காப்பது குறித்து யோசிக்கத் தொடங்கியிருப்பார் என ஒரு நண்பர் வேடிக்கையாகக் கூறினார்.

# சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் சரியான போட்டிதான்



சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களில்தான் சனாதிபதியுடன் கருத்து மோதல்களை உருவாக்கும் பகிரங்க விவாதங்களில் ஈடுபட விரும்பவில்லையெனவும், முடிந்த அளவு விரைவாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு மட்டுமே தற்போது முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது ரணில் மிகவும் நுட்பமாகத்தனது அரசியல் காய் நகர்த்தலை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார் என்பதை மீண்டும் மிகத்தெளிவாக உணர்த்தும் செய்தியென்றே கூறமுடியும்.

சிலவாரங்களின் முன்னர் இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை அரசு ஆரம்பிப்பதை தாம் முற்றாக முழுமூச்சுடன் எதிர்ப்பதாக ஜே.வி.பி மூர்க்கத்தனமாக அறிவித்தவேளையில், குறிப்பிட்ட புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் புலிகளுடன் பேச அரசு தயார் என்றால் தாம் சனாதிபதிக்கு அது தொடர்பில் முழு ஆதரவையும் வழங்க எப்போதுமே தயாராக இருப்பதாக பகிரங்கமாகவே அறிவித்து சனாதிபதிக்கு அதிச்சி நெருக்கடியொன்றை உருவாக்கியிருந்தார்.

அவரின் அந்த அறிவிப்பும் ஒரு நுட்பமான மூலோபாயத்தின் அடிப்படையிலானதேயாகும். எப்படியாவது தான்விட்ட இடத்தில் இருந்து பேச்சுவார்த்தைகளை சந்திரிகாவை தொடர வைப்பதே அவரின் இலக்கு. அப்படி அதனை அவர்தொடர்ந்தால் தனது ஆட்சிக்கால சமாதான நகர்வுகள் நியாயப்படுத்தப்பட்டு விடுவதுடன், தன்து ஆட்சியை சனாதிபதி கலைத்தமை ஒரு அரசியல் மோசடி அல்லது சதியென்பது நிரூபிக்கப்பட்டுவிடும் என்பதே ரணிலின் கணிப்பு. அவரின் அந்த அறிவிப்பை அடுத்து சர்வதேச சமூகம் எதிர்கட்சியின் ஆதரவுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியபோதே... மாற்று திட்ட யோசனைகள், தேசிய சமாதான ஆலோசனைச்சபை போன்ற புதிய வியூகங்களை சனாதிபதி உருவாக்கும் நிலை ஏற்பட்டது.

ஆனாலும் அந்த ஆலோசனைச் சபையை எதிர்கட்சிகள் அனைத்துமே நிராகரித்தபோது அதுவும் ரணிலுக்கு சாதகமானதாகவே அமைந்துபோயிற்று. சமாதான ஆலோசனைச் சபையை தான் நிராகரித்தமை விளக்கம் அளித்த கடித்திலேயே ரணில் முதற்குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் தொடர்பாக எந்தவொருவிடயம் குறித்தும் தாம் சந்திரிகாவுடன் ஆலோசனை கலக்கத் தயார் எனவும் அவர் அந்தக் கடிதத்தில் மேலும் வலியுறுத்தியுள்ளார். அது மட்டுமல்ல, இக்கட்டத்தில் வேறு எந்த நடவடிக்கைகளும் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமாக எதையும் செய்யப்போவது கிடையாது என்றும் திட்டவட்டமாக தெரிவித்தும் விட்டார். (அப்படிப்போடு அரிவளை எண்டானாம்!) அடுத்து சனாதிபதி என்ன செய்யப்போகிறார் என்பதை ரணில் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்போல் தெரிகிறது.
எப்படியானாலும் சபாஷ் சரியான போட்டி என்றே சொல்லத் தோன்றுகின்றது.

# சமாதானம் இராணுவத்திற்கு ஒவ்வாமை நோயா...?



பிச்சை எடுக்குதாம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்னுதாம் அனுமார்.
இது ஒரு கிழமொழி.

ஏற்கெனவே சிறிலங்காவின் பொருளாதாரம், அது நடாத்திய இரு தசாப்த கால தமிழர்களுக்கு எதிரான போரின் காரணமாக மிகமோசமான வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சூழலில், உலக வங்கி மற்றும் வெளிநாடுகளின் கடனுதவிகள் இன்றி ஆட்சியை தொடரமுடியாது அவலப்பட்டுக்கொண்டிருக்கையில் 2000 கோடி ரூபாயில் 98 யுத்த டாங்கிகள் வாங்கித் தருமாறு இராணுவத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை தற்போதைய சமாதான மற்றும் பொருளாதார நெருக்கடிச் சூழலில் சந்திரிகா நிராகரித்து புறந்தள்ளியிருப்பாரேயானால் அவரை சமாதான முயற்சிகளில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட பொறுப்பான தேசப்பற்றுடைய சனாதிபதிதான் எனப்பாராட்டலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் யுத்த டாங்கிகளுக்கு மட்டும் இந்தளவு நிதியை ஒரேயடியாக ஒதுக்கீடு செய்ய முடியாது என்பதால் இதனை மீளப்பரிசீலனை செய்வதாகக் கூறியுள்ளாராம்.

இராணுவத்திற்கு நவீன ரக ஆயுதங்கள் கொள்வனவு.

கடற்படைக்கு இந்தியா, அமெரிக்கா, சீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து நவீன போர்க் கப்பல்கள் கொள்வனவு நடவடிக்கைகள்....

விமானப் படைக்கு யுத்த விமானங்கள் கொள்வனவு முயற்சிகள்...

இவ்வாறு நாளுக்கு நாள் ஆயுதப் படைகளுக்கு வலுவூட்டி நம்பிக்கையூட்டும் செய்திகளே வெளிவந்து கொண்டிருக்கையில், இந்த 98 யுத்த டாங்கிகளைக் கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை விடுத்திருப்பவர் புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொடதான் ஒவ்வொரு வருடமும் 19 டாங்கிகள் வீதம் அடுத்த ஐந்து வருடத்திற்கு 98 டாங்கிகள் மெத்த அவசரமாக இராணுவத்திற்கு தேவை என அவர் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கை ஒரு செய்தியை சுமந்து நிற்பதாகவே கூறலாம்.

அதாவது இராணுவம் ஒரு யுத்தம் ஒன்றை மீண்டும் எதிர்பார்த்து அதற்கான தயாரிப்பு வேலைகளில் தீவிரம் காட்டத்தொடங்கியிருக்கிறது என்ற செய்தியே அதுவாகும்.

சமாதானம் தொடர்பான முன்னேற்ற முயற்சிகளின் தீவிர ஆர்வத்தை காட்டுவதை விடவும் பாதுகாப்புப் படையை நவீனமயப்படுத்தவும் பலப்படுத்தவும் அரசு காட்டும் அக்கறை அபரிமிதமானது என்பதை அண்மைக்காலச் செய்திகள் உணர்த்திவருகின்றன.

இராணுவம் மற்றும் பொலிஸ் சேவைக்குள் ஜே.வி.பியினர் பெருமளவில் ஊடுருவல் செய்து அரசு தம்மிஷ்டத்துக்கு மாறாக நடப்பின் மற்றொரு கிளர்ச்சியை இராணுவத்திற்குள்ளிருந்தே செய்து ஆட்சியைப் பிடிக்க திட்டமிட்டிருப்பதாகக் கொழும்புச் செய்தியாளர்கள் கூறும் நிலையில், இந்த புதிய இராணுவ ஆயுத தளபாடக் கொள்வனவுகள் ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும் என சிங்கள அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்

செங்குட்டுவன்

# விண்ணப்பங்கள் மூன்று

சு.ஞாலவன்

எனது மூச்சே எனது இருப்பை உறுதிப்படுத்துகின்றது. அதேபோல் எனது இருப்பே எனது மூச்சின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாய் இருக்கின்றது. எனது சுவாசம் இயற்கையானது. உலகின் ஒவ்வொரு ஜீவ ராசிக்கும், அதிலும் குறிப்பாக மனிதனுக்கும் உள்ள இயல்பான உரிமையாக எனது சுவாசமும், சுகவாசத்திற்கான சுதந்திரமும் அமைகிறது. அந்த வகையிலேயே ஈழத்தமிழர்களான நமது இருப்பும், விருப்பும்! ஆனாலும், நம் விடயம் குறித்து பல தரப்பாலும் அண்மைக் காலங்களாகவே வெளியிடப்பட்டுவரும், சுயநலம் நிறைந்த பொறுப்பற்ற, ஏரவஞ்சகமான கருத்துக்கள் பற்றிப்பார்ப்போம்.

மேனாட்டு அரசியல் பிரமுகர்கள் முன்மொழியும் அரைகுறை சமஷ்டித் தீர்வுகளையே மறுதலித்து, 'இலங்கைத்தீவின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வு' எனத் தம்மால் நிர்ப்பந்திக்கப்படுவதை இந்தியத்தலைவர்கள் கோடிட்டுக் காட்டுகின்றனர். சமபலநிலையில் முன்னகர்த்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றம் இடம்பெறாதவாறு 'இராணுவ இனிப்புக்கள்' வழங்கி, சிங்களத்தரப்பை மீண்டும் முருங்கை மரத்தில் இவர்களே ஏற்றிக் கொண்டு, 'இறைமையின் இரட்சகர்'களாகத் தோற்றம் தர எவ்வாறு முனையலாம்? தமிழினத்தின் அடிமட்ட மானிட விழுமியங்களே பாதிக்கப்பட்டதால்தானே, தீர்வை நாடி தீவிரவாதம் பேசினார்கள்! அடுத்தவர்களின் காரணம் கூறப்பட முடியாத தீவின் இறைமை பற்றிய வரட்டுத்தனமான விருப்புக்காக, தமிழர்கள் தங்கள் தலைவிதியை அடகுவைக்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும் ?

கொழும்பின் ஆங்கிலப்பத்திரிகைகளில் பத்திகளில் பற்ற வைக்கும் இந்தியக் கருத்தியலாளர்கள், தமிழ்த்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டவரைவு குறித்து, இந்தியத்தரப்பு விழிப்படைந்து கொள்ளவேண்டும் என்று காரணம்(?) காட்டி நிற்கின்றார்கள். திருகோணமலையில் 99 வருட அடிப்படையிலான இந்திய முதலீடு பற்றி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை - இடைக்காலத்தீர்வு நடைமுறைக்கு வந்தால் புலிகளுடன் பேசவேண்டி வந்துவிடுமாம்! அதைத் தவிர்ப்பதற்காக அன்னார் விழி மூடி (?) இருக்கும் இந்திய அரசைத்தட்டி எழுப்புகிறாராம்! இவர்களெல்லாம் ஏன் 1971 இல் மட்டும் ஒன்றுபட்ட பாகிஸ்தானுக்குள், இன்றைய பங்களாதேசான அன்றைய கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஒரு தீர்வை முன்வைக்கவில்லை? மேலும், அப் பத்தியாளர் சேதுசமுத்திரத்திட்டம் முடுக்கிவிடப்பட்டுள்ள இக் காலகட்டத்தில், இடைக்கால தன்னாட்சி - இடைக்காலத்தீர்வின் அடிப்படையில் கடற்புலிகளை அனுமதித்தால், எதிர்காலத்தில் இந்திய அரசு சிறிலங்காக்கடற் படையை விட தமிழீழக் கடற்படையுடனேயே பேசவேண்டிய சந்தர்ப்பங்கள் நேரும். இவை மட்டுமன்றி தமிழக மீனவருக்கும் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படுமாம்! மக்களைக் காப்பாற்றுவதற்காய் வாசுகி என்னும் கொடிய நாகத்தின் நஞ்சை அள்ளி உண்டு, காத்தவன் பரமன் என்று புராணம் புகழும். ஆனால், மக்களைக் குழப்பிவிட்டுக் கூத்தி லின்பம் காணும் நஞ்சுடைய மாந்தரும் இவ் உலகில் உண்டென்பது வேதனைக்குரியது. இந்திய அரசு கண்காணாத தன் போக்கினால் அனுமதித்து வரும், சிறிலங்காக்கடற்படையின் தமிழக மீனவர் மீதான வன்முறையைவிட புலிகள் எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக இருந்து விடமாட்டார்கள்!

இந்தப் பிரமுகர்கள் ஒவ்வொருவரும் தத்தம் அரசியல், சமூக உயர்ஸ்தானங்களிலிருந்து கோடிட்டுக்காட்டி நிற்கும் இறைமை, ஈழத்தமிழர்களின் காயப்பட்டகடந்தகால அனுபவங்களிலிருந்து அவர்கள் கோரி நிற்கும் அத்தியாவசியங்களைக் கொஞ்சமாவது புரிந்துகொள்ள எப்போதாவது முயற்சித்திருக்கின்றதா? இறைமையின் பங்காளர்கள் தனிமனிதர்களே தவிர, ஆக்கிரமித்து நிற்கும் அரசல்ல! அந்தப் பங்காளர்கள் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையில் இடம்பெயர்ந்த, மானிட அவலம் சொல்லி நிற்கும் அரசியல் செய்தி, இந்த ஒன்பதாவது ஆண்டு நிறைவிலாவது 'தமிழீழத்தின் தவிர்க்க முடியாத அபிலாசை', அடிக்கடி கருத்துக் கூறும் அந்த 'பெரிய ஜன நாயகவாதி'களின் இதயத்தை எட்டாதா? இந்த இடத்திலே சேது சமுத்திரத்திட்டத்தால் இலங்கை எதிர்நோக்கக்கூடிய சூழல் பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக, சிறிலங்கா அரசு விசாரணைக்குழு ஒன்றினை நியமித்திருப்பது பற்றி இந்தியக் கப்பற்றுறை அமைச்சர் திரு.பாலு அவர்கள் வினவப்பட்டபோது தெரிவித்தகருத்துக்கள் ஒப்புநோக்கத்தக்கது: 'எங்கள் நாட்டு எல்லைக்குள் நாங்கள் முடிவுகளை எடுப்பதற்கு அடுத்தவர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கத்தேவையில்லை!'. 'நன்றி! திரு. பாலு அவர்களே! உங்களின் இதே கொள்கையை சகலமட்டங்களிலும் பின்பற்றச்சொல்லி, உங்கள் நாட்டுப்பிரமுகர்களுக்கு தயவுசெய்து இடித்துரையுங்கள்!' (இருந்தும் அன்புடன் உங்களுக்கோர் பிற்குறிப்பு: சூழல் சம்பந்தப்பட்ட விடயங்களில், பிராந்தியக்கருத்துகளுக்கும் மதிக்கப்படுவதுடன், 'கியூற்றோ' ஒப்பந்தத்தினைக்கொஞ்சம் புரட்டிப்பாருங்கள்! மேலும், உங்கள் துறைமுகக் கடல்வளங்கள் பற்றிப் பெரிதாகக்கூறிக் கொண்ட நீங்கள், அங்கெல்லாம் கடல்வாழ் உயிரினங்கள் அருகிவருவ தால்தானே, தென்னிந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை எல்லைக்குள் வந்து வலை வீசுவதாகச் சொல்கிறார்கள், என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டும்.) கொழும்பின் இந்தியப்பத்தியாளர் ஹரிகரன் அவர்களே! எழுதுவதற்கு உங்கள் பேனாவில் மை மட்டும் இருந்தால் போதாது' மனதில் கொஞ்சமாவது மனச்சாட்சியும் வேணும், சரி! அதுவும் இல்லையென்றால், தரமான நியாயக் கற்பிதங்களையாவது கொண்டிருக்கவேண்டும்!

அடுத்தவர் தன்னைப்போல்(!), தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிவரும் ஏனைய தரப்புக்களையும், தேசிய நீரோட்டத்தில் குதித்து விடும்படி அடிக்கடி அறைகூவல் விடுக்கின்றார் திருவாளர் இந்துகலாச்சாரம். இவர் எதற்காக, எப்படிக் குதித்தார் என்பது சகலருக்கும் தெரிந்தவிடயம். தேசிய நீரோட்டத்தில் மட்டுமல்ல, சுயலாபம் கருதி எந்தச்சாக்கடைக்குள்ளும் குதிக்கத்தயாராயுள்ள இவரது சகிப்புத்தன்மையும், அரசியல்(?) சாகசங்களும் வியக்கத்தக்கவை. ஆனாலும், அடிக்கடி இவர் குறிப்பிடும் தேசிய நீரோட்டம் ஒன்று எங்கேயாவது உண்மையிலேயே ஓடுகின்றதா? பல்லினத் தேசியப்பண்பு கொண்ட இலங்கைத்தீவிலே அனைவரையும் அடக்கிவிடத்தலைப்பட்டு நிற்கும் பேரினவாதக்கட்சிகளுக்குள் ஓற்றைக் கட்சி உருவாக்கிய கூட்டணியிலேயே, ஒருவரையொருவர் கசக்கிப்பிழிந்து கொண்டிருக்க, எங்கே ஓடுகிறது அந்தப் பல்லினத் தேசிய நீரோட்டம்? கொள்கை இணக்கத்தால் உருவாகவேண்டிய கூட்டணி, இங்கேயோ கொடுக்கக்கூடிய மற்றும் பெற்றுக்கொள்ளக் கூடிய பதவி பந்தாக்களை அடிப்படையாகக் கொண்ட சரிக்கட்டலாகவே வீக்கம் பெறுகிறது. இருந்தும் இந்தச் சரிக்கட்டல்களையெல்லாம் ஒருவாறு ஆசுவாசப்படுத்திக்கட்சிக்குள் இறுக்கி வைத்திருப்பதற்கு, அனைவரையும் பிரதிபலன் எதிர்பார்க்காமலேயே ஒன்றிணைக்கும் தமிழினவிரோத மனப்பான்மை ஒன்றே இவர்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது. இப்படியெல்லாம் யதார்த்தம் இருக்க, தனது சாக்கடைவாசத்திற்கான விசுவாசத்திற்குக் கிடைக்கும் வெகுமதி முத்துக்களை, தேசிய நீரோட்டத்தில் கிடைத்ததாகச் சாதிக்கப்பார்க்கும் இவரா ,தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தைப் பற்றிப்போதிக்கின்றார்? கொள்கைப்பிடிப்பு இல்லாமல் கண்மூடித்தனமாகப் பின்னணியிலேயே தொற்றிவாழும் அமைச்சரே! தமிழர் என்ற தேசிய இனத்தின் குடிமகனாகிய உங்களை, உங்களுடைய இன உரிமைகளுடன் நீங்களாகவே ஏற்றுக்கொள்ளும் சிங்களப் பெருங்கட்சி ஏதாவது ஒன்று இருக்கின்றதா?? சரி அதைத்தான் விட்டுத்தள்ளும், உம்மால் ஆகாத காரியம். எத்தனையோ பழைமை வாய்ந்த கோவில்கள் ராணுவத்தின் ஆக்கிரமிப்பினால், உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் பாதுகாப்பின்றி மக்களைக்காணாத ,இருப்பிடங்களாக வெறிச்சோடிக்கிடக்கின்றனவே! அதற்கொரு வழிசெய்யும், பார்ப்போம்! மற்றவர்களுக்கு வெளிச்சம்போடமுதல், உங்களுடைய இருட்டை உணர்ந்துகொள்ளுங்கள்!

'இன்னும் சில சர்வதேசங்கள் புதிய நாடுகள் உருவாவதையே ஏதோ கெட்ட சகுனமாகப் பார்க்கின்றார்கள்' என்று சொல்லலாமா? சே! அப்படியில்லை ஒருசில நாடுகள் உருவாகுவதற்காக ஒற்றைக்காலில் நின்றவர்களும் அவர்கள்தானே? அப்படியானால் வாக்கியத்தைப் பின்வருமாறு கொஞ்சம் திருத்திக்கொள்வோம்: தங்களுக்குப் பிடித்த நேரத்தில் பத்துவீடுகளைக் கொண்ட குடியிருப்பிற்கே வலுக்கட்டாயமாக தனிநாடாகப்பிரிந்து போகும் உரிமையைத் திணித்து ஜனநாயகம் பேசுபவர்கள், லட்சம் மக்களை ஆக்கிரமிப்புக்குப் பலிகொடுத்து விட்டு, விடுதலையைத் தேர்ந்தெடுப்பவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை! ஏன்?? 1842 ஆம் ஆண்டிலே ஓப்பிய யுத்தத்திலே பிரட்டனிடம் சீனா ஹொங்கொங்கை இழந்திருந்தது. பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டின்படி 1997 இல் மீண்டும் சீனாவுடன் அது சேர்த்துக்கொள்ளப்படும் என்பது நடைமுறைக்கு வந்தபோது, யாழ்குடாநாட்டளவு பிரதேசத்திற்கான தனித்துவஉரிமைகளுக்காய் மேற்குதேசம் முழுவதுமே குரல் கொடுத்ததே! கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு மேலாக யூகோஸ்லாவியா என்ற பெயரிலே இணைந்திருந்த குரோசியாவும்,ஸ்லோவேனியாவும் (தமிழீழத்தின் பரப்பளவிலானது) யூன் 1991 இலே தமது சுதந்திரப்பிரகடனத்தை மேற்கொண்டபோது, முண்டியடித்துக்கொண்டு போய் முன்வரிசையில் இருந்துகொண்டு அங்கீகரித்தவர்களே, எங்கள் தரப்பின் ஆகக்குறைந்த பட்ச அபிலாசையான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை-இடைக்காலத்தீர்வுத்திட்டத்தைப் பற்றி சிறிலங்காத்தரப்புக்கு நெருக்குவாரங்களைக் கொடுக்குமாறு தமிழ்மக்கள் வேண்டுகிறார்கள். மாங்கனித்தீவு அழகுதான்! நாம் ரசித்திருந்த காலமுண்டு. ஆனாலும் அக்கனி தமக்கே உரித்தென எம்மைப் புறந்தள்ள அடுத்த தரப்பு முயற்சித்து வருவதால், வெறும் அழகியலுக்காக நாம் பட்டினி கிடக்கத்தயாராயில்லை! கனியில் எங்கள் பங்கை எடுக்க விடு! விடாவிட்டால் நாமே எடுத்துக் கொள்வோம்!!




மேனாட்டு அரசியல் பிரமுகர்கள் முன்மொழியும் அரைகுறை சமஷ்டித் தீர்வுகளையே மறுதலித்து, 'இலங்கைத்தீவின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வு' எனத் தம்மால் நிர்ப்பந்திக்கப்படுவதை இந்தியத் தலைவர்கள் கோடிட்டுக் காட்டுகின்றனர். சமபலநிலையில் முன்னகர்த்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றம் இடம்பெறாதவாறு 'இராணுவ இனிப்புக்கள்' வழங்கி, சிங்களத் தரப்பை மீண்டும் முருங்கை மரத்தில் இவர்களே ஏற்றிக்கொண்டு, 'இறைமையின் இரட்சகர்'களாகத் தோற்றம் தர எவ்வாறு முனையலாம்? தமிழினத்தின் அடிமட்ட மானிட விழுமியங்களே பாதிக்கப்பட்டதால் தானே, தீர்வை நாடி தீவிரவாதம் பேசினார்கள்! அடுத்தவர்களின் காரணம் கூறப்பட முடியாத தீவின் இறைமை பற்றிய வரட்டுத்தனமான விருப்புக்காக, தமிழர்கள் தங்கள் தலைவிதியை அடகுவைக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் ?

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 15. 10. 2004
மின் அஞ்சல் : weekly @ eezhanatham.com

## மக்களின் கருத்து..!

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு உருப்படியாக எதையாவது செய்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் என்பதிலோ, இலங்கையில் நிரந்தர தீர்வைக்காணக்கூடிய விசுவாசமான உழைப்பு இந்த அரசிடம் இருக்கிறது என்பதிலோ தமிழ் மக்களுக்கு இன்று எள்ளளவும் நம்பிக்கையில்லை.

இந்த அரசு முன்னெடுக்கும் ஒவ்வொருவிடயத்தையும். தமிழ்மக்கள் சந்தேகங்கொண்டு பார்க்கும் அளவுக்குத்தான் நிலைமையை சனாதிபதி சந்திரிகாவின் அரசு கொண்டுசெல்கிறது.

அத்தோடு, இன்று தமிழ் மக்கள் மனரீதியாக சோர்வடைந்தவர்களாகவும், சமாதான முயற்சியில் நம்பிக்கையற்றவர்களாகவுமே உள்ளனர்.

இதனை இந்தவாரம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வன்னிக்கு வந்து சென்ற மக்களை நாம் சந்தித்து உரையாடியபோது அவர்களின் கருத்துக்கள் பிரதிபலித்தன.

தமிழ்மக்கள் மட்டுமன்றி, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள்கூட இந்த அரசு பேச்சு என்ற போர்வையில் ஒரு போருக்கான பாதையைத்தான் தேடுகிறது என சுட்டிக்காட்டியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நாம் சந்தித்த மக்களில் அநேகமானோர் இந்தப்பிரச்சினையை இன்னுமொரு போரில்தான் கொண்டுசென்று விடப்போகிறது என நம்புகின்றனர்.

இதற்கு காரணம்இந்த அரசு பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பதற்கான காரணத்தைத்தான் தேடுகிறது என நம்புவதோடு, தங்களின் எதிர்பார்ப்பெல்லாம் இந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு ஒன்று கிடைக்கவேண்டும் என்பதே என ஏங்கி நின்றனர்.

ஆனால் தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புலிகளால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவின் அடிப்படையில்தான் பேசவேண்டும் எனவும் அரசு முன்வைக்கும் திட்டவரைவு தமிழ்மக்களின் அபிலாசையை நிராகரித்ததாகத்தான் இருக்கும் எனவும் கூறுகின்றனர்.

மக்கள் இவ்வாறு எதிர்வு கூறுவதிலும், நம்பிக்கையற்று இருப்பதிலும் உண்மையிருக்கவே செய்கிறது.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை நிலைமையை மதிப்பீடு செய்யும் எவரும் இத்தகைய முடிவுக்கே வருவார்கள்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை மாற்றங்கள் வந்தன நாடாளுமன்ற தேர்தல்கள் வந்தன. ஆனால் சமாதான முயற்சி தொடர்பான எந்தத்தீர்வு மட்டும் வரவில்லை.

ஆகவே மக்களின் இந்த நம்பிக்கையீனங்கள் மனரீதியில் ஏற்பட்டிருக்கும் உளைச்சல்கள் நீடிக்குமிடத்து அவர்களின் எதிர்வு கூறல்களைப்போல இன்னுமொரு போருக்கான வாய்ப்பே அதிகம் இருக்கும்.

இந்நிலைமையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதன் மூலமே இந்த நாடு அமைதியாக வாழக்கூடியதாக இருக்கும்.

இதற்கு அரசியல் ரீதியாக தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்ட மக்கள் என்றவகையில் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிப்பது என்பது நாட்டின் எல்லாஇனமக்களும் விரும்புகிற அமைதியையும் பொருளாதார மீட்சியையும் பெற்றுக்கொள்ள விரும்பும் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிப்பதாகவே இருக்கும்.

# கிழக்கில் வானொலி நிலையம் முரண்பாட்டை உருவாக்கவா...?

***கிழக்கிற்கென தனியான ஒலிபரப்பை ஆரம்பிப்பதன் மூலம் வடக்கில் இருந்து அதனைத் துண்டாடுவதற்கான வேலையையே செய்யப்போகின்றது. அதன் ஊடாக தமிழ்த் தேசியத்துக்கு முரணான விதத்தில் பிரசாரத்தை மேற்கொள்ளவும் கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவும் நடவடிக்கை எடுக்கின்றது.***

***இது தொடர்பில் அதிகம் கிழக்கு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். கிழக்கு மக்கள் மட்டுமல்லாது தாயகத்திலும் சிறிலங்காவிலும் வாழும் தமிழர்களும் கூட எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் மனவுறுதியுடனும் இருக்க வேண்டிய தருணம் இதுவாகும். தகவல் தொடர்பு சாதனங்கள் என்ற போர்வையில் எம்மை யதார்த்தத்தில் இருந்து தாக்கியெறியும் காரியங்கள் நிகழுகின்ற காலமாக இது உள்ளது.***

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பதவியேற்று பத்து ஆண்டுகள் பூர்த்தியடைவதை கொண்டாட பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தென்னிலங்கையில் தடல்புடலான ஆயத்தங்களை மேற்கொள்கிறது. வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் படையினரின் பிடியில் உள்ள பகுதிகளிலும அதனைக்கொண்டாட சுதந்திரக்கட்சி யோசித்திருக்கின்றது.

அதன் ஒரு அங்கமாக கிழக்கு வாழ்மக்களுக்கு ஒரு பிராந்திய வானொலி நிலையத்தை சனாதிபதி அன்பளிப்புச் செய்யப்போகின்றார். அதற்கான இடத்தை தெரிவுசெய்யவென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் அக்கரைப்பற்று, கல்முனை, ஒலுவில், சம்மாந்துறை ஆகிய இடங்களைப்பார்வையிட்டுள்ளனர்.

இந்த முயற்சியைப் பற்றி தமிழர்கள் என்ன நினைகின்றார்கள்? கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்கள் என்ன கருதுகின்றார்கள்? இதுபெரும்பாலும் தமிழ்மொழிமூலமான ஒலிபரப்பாகவே அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தேசிய சேவை என்றபெயரில் ஒலிபரபப்படும் வானொலியை வடக்கு-கிழக்குக்கு கேட்கக்கூடியளவுக்கு செய்ய எந்த அரசுகளும் முயற்சிக்கவில்லை. இலங்கையில் உள்ள தமிழ் ஒலிபரப்புக்களில் ஒப்பீட்டளவில் கலை, இலக்கியம், சமயம்,சமூகம் என்று காத்திரமானமுறையில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பியது தேசிய சேவை என்றுகூறப்பட்டது. ஆனால், அதனை தென்னிலங்கைக்குள் மட்டும் முடக்கிவிட்டு வடக்குக்கு என்று வெவ்வேறு ஒலிபரப்புக்களை காலத்துக்குக்காலம் நிகழ்த்தியது.

தொண்ணூறுகளின் முற்கூறில் மக்கள் குரல் என்ற நிகழ்ச்சியை ஒலிபரப்பியது. தமிழ் ஒட்டுக்குழு ஒன்றின் மூலமாக வன்னி சேவை என்ற ஒன்றை சிறிது காலமும் பின் வானம்பாடி என்ற ஒன்றையும் வானொலிகள் என்று வடபகுதி மக்களுக்குக்காட்டியது. இப்போதுவரை குடாநாட்டை மையமாகக்கொண்டு யாழ்.FM என்ற வானொலியை நடத்திவருகின்றது.

வடபகுதித்தமிழர்கள் அநேகர் இவை எல்லாவற்றையும் கேட்க நேர்ந்தது: நேர்கிறது. அவற்றால் ஏற்பட்ட பயன் எத்தகையது என்பதும் அவற்றின் உள்நோக்கங்கள் என்ன என்பதும் மிகத்தெளிவாகத்தெரிந்தவையே.

தமிழ் மக்களை விடுதலை உணர்வில் இருந்தும் அவர்களுக்கு உள்ள நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இருந்தும் அந்நியப்படுத்துவதே அவற்றின் இலக்குகளாக இருந்தன. இலங்கை முழுவதும் ஒலிபரப்பாகும் One Srilanka இலக்கை உடைய தனியார் வானொலியும் அது போன்ற பிறவும் இவற்றிற்கு எந்த வகையிலும் குறைவுபடாத சேவையைத்தான் செய்கின்றன.

இந்தப் பின்னணியில் கிழக்கு மாகாணத்துக்கு சந்திரிகா பரிசளிக்கப்போகும் வானொலியை நேர்மையான, இதயசுத்தியான பரிசு என்று கருதமுடியாது. சமாதான முன்னெடுப்புக்களை இப்போது இடறிக்கொண்டிருக்கும் சில சிக்கலான விடயங்களும், கிழக்கின் இப்போதைய நிலைவரமும் கருத்தில் எடுக்கப்பட்டால், இந்த வானொலியின் பயங்கரத்தை உணரமுடியும்.

கிழக்கில் கருணாவின் பிரச்சினை ஆரம்பித்ததோடு ஐரோப்பாவில் இருந்து நடத்தப்படும் தமிழ் விரோத வானொலியை இலங்கை முழுவதற்கும் கொண்டுவந்தது. அது தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராக செயற்படுவதே இங்கே ஒலிபரப்ப ஒரே காரணமாக இருந்தது. அது தொடர்பாக பலதரப்பினராலும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கமுடியாமல் திணறிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது வானொலியில் ஒலிபரப்புவதை நிறுத்தியது.

இப்போது கிழக்கிற்கென தனியான ஒலிபரப்பை ஆரம்பிப்பதன் மூலம் வடக்கில் இருந்து அதனைத்துண்டாடுவதற்கான சேவையையே செய்யப்போகின்றது. அதன் ஊடாகத்தமிழ்த்தேசியத்துக்கு முரணான விதத்தில் பிரசாரத்தை மேற்கொள்ளவும் கிழக்குவாழ் தமிழ், முஸ்லிம் மக்களைக்குழப்பத்தில் ஆழ்த்தவும் நடவடிக்கை எடுக்கின்றது.

இதுதொடர்பில் அதிகம் கிழக்கு மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். கிழக்கு மக்கள் மட்டுமல்லாது தாயகத்திலும் சிறிலங்காவிலும் வாழும்தமிழர்களும்கூட எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் மனவுறுதியுடனும் இருக்கவேண்டிய தருணம் இதுவாகும். தகவல்தொடர்பு சாதனங்கள் என்ற போர்வையில் எம்மை யதார்த்தத்தில் இருந்து தூக்கியெறியும் காரியங்கள் நிகழுகின்ற காலமாக இது உள்ளது.

சமாதான காலத்தில் திறக்கப்பட்ட பாதைகளோடு இவற்றுக்கும் வழிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. வேகமாக வந்து உயிர்போகுமாறு மோதிவிட்டுப்போகும் வாகனங்கள் போல இவையும் வந்து தாக்குகின்றன.

மிக மலினமான பொழுதுபோக்குஅம்சங்களை உடைய தென்னிந்திய சினிமாப் பாடல்களையே அதிக உள்ளடக்கமாகவும் கொண்ட இலத்திர னியல் ஊடகங்கள் தமிழர்களுக்காக அதிகரித்துவிட்டன. இவையெல்லாம் தமிழர்களை வீடுகளுக்குளளேயே அடைத்துப் போட்டிருக்கின்றன.

இவை யதார்த்தத்தில் இருந்து தூரவிலக்கி நம்மை வைத்திருக்க, இன்னும் ஒரு பகுதி இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மிகச்சுலபமாக-அபத்தமானமுறையில் குழப்பத்தில் ஆழ்த்த முயல்கின்றன.தவறான, வேண்டும் என்று இட்டுக்கட்டப்பட்ட செய்திகளோடும் ஆய்வுகளோடும் யதார்த்தத்தில் இருந்து தூர நிற்பவர்களை நாடிவருகின்றன. அதன்மூலம் தமிழ்த் தேசிய உணர்வில் இருந்தும் அதற்காக நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்களில் இருந்தும் அந்நியமாக்க முயல்வதை உணரவேண்டும்.

**ஞாபகன்**

**சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கென்ற பெயரில் ஒரு ஆலோசனைச் சபையையும், இன்னொரு புறம் புலிகளால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கானதிட்ட ஆலோசனை வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்குப் புறம்பாக இன்னுமொரு மாற்று ஆலோசனையை சனாதிபதி சந்திரிகா சமர்ப்பிக்கவுள்ளதாக வெளியாகிய செய்திகளைத் தொடர்ந்து இது தொடர்பாக பரவலாக மக்களின் கருத்துக்களும் பிரதிபலிப்புகளும் எவ்வாறு இருக்கிறதென அறியும் முகமாக நாம் மக்களை சந்தித்த போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்.**

# நாங்கள் எதிர்பார்ப்பது நல்லதொரு தீர்வைத்தான்



R.தேவராசா யாழ். அரியாலை.

"எனக்குத் தம்பி நீங்கள் கேட்ட இந்த ஆலோசனைச்சபை அமைச்சதே தெரியாது. சமீபகாலமாக நான் நாட்டு நிலைமை பற்றிப் பேப்பரில வாறநியூசையோ, ரேடியோ நியூசையோ கேட்கிறதில்லை. ஏன் நான் பேப்பர் செய்தியெல்லாம் வாசிக்கிறதில்லையெண்டா, அரசியலில இருக்கிற ஆக்கள் நிமிஷத்துக்கு ஒவ்வொரு வார்த்தைகள். தாங்கள் நினைச்சமாதிரி எங்கட எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகத் தங்கட தங்கடபாட்டில கதைக்கிறது. ஜே.வி.பி ஒரு கதை. சந்திரிகா ஒரு கதை. பிரதமமந்திரி ஒரு கதை. எல்லோருமே தங்கட வசதிக்கேற்ற மாதிரி மூளைக்கேற்ற மாதிரி ஒவ்வொரு கதையும், வேலையும் செய்து கொண்டிருக்கினம். இதைப்பேப்பரில வாசிச்சும், ரேடியோவில கேட்டும் எங்களுக்கு விசராக்குது. இதால நான் இப்பரெண்டு மாதமாப்பேப்பர் பாக்கிறதை விட்டிட்டன். எங்கட எதிர்பார்ப்பு என்னெண்டா விரைவில இந்தப்பிரச்சினை ஒரு நல்லதீர்வு அமையவேணும் என்பது தான்."

# புலிகளின் திட்டத்தைத்தான் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்

ஜெகன் கிளிநொச்சி.

" சந்திரிகா அரசு எங்களுக்கு எந்தவொரு நல்ல காரியத்தையும் செய்யாது அது இப்ப முன்வைக்கிற அதிகாரசபையில என்ன இருக்கப்போகுது. எதுவும் இருக்காது. புலிகள் சமர்ப்பிச்சிருக்கிற இடைக்கால சபையைத்தான் நாங்களும் அதாவது தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளுறம் அதைவிடப்பேரினவாதசக்திகள் கொண்டுவாறதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் ஏன் போராடிறம். வாழ்க்கைக் காகவும், நாட்டுக்காகவும் போராடிறம். இதைப்பற்றி அரசாங்கம் கவனத்தில கொண்டு நடவடிக்கை எடுக்கவேணும். அவையள் கொழும்பில இருந்து கொண்டு நான் அதைச் செய்யப்போறன் இதைச்செய்யப்போறன் எண்டு சொல்லிக் கொண்டு இருக்கிறதால பிரயோசனம் இல்லை. மக்களிண்ட மனதில என்ன இருக்கோ. அதற்கேற்ப திட்டங்களை நடைமுறைப்படுத்திறதுதான் சரி. அதை விட்டிட்டு தமிழ் மக்கள் என்ன சொன்னாலும் சரி, நாங்கள் இப்படித்தான் செய்வம் எண்டு அரசாங்கம் நிண்டா கடைசியாத் திரும்பவும் சண்டைதான் வரும்."

# சந்திரிகாவின் திட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகள் இருக்காது

J.V. ரஞ்சித்குமார் மாணவன் யாழ்ப் பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.



" சமாதான முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுக்க வேணுமெண்டா அரசியல் ரீதியா பார்க்கேக்க எல்லாச் சமூகத்தின்ர சம்மதமும், அனுசரணையும் தேவை. எதிர்க்கட்சிகள் எண்டால் என்ன ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் எண்டால் என்ன வெளிநாட்டு சமாதான விரும்பிகள் ராஜதந்திர சமூகங்கள் எல்லோரையும் இணைச்சு இந்த ஆலோசனைச்சபையை உருவாக்கியிருந்தால் அது சமாதான முயற்சிக்கு உதவியிருக்கும். இந்தச்சபையும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வாய்ப்பாய் இருந்திருக்கும். தனியொரு பட்சமாக சந்திரிகாவால் தனக்குத் தலையாட்டுற ஒரு கூட்டத்தை வைச்சுக்கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆலோசனைச்சபை மற்றவையளின்ற ஆதரவு இல்லாதபடியினால் தொடர்ந்து முன்னேற்றப்பாதையில் செல்லும் என்பது ஒரு கேள்விக்குறிதான். அதற்குச் சான்று கடந்த நாட்களின் அரசியல் நகர்வுகள்.

ஏற்கனவே சந்திரிகா இதேமாதிரி ஒரு திட்டத்தை முன்னரும் கொண்டுவந்தவா அதில எந்தவிதமான தீர்வுகள் இல்லாததால அது நிராகரிக்கப்பட்டது. அப்படியொரு சூழ்நிலை இருக்கின்ற போது இதன் காரணமாக விடுதலைப்புலிகள் தாங்கள் ஒரு இடைக்காலத் திட்டவரைவைச் சமர்ப்பித்தார்கள். அது மறுக்கப்பட்டு மீண்டும் தாங்களாகஒரு தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வரும் போது ஏற்கனவே மறுத்த விடயங்களை மீண்டும் தருவார்களா என்பது கேள்விக்குறியே. அதாவது சந்திரிகா அரசினால் தயாரிக்கப்படும் தீர்வுத்திட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிராகரிக்கப்பட்டே இருக்கும்.

# இந்த பிரச்சினையை தீர்க்க சந்திரிகா அரசினால் முடியாது

டயஸ் அம்மன்பிட்டிய கேகாலை. (இருபான்மை இனத்தைச் சேர்ந்தவர்)



சந்திரிகாவினால் இனப்பிரச்சினையைத்தீர்க்க முடியாது. ஏனெண்டா முதலில நாங்கள் இப்படிச் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியாது போய் சண்டை தொடங்கினது. பிறகு ஐ.தே.க. வந்து சமாதான முயற்சியை முன்னெடுத்தது. இதைச் சந்திரிகா அரசாங்கம் நிராகரிச்சிது. திரும்பவும் முதலில் இருந்து பேசவேண்டும் என்று கூறுகின்றது. எனவே இதுசரிவரும் என்று சொல்லமுடியாது. ஆனால் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே எங்கள்விருப்பம். நாங்கள் இப்பொழுது (நாகதீபம்) (நயினாதீவு) போய் வருகின்றோம். மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டு சில வீடுகளில் எங்கட இராணுவம் இருக்கின்றதையும் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது.இதை எங்கட ஊரிலயாராவது செய்தால் நாங்கள் விடுவோமா? எனவே இந்தப்பிரச்சினையைத் தீர்க்கச் சந்திரிகா அரசினால் முடியாது.இப்ப எங்களின்ர இடத்தில பொருட்களின் விலை அதிகம். சாப்பாட்டுக் கஷ்டம். வேலைக்குக் கஷ்டம். இப்படித்தான் எங்களின் நிலையும் இருக்கின்றது.

# சனாதிபதி சந்திரிகாவில் நம்பிக்கையில்லை

ஜெகதீசன் - யூனியன் கல்லூரி யாழ்ப்பாணம்.



எங்களுக்குச் சந்திரிகாவில நம்பிக்கையே இல்லை. இந்தப்பிரச்சினை இழுபட்டுக் கொண்டு போகுது. எங்களுக்குச் சமாதானம் தான் வேணும். சந்திரிகா ஒவ்வொரு நேரத்திற்கும் வித்தியாசமா மாறிக்கொண்டிருக்கிறா. அவா சமாதானத்தை ஏற்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்கிற நோக்கத்தில இல்லை.

(இரண்டு கண்களும் தெரியாத தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்று முறை முதலிடம் பெற்ற குலேந்திரன் ஜெகதீசன் மாணவன் யாழ்.யூனியன் கல்லூரி) எனக்குச் சந்திரிகாவில நம்பிக்கை இல்லை. திரும்பவும் சண்டையைத்தான் சந்திரிகா கொண்டுவருவா.

# பிரச்சினை இழுபட்டுப் போய் சண்டை தான் வரும் போல...

திருகோணமலை நவநீதராசா.




"நான் நினைக்கவில்லை சந்திரிகா பிரச்சினையைத் தீர்ப்பாரெண்டு. ஏனெண்டு சொன்னா பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கிற ஒரு சந்தர்ப்பத்தைத்தான் உருவாக்கிக் கொண்டுபோறார். இது முதல் தடவை இல்லை. 1956 ஆம்ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு தமிழ்த்தலைவர்களுடனும் ஒவ்வொரு ஒப்பந்தம் செய்து அது பின்னர் கிழித்தெறியப்பட்டே வந்துள்ளது. அதேமாதிரி இந்த ஒப்பந்தமும் சிங்களத்தலைவர்களைப் பொறுத்தவரை சர்வசாதாரணம். இண் டைக்கு நாங்கள் திருகோணமலையில் இருந்து வாறம் அங்கு இப்ப இருக்கிற நிலைவரம் சரியில்லை. இஞ்சயிருந்து போனாலும் நாலாங்கட்டைக்கு அங்கால போகேலாத நிலைமை தான் இருக்கு. எனவே சந்திரிகா அரசாங்கம் ஒரு சமாதான இழுத்தடிப்புத்தான் செய்து கொண்டு வருகுது. அந்த வகையில் வந்ததுதான் தேசிய ஆலோசனைச்சபை இப்படியிருக்க எதுவும் சரிப்பட்டுவராது. இப்படியே காலம் கடந்து இழுபடும். பிறகு வேறொரு சபை உருவாக்கப்படும். அது இழுபட வெளிக்கிடத் தேர்தல்வரும். இப்படியே பிரச்சினை இழுபட்டுப்போய் கடைசியாக சண்டையிலதான் முடியும்.

அ.அருள்

# அல்சதாரின் ஆயுதக்கையளிப்பு ஈராக் கிளர்ச்சிக்கு முடிவல்ல...!

இனங்கள் மீதான அடக்கு முறைகளும் ஆக்கிரமிப்புகளும் ஆயுதப் போராட்டங்களையும் யதார்த்தமானவையாக ஆக்கின. பிராந்திய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் ஆயுதப் போராட்டங்களுக்கு அரசுகளும், சில அமைப்புகளும் காரணங்களாக அமைந்திருந்தன. பகை அரசுகளையும் அவற்றின்



கொள்கைகளையும் முறியடிப்பதற்கு ஆயுதப் போர்களை ஊக்குவித்தன. இதனால் உள்நாட்டு அரசியல் குழம்பியதுடன் சில இனப் பிரிவுகள் ஏனைய அரசுகளின் நலன்களுக்காகவும் திட்டமிடலுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் சில இனப்பிரிவுகளின் விடுதலைப் போராட்டத்தை நிகழ்த்திய அமைப்புக்களை அயல் நாடுகளோ, உலக நாடுகளோ, விலைக்கு வாங்கமுடியாதநிலை ஏற்பட்டது. இந்தவகையில் ஈராக்கில் நிகழ்ந்த அல்சதாரின் படைகளும் இந்திய கிளர்ச்சியாளர்களான நல்ல சலைட்டுக்களும், அமெரிக்க ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும், இந்திய அரசுக்கும் ஆயுதங்களை கையளித்த நிகழ்வினை பரிசீலிப்போம்.

முதலில் அல்சதாரின் படைகளின் நடவடிக்கையை பரிசீலிப்போம். ஷியா முஸ்லிம் மதப் பிரிவினரின் வலுவான படையாக இருந்த அல்சதாரின் கிளர்ச்சியாளர்கள் கடந்த பல மாதங்களாக அமெரிக்க ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தன. அவற்றின் போர் நடவடிக்கையால் ஈராக்கின் பல நகரங்கள் செயல் இழந்தன. அமெரிக்கத் துருப்புக்கள் கொல்லப்பட்ட அதே வேளை அமெரிக்க ஆட்சியாளரின் ஈராக் பற்றிய திட்டங்கள் செயலிழந்தன. அமெரிக்காவின் ஈராக்கிய ஆட்சி மட்டுமல்ல அமெரிக்காவின் ஆட்சி பற்றியும் பாரியளவில் விமர்சிக்கப்பட்டது. இதனால் சனாதிபதி புஷ்சின் ஈராக் பற்றிய கொள்கையே தவறானதென எதிர்க் கட்சி சனாதிபதி வேட்பாளர் தெளிவாக பகிரங்க விவாதத்தில் நிறுவினார். இத்தகைய நெருக்கடிக்கு அமெரிக்கப் பாதுகாப்புத்துறையும் இராணுவமும் மேற்கொண்ட மாற்று உபாயம் வழமையான தொன்றாகும். உலகில் உள்ள ஆக்கிரமிப்பு இராணுவம் அனைத்துமே நெருக்கடி தமக்கு ஏற்படும்போது பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குதலை நிகழ்த்தும். இவ்வாறு அமெரிக்க இராணுவம் விமானத் தாக்குதல்களையும், எறிகணை தாக்குதல்களையும் நிகழ்த்தியது. நூற்றுக்கணக்கில் ஈராக்கிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சிறுவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி அமெரிக்க துருப்புக்கள் கொன்றுவிட்டு அவர்கள் கிளர்ச்சியாளர்கள் என கூறியது. இத்தகைய உரிமை மீறல்களுக்கும், படுகொலைகளுக்கும் அமெரிக்காவே பொறுப்பாகும். ஆனாலும் கிளர்ச்சிகளும் தற்கொலைத் தாக்குதலும் நிறுத்தப்படவில்லை. இதனால் கிளர்ச்சியாளரின் தாக்குதலை நிறுத்த ஈராக்கிய இடைக்கால அரசு முனைப்பாக செயற்பட்டது. இடைக்கால அரசுடன் அல்சதாரின் கிளர்ச்சியாளர்கள் பேச்சுக்களில் ஈடுபட்டனர்! இறுதியில் ஆயுதங்களை ஒப்படைப்பதாக முடிவானது.

கிளர்ச்சியாளர்களின் ஆயுத ஒப்படைப்புக்கு பதிலாக சிறையில் இருக்கும் கிளர்ச்சியாளர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுடன் ஒப்படைக்கும் ஆயுதங்களுக்கு அமெரிக்க டொலரில் பணம் வழங்கவேண்டும் எனவும் சதாரின் கிளர்ச்சிப் படைகள் கோரியிருந்தன. மேலும் ஈராக்கிய புனித நகரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு (சதார்) 500 மில்லியன் டொலர் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளது. இதனை இடைக்கால ஈராக்கிய அரசு ஏற்றுக்கொண்டதுடன் அதற்கான நடவடிக்கையும் நடைபெற்றுள்ளது. பெருமளவான இடைத்தர ஆயுதங்களை வெடிப்பொருட்களை கிளர்ச்சியாளர்கள் கையளித்துள்ளனர். அத்தகைய ஆயுதங்களில் நீண்ட பிரதேசங்களை நோக்கி தாக்கக்கூடிய ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அநேகமானவை இயங்குதிறன் அற்றவை போன்றே காணப்படுகின்றன. ஆயுதங்கள் கையளிப்பால் பெறப்பட்ட பணத்தை கொண்டு நவீன ஆயுதங்களை கிளர்ச்சியாளர்கள் கொள்வனவு செய்யலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏறக்குறைய அதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதென மேற்குலக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சதார் இவ்வகையான ஆயுதக்கையளிப்பினூடாக அதிகமானவற்றை சாதித்ததுடன் அமெரிக்கப் படையோ ஈராக்கிய இடைக்கால அரசோ பெரியளவில் எதனையும் சாதிக்காத அளவில் செயற்பட்டுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அவ்வாறன்றி இக்கையளிப்பு நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தியுள்ளதா என்பதும் அடுத்த உடனடிக் கேள்வியாகும். சதாரின் கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் கையளிப்புத் தொடர்பாக தகவலை ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தும் போது மறுபுறத்தில் நிகழ்ந்த தாக்குதலில் 11 பேர் பலியாகியுள்ளனர். எனவே சதார் படைகள் கைவிட்டாலும் அல்லது கைவிடுவதுபோல் நடந்து கொண்டாலும் மறுபக்கத்தில் பெரும் தாக்குதல்கள் நிகழக்கூடியதாகவே அமையும் போலுள்ளது.

அமெரிக்க ஆட்சியாளர்களை திருப்திப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அரசாங்கம். அமெரிக்கா எடுக்கும் தீர்மானங்களை அமுல் படுத்துகின்ற அமைப்பே அன்றி வேறு எத்தகைய செயற்பாட்டையும் ஈராக் மக்கள் சார்பாக எடுக்கக் கூடியதல்ல.

எனவே அமெரிக்கப்போர் விரும்பிகளுக்கு அடுத்த தேர்தலில் தோல்வி நிச்சயமாகுமென்றால் அது ஈராக் விடயத்தினால்தான் என்பது அவர்களது தெளிவாகும். அந்தளவுக்கு எதிர்த்தரப்பு மிக மோசமான நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது. அதிலும் குறிப்பாக ஈராக்கை பிடித்த பிற்பாடு எத்தகைய நிர்வாக கட்டமைப்பும் சாத்தியப்படவில்லை என்பதோடு புஷ் அது பற்றிய திட்டமிடல் எதுவுமின்றியே ஈராக்கை கைப்பற்றினார். என கெரிகுறிப்பிடுகின்றார். இது பற்றிய குழப்பத்தை தீர்க்கவே இடைக்கால அரசின் போர்வையில் ஆயுதக் கையளிப்பு நாடகம் நடத்தப்பட்டது. இதனால் ஏற்படப்போவது தனியே உலக ஊடகங்களுக்கு காட்டப்படும் செய்தி என்பதாகவே அமையும் அதன் யதார்த்தம் எதுவுமே



அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஈராக்கியப் படைகளின் ஆயுதக் கையளிப்பு பற்றி குறிப்பிடும் போது அமெரிக்க இராணுவத் தாக்குதலை எதிர் கொள்ளமுடியாது கிளர்ச்சிவாதிகள் ஆயுதங்களை கையளிப்பதாகக் கூறியுள்ளார். ஆனால்

**ஐங்கரன்**

பெருமளவுக்கு அவரது கணிப்பீட்டை முறியடிக்கும் விதத்திலேயே தமது அணுகுமுறையை சதார் கையாண்டு வருகின்றனர்.இனி விடயத்திற்கு வருவோம் ஈராக்கிய இடைக்கால அரசு ஏன் இத்தகைய தீர்மானத்தை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. ஈராக்கிய இடைக்கால அரசு ஈராக்கிய அரசல்ல அது அமெரிக்க ஆட்சியாளரின் கூலிப்படையேயன்றி வேறு ஒன்றுமில்லாத அமைப்பு. அது ஈராக்கிய அரசியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. வேண்டுமாயின் ஈராக்கிய தேர்தலுக்கு ஏற்றவகையில் ஒரு தற்காலிக அமைதியை சாத்தியப்படுத்தலாம் என்ற நம்பிக்கையை இடைக்கால ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும். அதனால் ஆட்சியில் அமரப்போவது சனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுபவரே அன்றி ஈராக்கின் போக்கில் அதிக பாதிப்புகள் ஏற்படாது. இவற்றை முன்நிறுத்தி புஷ் பிரசாரம் செய்ய முடியுமென நிர்வாகம் கருதியிருக்கலாமா அதற்கான திட்டமிடலாகக் கூட கையளிப்பு அமைந்திருக்கலாம்.

ஆனால் ஓர் கிளர்ச்சியாளர்கள், அல்லது விடுதலைப் போராட்ட அமைப்பு ஆயுதங்களை கையளிப்பது என்பது அரசியலில் அல்லது இராணுவ நோக்கு நிலையில் எந்தளவுக்கு பாதுகாப்பானதென்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இந்தியாவில் நக்ஸலைட்டுகள் தமது ஆயுதங்களை கையளித்து மிக நீண்டகால போராட்டத்தை கைவிட்டு அரசியலில் ஈடுபட முடிவெடுத்துள்ளனர். இதில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல் போராட்டத்தின் பால் ஏற்பட்ட களைப்பினாலோ அல்லது சலிப்பினாலோ நிகழ்ந்ததாக கொள்ளப்படுவதைவிட ஆயுதப்போராட்ட அமைப்புக்கள் தங்கியிருக்கும் நாடுகளிலும், தீர்மானம் எடுக்கும் சக்திகளுடன் கொண்டிருக்கும் உறவிலும் அதன் அணுகுமுறையுமே காரணமாக கொள்ளலாம். நக்ஸலைட்டுகள் தனித்து போராட்டத்தை நடத்துகின்ற அமைப்பாக வளர்ச்சியடையவில்லை. அயல்நாடுகளில் தங்கியிருந்து போராட்டத்தை நடத்துவதானால் அவர்களது அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படலாம். அது மட்டுமன்றி ஆட்சிக்குவந்த புதிய அரசு நக்ஸலைட்டுகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றதாக அறிவித்ததும் அது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கத்தோடு செயற்படுகின்றதாக கொள்ளமுடியும்.

இருந்த போதும் அமெரிக்க ஆட்சியாளர்களைப் போல இந்திய ஆட்சியாளரது போக்கும் கிளர்ச்சிவாதிகள் கருதுவது போன்று ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தன்மைகளை எப்படி சமன்செய்யும் என்பதைப் பொறுத்ததாகும். தனி மாநிலக் கோரிக்கையை முன்வைத்த இந்தியக் கிளர்ச்சியாளர்களும், ஈராக்கியக் கிளர்ச்சியாளர்களும் இடையில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமைத் தன்மை குறைவாக காணப்பட்டாலும் ஆயுத கையளிப்பில் சதார் ஒருபடி முதன்மையானவராகவே காணப்படுகின்றார். சதார் பலத்துக்கும் பலவீனத்துக்குமிடையில் ஒரு யதார்த்தத்தை நோக்குகின்றார். இதன் நம்பிக்கைதன்மை இந்திய கிளர்ச்சிக் குழுக்களிடம் இல்லை என்றே கூறலாம். இதனால் அரசுகளைவிட அமைப்புக்களே அதிக பாதிப்பை எதிர்கொள்ளக் கூடியன.

எனவே கிளர்ச்சிக் குழுக்களின் கையளிப்பின் பின்புலத்தில் அரசியல் நீரோட்டம் அவசியமானது. ஏனெனில் அரசுகளும் அதன் தலைமைகளும் நம்பிக்கைக்குரிய அமைப்புகளாக எப்போதும் காணப்படுவதில்லை. இதனால் கிளர்ச்சிக் குழுக்களும், அவர்களை நம்பியிருக்கின்ற மக்களுமே அதிக பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக அமையும்.

# ஏமாற்று ஆலோசனை



பொருட்களின் விலையேற்றம் என்பது முன்னெப்பொழுதும் இல்லாதவாறு கட்டுக்கடங்காது அதிகரித்துச் செல்கின்றமையைக் கடந்த மூன்று மாதங்களாக அவதானிக்க முடிகிறது. இக்காலப்பகுதியில் எரிபொருளின் விலை மூன்று தடவைக்குமேல் அதிகரித்துவிட்டதுடன் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளே காணப்படுகின்றன.

இவ்அதிகரிப்பைக் கட்டுப் படுத்தமுடியாது என்பதைச் சனாதிபதி சந்திரிகாவும் சரி விலைவாசி அதிகரிப்புத்தொடர்பாக இதுவரை காலமும் உரத்துக் கூக்குரலிட்ட ஜே.வி.பியினரும் சரி ஒப்புக்கொண்டு விட்டனர்.

எரிபொருள்விலை ஏற்றமும் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியும் கட்டுக்கடங்காமல் பொருட்களின் விலையை அதிகரித்துச்செல்கிறது.

இந்நிலையில் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு இதற்குத் தீர்வாகாது என்றும் திறைசேரி வட்டாரங்கள் கூறுகின்றன.

அதாவது விலைவாசி அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும்முடியாது, அதற்கு நிவாரணம் வழங்கவும் முடியாது அரசாங்கம் திண்டாடுகின்றது என்பதே இதன்பொருளாகும்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா ஓர் புதுமையான ஆலோசனையைமுன்வைத்திருக்கிறார். அதாவது நாட்டில் இலவசமாக கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. இலவசமாக வழங்கப்படும் கல்வியை மேம்படுத்தி தொழிலைப்பெற்று பொருட்களுக்கு அதிகரித்த விலையைச் செலுத்தத் தயாராகவேண்டும் என அவர் அறிவுரை வழங்கியிருக்கிறார்.

எனவே விலைவாசி உயர்வு தவிர்க்கமுடியாதது. அதனை ஏற்கத்தயாராகுங்கள் என்பது இவ் அறிவுரையில் அடங்கியிருப்பினும் கல்விகற்று தொழில் வாய்ப்பைப் பெற்று பொருட்களுக்குப் பணத்தைச்செலுத்தத் தயாராகுங்கள் எனக் கூறுவது அவரை ஆட்சியில் அமர்த்திய மக்களைக் கேலிசெய்வது போன்றதாக அமைந்துள்ளது.

இவ்வாறான ஒரு அறிவுரையை இப்பொழுது அவர் வழங்காது சனாதிபதித் தேர்தலுக்கு முன் வழங்கியிருப்பாராயின் மக்கள் அவரைச் சனாதிபதியாகத் தெரிவு செய்யாதிருப்பார்கள். அத்துடன் அன்றிருந்தே தமது கல்வியை மேம்படுத்தியிருப்பின் இன்று தொழில்வாய்ப்பைப் பெற்று பொருட்களுக்கு விலையைச் செலுத்தத் தயாராக இருந்திருப்பார்கள்.

குறைந்த பட்சம் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் கூறியிருந்தால் மக்கள் அவரது கட்சியை ஆட்சியிலேற்றாது விட்டிருப்பார்கள். அதன்மூலம் இப்பொழுது அவதிப்படவும் நேர்ந்திருக்காது.

அதேவேளை மக்கள் எவ்வாறுதான் கல்வியில் மேம்பட்டாலும் சனாதிபதி சந்திரிகாவோ அவரது கட்சியினரோ ஆட்சியில் இருப்பார்களாயின் கல்விகற்றோருக்கெல்லாம் தொழில் வாய்ப்புக் கிடைத்திருக்கும் என்பதை அவர் எவ்வாறு நிச்சயமாகக் கூறுகிறாரோ தெரியவில்லை.

அவரதுதேர்தல் வாக்குறுதிகளிலொன்றான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில்கூட எவ்வளவு இழுபறிகள். சாட்டுப்போக்குகள். இறுதியில் பட்டதாரிகள் போராட்ட நடவடிக்கைகளில் இறங்கமுற்பட்டபோதே அந்தவாக்குறுதி ஓரளவுக்கேனும் நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை தொழில் வாய்ப்புப்பெற்று இப்பொழுது அரச சேவைகளில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்குவதாக அவர் வழங்கிய தேர்தல் வாக்குறுதி இன்னமும்கூட நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது எழுபது சதவீத சம்பள அதிகரிப்புக்குறித்துப் பெரும்பாலும் ஐயமே நிலவுகிறது. அவ்வாறு அதிகரிப்பு வழங்கப்பட்டாலும் இப்பொழுது அதிகரித்துச்செல்லும் பொருட்களின் விலையேற்றத்தைச் சமாளிக்க அது போதுமானதா என்பதும் ஆராயப்படவேண்டியதாகும்.

இந்நிலையில்தான் அவர் விலைவாசி உயர்வைச் சமாளிக்க அவர் மேற்கண்ட ஆலோசனையைக் கூறியிருக்கிறார். அவர் கூறியது போல இலவசக் கல்வியைப் பயன்படுத்தித் தொழிலைப்பெற்றுக் கொண்டாலும் ஏறிச்செல்லும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது என்பது இப்போது வெளிப்பட்டு நிற்கிறது.

இங்கே இன்னுமொன்றையும் கவனிக்க வேண்டும். மக்கள் பெறும் இலவசக்கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் என்பவற்றை அவர் தனது சொந்தப்பணத்தில் வழங்குவது போன்ற தொனிப்படவும் கூறியிருக்கிறார்.

மக்கள் அவரை ஆட்சியில் அமர்த்தியது அவரின் இவ்வாறான அறிவுரைகளைக் கேட்பதற்காக அல்ல. நாட்டைச் சிறந்தமுறையில் நிர்வகித்துப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தி தமது துன்பங்களைக் குறைப்பதற்காகவாகும்.

ஆனால் அதற்கான எவ்வித முயற்சியும் எடுக்காதது மட்டுமல்ல நாட்டை மேலும் படுகுழியில் தள்ளும் முயற்சியில் ஈடுபடும் அவர் மக்களை இவ்வாறான வார்த்தைகள்மூலம் ஏமாற்றிவிட எண்ணுகிறார் போலும்.

அதாவது ஏற்கனவே மக்களை ஏமாற்றிப் பதவிக்கு வந்தது போல தொடர்ந்தும் ஏமாற்றித் தனது அரசியல் வாழ்வைத் தக்கவைத்துக் கொள்ளலாம் எனஅவர் நினைக்கிறார். அது எவ்வளவுதூரம் சாத்திய மானது? என்பதை விரைவில் தெரியவரும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# தமிழ்மக்கள் மீது திணித்த போரினால் அரசு பொருளாதாரத்தை இழந்தது

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக எமது மக்கள் தமது சொந்த வாழ்விடங்களையும், வரலாற்று எச்சங்களையும்விட்டு இடம்பெயர்ந்து சென்றனர் என்பதைவிட இவர்கள் சந்தித்த துன்பதுயரங்கள், கொடியபோரின் விளைவால் சிறிலங்கா அரசினால் திட்டமிட்டுத் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.இதில் பால்வேறுபாடு இன்றி, வயது வேறுபாடு இன்றி குழந்தைகளும், வயோதிபர்களும் எனப்பலவாறு பல்வேறு இடங்களில் படுகொலை செய்யப்பட்டனர். அத்தோடு அவர்களது வாழ்விடங்கள் பறிக்கப்பட்டு இன்றும் தாய்நாட்டிலும், தாயகத்திற்கு வெளியாலும் அவலவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இன்று ஏதோ நகரும் ஒரு மௌனித்த சமாதானத்தில் எமது சமூகம் வெடிச்சத்தங்களை மட்டும் கேட்கவில்லையே தவிர எந்த ஒரு நன்மையையும் இதுவரை அடையவில்லை. சமாதானத்தில் எமது சமூகத்தின் கட்டுமானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. பாடசாலைகள் இன்றும் மரநிழல்களில் இயங்குகின்றன. மருத்துவமனைகள் இன்றி எத்தனையோ மக்கள் அவலப்படுகின்றார்கள். வாழ்விடங்கள் இன்றி இன்றும் எத்தனை குடும்பங்கள் அகதிமுகாம்களில் அவலவாழ்க்கை வாழ்கின்றனர். இது தமிழினத்தின் மீது சிறிலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொண்டுவரு கிற ஒரு புறக்கணிப்பு நடவடிக்கையே ஆகும்.

அந்த வகையிலே கடந்த 2001 ஆம் ஆண்டு சமாதான காலத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி தொடர்ந்து இடம்பெற்ற யுத்தம் காரணமாகத் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சுமார் 116000 பேர் தமது சொந்த வதிவிடங்களை இழந்துள்ளனர். சுமார் 800,000 பேர் தாம் வாழ்ந்த பிரதேசங்களைவிட்டு வெளிமாவட்டங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் தமது பாதுகாப்பையும், குடும்பச் சூழலையும், இயல்பு வாழ்க்கையையும், தமது வழமையான வாழ்வுச் சூழலையும் இழந்துள்ளனர். பலர் வெளிநாடுகளில் அகதிகளாக அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.



யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட மனஅதிர்ச்சியின் காரணமாக அல்லது மனநிலை பாதிக்கப்பட்டதன் காரணமாக எனப் பல ஆயிரக்கணக்கானோர் பாதிப்பிற்குள்ளாகித் துன்புறுகின்றனர். இராணுவப் புனர்வாழ்வு நிலையங்களில் 9000 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சுமார் 30 ஆயிரத்திற்கும், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் தம்மிடமிருந்த ஆயுதங்களையும் அவர்களுடன் எடுத்துக்கொண்டு சென்றுள்ளனர். இவர்களுக்கு இராணுவத்தொழிலைவிட வேறு எவ்விதத் தொழிற்திறமைகளும் இல்லாமையினால், பாரிய தொழில் இல்லாத பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பதோடு இவர்களால் மிக அபாயகரமான பல்வேறு விளைவுகளைச் சமூகம் எதிர்கொண்டபடி இருக்கிறது.

உலகில் கூடுதலாகத் தற்கொலை புரியும் நாடாகச் சிறிலங்கா விளங்குகின்றது. மொத்தச்சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். யுத்தமானது இவ்விரு பிரச்சினைகளுக்கும் பிரதான காரணியாக அமைந்துள்ளது.

இந்த யுத்தத்தின் மூலம் மனித உரிமைகளும் மீறப்பட்டும் வருகின்றது. இதில் குறிப்பாக தமிழ்ச்சமூகம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களின் சனநாயக உரிமைகள் முழுமையாக இழந்துள்ளனர். இலங்கையின் பல பிரதேசங்களில் கடந்த 1980 களின் பின்னர் தொடர்ச்சியான அவசரகால ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட போரின் விளைவாக தமிழ் மக்களை அழித்துவிடமேற்கொண்ட யுத்தம் காரணமாகத்தனது பொருளாதாரத்தை மாய்த்துக் கொண்டது. அந்த வகையில் யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு என்பது யுத்தத்திற்கு அரசு நேரடியாகச் செய்த செலவு பொதுப்பாதுகாப்பிற்கு அரசு செய்த மொத்தச்செலவு இடம்பெயர்ந்த அகதிகளைப் பராமரித்தல், புனரமைப்பு, அடித்தளங்கள் புனர்நிர்மாணச்செலவு, உற்பத்திப் பாதிப்பால் ஏற்பட்ட நஷ்டம், பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இழந்த அவகாசங்களில் ஏற்பட்ட நட்டம் எனப்பலவாறு பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்தவகையில் சிறிலங்காவில் கணிப்பிடப்பட்ட மொத்தப் பொருளாதார இழப்பு ரூபா 24510000 கோடிகளாகும். இதில் பெரும்தொகை யுத்தச்செலவாகவே இருக்கின்றது. இவ்வாறு யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு இன்று சிறிலங்காவின் பொருளாதாரத்தை மிக மோசமாகப்பாதிக்கப் பட்டமையே ஆகும். இதனால் யுத்தம் மூலம் இழக்கப்பட்ட வளங்களை மீளப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது அபிவிருத்தி செய்தல் என்பது மிக எளிதான காரியம் அல்ல. இவ்வாறு இழக்கப்பட்ட சொத்துக்களும், பொருளாதாரமும் கட்டி எழுப்பப்படுவதாயின் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை எவரும் வரையறை செய்து கொள்ளமுடியாது. இழக்கப்பட்டவையில் இதுவரையும் அபிவிருத்திசெய்யப்பட்டவை 10 வீதத்திற்குக் குறைவானவை என்றே கூறவேண்டும்.

**சு. பாஸ்கரன்**

## ஐப்பசி 15 அனைத்துலக வெள்ளைப்பிரம்பு தினம்

# வெள்ளைப் பிரம்பு விழிப்புலனிழந்தோருக்கு வழித்துணை




விழிப்புலனிழந்தோர் வீதிகளில் நடமாடும்போது அவர்களது கையில் வெண்ணிறமான ஒரு கோல்- வெள்ளைப்பிரம்பு காணப்படும். அவர்கள் நடமாடும்போது அவ்வெண் கோலால் தமக்கு முன் உள்ள தரையைத் தட்டியவாறு நடந்துசெல்வதைப்பலர் கண்டிருக்கலாம். விழிப்புலனிழந்தோருக்கு இவ்வெண்கோல் ஏன்? எதற்காக? என்று பலரும் பெரிதாகச் சிந்தித்திருக்கமுடியாது.

### வெள்ளைப் பிரம்பு

உலகின் பல நாடுகளில் ஐப்பசி 15 ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினமாகக் கொண்டாடப்படுகின்றது. விழிப்புலனிழந்தவர்கள் பிறரின் உதவியின்றி தன்னியல்பாக நடமாடுவதற்கு உதவியாக வெள்ளைப்பிரம்பு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வெண்கோல்- பிரம்பினால் அல்லது அலுமினியம் போன்ற எளிதான உலோகங்களால் வெண்வர்ணம் தீட்டப்பட்டு மடிக்கக்கூடியவகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளை வர்ணத்துடன் உருவாக்கப்படுவதால் வெள்ளைப் பிரம்பு அல்லது வெண்கோல் எனப்படுகின்றது.

### வெள்ளைப் பிரம்பு சட்டமாதல்

வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புச் சட்டம் முதன்முறையாக அமெரிக்காவில் இலினோயிலில் உள்ள பியோறியா நகரத்தில் 1930ஆம் ஆண்டு சட்டமாகப்பிரகடனப் படுத்தப்பட்டது. இச்சட்டம் பியோறியாவில் உள்ள ''லயன்ஸ்'' கழகத்தினரின் முயற்சியினால் நிறைவேறியதாகும். இதனைத் தொடர்ந்து பல நாடுகளில் வெள்ளைப்பிரம்புச் சட்டம் நடைமுறைக்குக்கொண்டுவரப் பட்டுள்ளது.

அனைத்துலக விழிப்புலனிழந்தோர் சங்கங்களின் ஒன்றியத்தின் மாபெரும் கூட்டம் 1969 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கையில் நடத்தப்பட்டது. இக் கூட்டத்திலேயே ஐப்பசி 15 ஆம் திகதியை அனைத்துலக வெள்ளைப் பிரம்புத் தினமாக பிரகடனப்படுத்தினார்கள். இதனை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

### சட்டத்தின் மூலம் வீதிகளில் முன்னுரிமை

விழித்திறன் குறைந்தோர் நடமாடும் போது வெள்ளைப் பிரம்பின் உதவியினால் தாம் செல்லும் வழியின் இயல்புகளையும் அதில் உள்ள தடைகளையும் உணர்ந்து செயற்படுகின்றார்கள். ஒருவர் தம் கையில் வெள்ளைப் பிரம்புடன் நடமாடினால் அவர்



விழிப்புலன் இழந்த ஒருவர் என்பதை அடையாளப்படுத்துகின்றது. வெள்ளைப் பிரம்புடன் செல்லும் விழிப்புலனிழந் தோருக்கு வீதிகளில் முதற்செல்லும் உரிமை சட்டத்தின்மூலம் உண்டு. வெள்ளைப் பிரம்மைத் தாங்கிச் செல்லும் விழிப்புலனிழந்தவர்கட்கு, வீதிகளில் வாகனங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக் களிலிருந்து சட்டத்தின்மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### சாரதிகளின் கவனத்துக்கு!

இவர்கள் நடமாடும்போது வெள்ளைப் பிரம்பைத் தமது வலது - இடது பக்கங்களுக்கும் மாற்றி மாற்றித் தரையைத்தட்டிச்செல்வார்கள். இவர்கள் இவ்வாறு செல்வது பாதையின் நிலையை பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகும். இவ்வாறு இவர்கள் செல்லும்போது எதிராகவோ அல்லது பின்புறமாகவோ அவதானமின்றி மிதிவண்டியில் செல் வோரால் இவர்கள் பல சந்தர்பங்களில் விபத்துக்குட பட்டமையையும் அறிய முடிகிறது. விபத்தினால் இவர்கட்குச் சிறுகாயங்கள் ஏற்படுவதோடு இவர்களது வெள்ளைப் பிரம்பும் சேதமடைந்துள்ள பல சந்தர்பங்களும் உண்டு. எனவே மிதிவண்டிகளில் செல்வோர் குறிப்பாக வெள்ளைப் பிரம்பைத் தாங்கி வீதியில் செல்லும் விழித்திறன் குறைந்தோரை அவதானித்து உங்கள் மிதிவண்டிகளை மிகக்கவனத்துடனும், பொறுப்புடனும் செலுத்துங்கள். இது உங்கள் கடமை.

வெள்ளைப் பிரம்புடன் விழிப்புலனிழந் தோர் வீதியில் நடந்துசெல்வதை அல்லது வீதியைக் கடக்க எத்தனிப்பதை வாகன சாரதிகள் அவதானிக்கும்போது வெண் பிரம்பு தாங்கியவருக்கு ஆபத்து ஏற்படாதவாறு, அவர்கள் செல்வதற்கு முன்னுரிமை அளித்து சாரதிகள் - ஓட்டுநர்கள் தமது வாகனத்தைக் கவனத்துடன் செலுத்தவேண்டிய பொறுப்பும் - கடமையும் உடையவர்களாகின்றார்கள்.



இன்று உலகின் பல நாடுகளிலும் "லயன்ஸ்" கழக ஆதரவுடன் வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்படுகின்றது.

வாகன சாரதிகளே! ஓட்டுநர்களே! மக்களே! அனைவரும் வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளித்து விழிப்புலனிழந்தோருக்கு உதவுவோமாக!

**ப. சந்திரசேகரம்**

---

# வாசிக்கத் தெரிந்த மனிதன் யோசிக்கத் தெரிந்த மனிதன்

"நூல்களே மனித அறிவின் திறவுகோல்கள்" இத்திறவு கோலைக் கொண்டு மனிதன் தனது அறிவை வளர்க்கவும், பூரணப்படுத்தவும் மிகவும் இலகுவான வழி வாசிப்பு ஒன்றேயாகும். இன்றைய முழுமையான, ஆழமான வாசிப்பே நாளைய ஒவ்வொரு மனிதனின் பூரண அறிவின் அத்திவாரமும்,அகல்விளக் கும் என்றால் அது மிகையாகாது.

"அரிது அரிது மானிடர் ஆவது அரிது" அந்தவகையில் மனிதமனங்கள் ஒவ்வொன்றும் பட்டை தீட்டப்படாத வைரங்கள். இந்த மனம் பதப்படுத்தலில்தான் ஒவ்வொரு மனிதனது புகழ், செல்வாக்கு, வளர்ச்சி, ஏற்றம், தாழ்வு என்பன தங்கியுள்ளன.

இந்த மனம் ஆனது அறிவின்பால் வளர்ந்து செழுமையடையும் போதுதான், தன்னையும் தன்னைச் சூழ்ந்தவர்க்கும் மணம் வீசி மகிழ வைக்கிறது. இந்த அறிவைப் பெற நிறைந்த தேடலை நூல்கள் வாயிலாக தெரிந்து கற்பதனூடாகவே கிடைக்கிறது. இதற்கு நல்ல வாசிப்புப் பழக்கமே மூலகாரணியாக விளங்குகிறது.

சிறந்த வாசிப்பின் ஊடாக மனிதனை மனிதனாக பழகவைக் கும், ஒருவிடயம் தொடர்பாக தெளிவைக்கொடுக்கும். செயற்பாடும், செயற்திறனும் மிக்க ஒரு மனிதனாக உருவாக்கும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மெல்லுணர்வு களை உணரவும், நேசிக்கவும் சிறந்த வாசிப்பு உதவுகிறது.

அன்றாட வாழ்வில் அநேக மனிதர்களுக்கு வாக்குவாதப் படவும், வாய்த்தர்க்கம் செய்யவும்தான் தெரிகிறது. மாறாக, சிறந்தமுறையில் உரையாடவோ, வாதாடவோ தெரிவதில்லை. நிறைந்த அறிவுள்ளவன் நிதானம் தப்பி நடக்கமாட்டான். நிறைந்த அறிவு எங்கிருந்து கிடைக் கிறது. பல்துறைசார்ந்த நூல்களை கற்பதன் ஊடாகவே இதற்கு சிறந்த வாசிப்பும், வாசித்ததை கிரகித்து சிந்திப்பதாலும் கிடைக்கிறது.

எனவே ஒவ்வொரு மனிதனும் தினம் ஒரு நூல் வாசிக்க (Read a book Every day) வேண்டும். நூல்களை தினமும் வாசிக்கும் போது மலினமான நூல்களை கற்று மனங்களில் தவறான பதிவுகளை ஏற்படுத்தாது. "கண்டு அது கற்க வேண்டும்." இதன் மூலம் நம் மனங் களில் நல்ல எண்ணங்கள் ஊற்றெடுக்கும். ஒவ்வொருமனித மனங் களில் நல்லெண்ணங்கள் ஊற்றெடுத் தல் நமது நாளாந்த செயற்பாடுகளில் பிரச்சினைகளுக்கு இடமுண்டா?

ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னைத்தானே நேசிக்க வேண்டும். இதை வாசிக்க உங்களுக்கு சிரிப்பு வருகிறதா? எவனும் தன்னைத்தானே நேசிக்காமல் இருப்பானா என்று பதில் கேள்வி கேட்பீர்கள். தன்னிலே அக்கறையுடைய மனிதன் முதலில் தனது அறிவை வளர்ப்பான். அதனூடாக தனது ஆற்றலை மேம்படுத்துவான். இவ் அறிவை வளர்க்க வாசிப்பு ஒன்றே சிறந்த வழியாகும்.



உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் சிறந்த வைடூரியப் பேழைகள். அதற்குள் மனம் என்னும் பட்டை தீட்டப்படாத வைரம் உண்டு. அதனை சிறந்த வாசிப்பு என்னும் அரத்தின் ஊடாக பட்டைதீட்டிக் கொள்ளவேண்டும். வாசிக்கத் தெரிந்த மனிதன் யோசிக்கத் தெரிந்த மனிதன். யோசிக்கத் தெரிந்த மனிதன் யோக்கியமான மனிதன்.

இவ் வாசிப்பானது இன்று அருகிவருவதுடன் அதன் பயன் பாட்டையும், அத்தியாவசியத்தையும் இழக்கிறது. இதற்குக் காரணம் கட்புல-செவிப்புல, சாதனங்களின் பெருக்கமும்-பயன்பாடும் என்றால் அதுமிகையாகாது. இக்கட்புல-செவிப்புல சாதனங்களின் பெருக்கத் திற்கு நவீன தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் விளைவு ஆகும்.

இன்றைய உலகம் துரித செயற்பாடும் அதிக சனத்தொகை, வலைப்பின்னல் செயற்பாட்டால் மனித வாழ்வில் நேரப்பிரச்சினை ஏற்படுகிறது. இதனால் மனிதன் வாசிப்பில் தனது நேரத்தை செலவிடாது, குறித்த நேரத்தில் வேறு. வேலைகளுடன் வானொலி, தொலைக் காட்சி போன்றவற்றில் தனது தேவைகளை நிறைவு செய்கிறான். இதனால் வாசிப்பு மூலம் கிடைக்கும் ஆழமான அறிவு அற்றுப்போய் மேலோட்டமான விடயங்களையே பெற்றுக்கொள்கிறான். இன்னும் சிறிது காலத்தில் மனித வாழ்வில் வாசிப்பு முற்றாக இல்லாதுபோனாலும் வியப்பில்லை. ஏனெனில், இன்று பல வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் தமது சேவை நேரங் களை மிக அதிகளவில் அதிகரித்துள்ளன. இன்று எம் மத்தியில் 24 மணிநேர வானொலி சேவை கூட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் இவ் "ஒக்டோபர்" மாதத்தை இலங்கை தேசிய நூலகம் "தேசிய வாசிப்பு மாதமாக" பிரகடனப்படுத்தி வாசிப்பை ஊக்கப்படுத் தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள் ளது. இதனை சகல பாடசாலைகள், பிரதேச சபை, நகரசபை, பொதுசன நூலகம் வாயிலாக முன்னெடுக் கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை பொதுநூலகத்தால் கடந்த மாதம் 30.09.2004 அன்று தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள், ஆசிரியநூலகர்கள் பல்வேறு திணைக்கள உத்தியோகத்தர்கள், போராளிகள், மற்றும் ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்து உள்ளமை குறிப் பிடத்தக்கது. இதன்போது துறை சார்ந்த ஐந்து விரிவுரையாளர்கள் கருத்துக்கள் வழங்கியுள்ளனர்.

**கண்டு அது நிற்க கற்போம்**
**தினமும் ஒரு நூல் கற்போம்**
**கற்றதை சிந்திப்போம்**
**சிந்தித்ததை சிறப்புடன் செயல் படுத்துவோம்**
**வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்.**

**அருணா**




# கந்தண்ணனின் சுதந்திர தாகம்

இ.கபிலன்

மூதூரிலுள்ள, மட்டக்களப்பு, திருமலையை இணைக்கும் பிரதான பாதையை அண்மித்த பூர்வீகக் கிராமம்தான் பூநகர்.

பூநகர் விவசாயத்தின் அடித்தளமாக விளங்கும் கிராமமாகும் இது கலையாத பசுமைமிக்க ஊராக எப்போதும் காட்சிதரும்.

ஊரைச் சூழ வயல் வெளிகளும், நீர்நிலைகளும், கருங்கல் மலைக்குன்றுகளும் இருப்பதால் அதன் சிறப்பையும் அழகையும் எழிலையும் புலப்படுத்துகின்றன.

இங்குள்ள ஆறு, குளங்களில் விவசாயம் செய்தும் மீன்பிடித்தும் காடுகளில் தேன் எடுத்தும் வேட்டையாடியும், மரம் அரிந்தும் இம் மக்களது தினசரி வாழ்க்கை நகர்ந்தன.

ஊர் செழிப்போடும் மிடுக்கோடும் காட்சியளிக்கின்ற தென்றால் அது மக்களது கடினமான உடல் உழைப்பாலாகும். எப்படி விதைகட்டாந்தரையில் விழுந்தாலும் வீரியமுள்ள விதை முட்டி முட்டியே முளைத்துவிடும் என்பது போலவே இம் மக்களது உழைப்பு முயற்சிகள் இருந்து வருகின்றன.

அவர்கள் தம் ஊரில் சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்தபோதும் அலிஒலுவ, மகிந்தபுர சிங்களவர்களின் நெருக்குவாரங்களுக்குள்சிக்கி அவர்கள் தம் இயல்பு வாழ்க்கையை ஓட்டுவதில் தினம் தினம் சிரமங்களையே சந்திக்க நேரிட்டது.

தமிழர்களின் விவசாயத்திற்கு வரும் நீரை சிங்களவர்கள் விடாது தம் வயல் நிலங்களுக்கு திருப்பிவிடும் நிகழ்வுகள் அவ்வப்பொழுது நடைபெறும். இதனால் தமிழர்கள் கொதித்தெழ இனப்பிணக்குகள் இடையிடையே தோன்றுவதுண்டு.

இம்மக்களுக்குள் வாழ்ந்துவரும் ஒருவராக கந்தண்ணனும் கலந்திருந்தார். சிங்களவர்களின்அநீதியால் அவரின் மனமும் தணலால் தகிக்கும் நிலையிலேயே இருந்தது. அதுதான் அவரின் வாழ்வில் மிக முக்கிய திருப்பமாகவும் அமைந்தது.

அவரது மனதின் ஆழத்தில் படிந்திருந்த சிங்களப்பகை உணர்வுதான் அவரையும் 85இல் புலிப்போராளிகளுடன் இணைந்து செயலாற்ற வைத்தது.

தர்மத்திற்காகவும் தன்மானத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டுவரும் ஆயுதப்புரட்சி போராளிகளுக்குள் அவர் நுழைந்ததன் மூலம் தனது ஆரம்ப முத்திரையை பதித்தார்.

மகாவலிகங்கை ஆற்று நீர் வெள்ளம் போல் திரண்டு புரண்டு வரும் நீரோட்டத்தை கடலில் சங்கமமாக்கும் வெருகல் ஆற்றோரத்தில்தான் புலிப்போராளிகள் கூடாரம் அமைத்து முகாமிட்டிருந்தார்கள். அது சுங்கான்குறி காட்டுப் பகுதியாக இருந்ததனால் ரம்மியமான காட்டுச் சூழல்தான் அங்கு நிலவியது.

இயற்கை ஏராளமாக அள்ளிக் கொட்டும் பற்பல காட்டுமரங்கள், அம்மரங்களில் ஆங்காங்கே பறவைக்கூடுகள், கூடுகளிலிருந்த பறவைக்குஞ்சுகள் எழுப்பிய மெல்லிய ஒலிகள் ஒருபுறம், கங்கை நீரோட்டத்தின் இயற்கை குளிர்மையால் புத்தெழுச்சி தரும் சூழல், மறுபுறம் இச்சூழலின் நடுவிலே போராளிகளின் கூடாரம்.

அக்கூடாரத்தில் கணேஸ், இளங்கோ, கஜேந்திரன், சஞ்சய் ஆகிய மூத்த போராளிகள் தங்கி தம் போராட்டக்கடமைகளை செய்து வந்தார்கள். அப்போராளிகளின் பணிகள் அனைத்திலும் அண்ணன் தன்னை ஈடுபடுத்துபவராக இருந்ததனால் அவர்களின் நெருங்கிய சகாவாக மாறி அவர்களது மனதில் நீங்காத இடத்தினையும் பிடித்துக்கொண்டார்.

அண்ணன் முகாம் அமைப்பு வேலைகளிலும், உணவுப்பொருட்கள் சுமக்கும் வேலைகளிலும் தாக்குதலுக்கான வேவுப்பணிகளிலும் தாக்குதலுக்கான உணவுதயாரிக்கும் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

இப்பணிகளின்போது அவரது வேலைப்பளுவின் உச்சத்தால் அலுப்பும் மன உளைச்சலும் அவருக்கு எப்போதும் ஏற்படுவதில்லை. அவர் எதற்கும் அஞ்சாமல் அயராமல் உறுதியாக நின்று உழைத்தார். அவரின் பாதங்கள், ஈரமும் சேறுமாக இருக்கும் நிலத்தில் ஓய்வு ஒழிச்சலின்றி பதிந்தன.

அண்ணன் ஒரு குத்துச்சண்டை வீரனைப்போல முறுக்கேறிய ஆளுமைத் தோற்றம். அதுவே அவரின் உடல்கம்பீரத்தையும், தைரியத்தையும் புலப்படுத்துபவைகளாக இருந்தன. சவால்களை எதிர்கொள்ளத் தனக்கிருக்கும் இயலுமை குறித்து நம்பிக்கை கொண்டவர். வருவது எதுவாக இருந்தாலும் எதிர்கொண்டு வெற்றிகரமாக போராடுவதற்கான திறமையும், விருப்பமும் அவரின் சிறப்புக்களாகும்.

அண்ணன் உயிராபத்தான காட்டெல்லைகளைக் கடந்து போராளிகளை பாதுகாப்பாக முகாம் அழைத்துவரும் வழிகாட்டியாகவும், போராளிகளுக்கான உணவுப் பண்டங்களை வண்டியில் கொண்டுவரும் வண்டிக்காரனாகவும் முகாமிற்கு தேவையான சமையல் பொருட்களை ஒரு மூடையாக தன் தோளில் சுமந்துவரும் தொழிலாளியாகவும் இயங்கலானார்.

அவர் முதலைகள் வாழும் கங்கை, ஆறுகளை நீந்திக்கடந்தும் அதுவும் வேகமான நீரோட்டத்தின் மத்தியிலும் வள்ளத்தை தன் கையால் தள்ளியபடி நீந்திக்கரைசேரும் சமயங்களில் வள்ளத்தில் போராளிகள், ஆயுதங்கள், உணவுப்பொதிகள் ஏற்றியபடியே வருவார். இப்பணிகளை ஆற்றும்போதெல்லாம் அவருக்கு பயணக்களைப்புத்தீர தூக்கம்வரும். ஆனால், அவர் தூங்காமலே அதிக நாட்களைக் கழித்தார்.

விடுதலைப்போர் மாற்றங்களை ஏற்படுத்தும் சூழலில்தான் இந்தியப்படை வந்திறங்கியது. இந்தியப்படை வருகையோடு தமிழர்கள் தமிழீழ இலட்சியம் இன்னும் கொஞ்ச நாட்களில் ஈடேறப்போகிறது. என்கிற கற்பனையில் மிதந்தார்கள். ஆனால் அண்ணனோ போராளிகள் மீதும் அவர்களின் இலட்சியத்தின் மீதும் அவர்களின் மனநிலைகளின்மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவராக இருந்தார்.

இந்தியப்படையுடன் பகை மூளத் தொடங்கியது. மாறிய இப்போர்ச் சூழல் மக்களின், போராளிகளின் இதயத்தை சுமையாக்கியது. இந்தியப்படையின் புலித்தேடல்களால் மக்கள், போராளிகள் அடுத்தடுத்து துன்பங்களையே சுமந்தார்கள். அவர்கள் எதிர்நோக்கிய இடர்கள் எண்ணிலடங்காது. அந்தச் சுமைகளையும், துன்பங்களையும், இடர்களையுமே இந்தி யப்படை அவர்களது வாழ்வின் நிலையான முதலீடாக கொடுத்தது.

அண்ணன் மாலையும் இரவும் சந்திக்கும் அந்த இனிய அந்திப்பொழுதில் போராளிகளுடன் குசு குசுத்துக்கொள்வார். தாய் மண்ணை முற்றுகையிட்டுள்ள இந்தியப்படை எங்கு சஞ்சரிக்கிறது, எப்படி சஞ்சரிக்கப் போகிறது, என்கிற தகவல்களை போராளிகளிடம் சொல்வார். போராளிகளுக்கு அபாய அறிவித்தல் வழங்கும் சிவப்புக்கொடி காட்டுபவராக இயங்கலானார்.

போராளிகள் இரவில் படுத்துத் தூங்கினால் விடியும் போது உயிருடன் இருப்பார்களா?

போராளிகள் பொழுது கருகிக் கொண்டதும், இருள் போகாத அதிகாலையிலும் உயிருடன் முகாம் திரும்புவார்களா? என எல்லோர் மனதில் எண்ணங்கள் எழுந்து மடிந்த காலம் அது.

அக்காலத்தில்தான் இருள் நீங்கிய அதிகாலைப் பொழுதிலும் கடற்கரை மணல் பரப்பில் மோதிய சிற்றலைகள் மத்தியிலும் துப்பாக்கி ரவைகளின் ஓசை அண்ணனின் காதுகளைத் துளையிட்டன. அவரின் புலன் போராளிகள் மீதே மேய்ந்துகொண்டிருந்தது.

அவர் தன்னுடன் உண்டு, உறங்கி, மகிழ்ந்து, வாழ்ந்த பிரியமுள்ள போராளிகள் பற்றியே சிந்திக்கலானார். எங்கோ ஓரிரு பறவைகளின் அலறிய பயங்கர ஓசையும் அவருக்கு திகிலையே ஏற்படுத்தியது. அப்பதட்டமான சூழலில் அண்ணன் இருக்கும் போதே போராளிகள் இந்தியப்படையின் சுற்றிவளைப்பில் காயப்பட்டிருப்பதாகவும் அவ்விடத்திற்கு அவரை உடன் வரும்படியும் அழைப்பு வந்தது.

அண்ணன் விரைவாக அவ்விடத்திற்கு சென்றார். அவரைக் கண்டதும் காயப்பட்ட போராளிகளுக்கு புத்துணர்வு மேலிட்டது. அவர்கள் உடம்பெல்லாம் உற்சாகம் பெற்றது. அவர் காயப்பட்ட போராளிகளான சங்கர், கண்ணதாசன், மணி ஆகியோரை அபாய சூழ்நிலையிலிருந்து முதல் அப்புறப்படுத்தினார். சேருவில காட்டுப்பகுதி ஒன்றில் பாதுகாப்பான மறைவிடத்தில் வைத்து பராமரித்துவந்தார்.

அண்ணன் போராளிகள் மீது அன்பு செலுத்துவதில் வள்ளல் என்பதை அவர் தன் சேவைகள்மூலம் வெளிப்படுத்தினார். அவர்கள் அருகே மருத்துவப் போராளி லிங்கன் அமர்ந்து இரவும் பகலும் சேவையாற்ற அண்ணனும் இணைந்து சேவைபுரிந்தார். போராளிகளின் காயங்கள் சீழ் கட்டி, ரணமாகி வலியெடுத்த போதெல்லாம் அவர்களின் இதயத்தை தடவிவிட்ட நல்லகுணவாளனாக அவர் இருந்தார். காயப்பட்டவர்கள் புதிய உத்வேகம் பெறும்வரை அண்ணன் அரும்பாடுபட்டார்.

தொண்ணூறுகளில் சிங்களப்படையுடன் போர் ஆரம்பமாகியதனால் நிலவிய போர்ச சூழலில் அண்ணன் வெருகல் இளங்கோ முகாமில் போராளிகளோடு தங்கியிருந்தார். அங்கு இரவு மெல்ல மெல்ல புகுந்துவிட பட்டப்பகல் போல் வெண்ணிலவு வெளிச்சம் தர, முகாம் முன் வெட்டை போராளிகள் குதூகலிக்கும் இடமாக மாறும். மாறிய இனிய சூழலில் அண்ணனும் போராளிகளுடனே கலந்து இருப்பார்.


அண்ணன் ஒரு நாள் மாவீரன் மேஜர் மூர்த்தியோடு தாக்குதல் ஒன்றிற்காக சென்றிருந்தார். அத்தாக்குதலுக்கான இடத்தினை இனங்காட்டுவதிலும் சரி, வெடிப்பொருள் பொதியை நிலத்தில் புதைப்பதிலும் சரி, புதைக்கப்பட்ட நிலப்பகுதியை புதுமெருகுகொடுத்து உருமறைப்புச் செய்வதிலும் சரி அண்ணனின் உழைப்பு ஆழமாக கலந்தே இருந்தது.

அவர் தாக்குதலுக்கான எல்லா ஏற்பாடுகளையும் பூரணமாக நிறைவேற்றிய திருப்தியில் இருந்தார். விடிந்தால் தாக்குதல். அத்தாக்குதல் வெற்றிகரமாகவே அமைந்தது. அதில் ஐந்துக்கு குறையாத சிங்களப்படையாட்கள் கொல்லப்பட்டதாக அரசவானொலியும் உறுதிசெய்தது. இச்செய்தியும் தாக்குதல் காட்சியும் அண்ணனின் மனதில் பெரும் உற்சாகத்தையும் நிறைவையும் அளித்தது.

அண்ணனின் சுதந்திர தாகத்திற்கான பணிகள் தாக்குதலுடன் தொடர்புபட்டும் போர்க்காலத்தில் மிகவும் இக்கட்டான., மிகவும் நெருக்கடியான, மிகவும் வேதனையான காலகட்டத்தில் போராளிகளுக்கு பெரும் துணையாக இருந்தும் வந்துள்ளன. அவர் எச்சூழ்நிலையிலும் வாழத்தக்க மனவல்லமை படைத்தவராக இருந்த போதிலும் அவர் சொற்ப நாட்களாக உற்சாகம் இழந்தவராகக் காணப்பட்டார்.

அவரோடு ஒன்றாகப் பழகித் திரிந்த, ஒன்றாகப் பாடுபட்ட போராளிகள் பலர் இப்போது அண்ணனோடு இல்லை.

(24 ஆம் பக்கம் பார்க்க)



**அண்ணன் போராளிகள் மீது அன்பு செலுத்துவதில் வள்ளல் என்பதை அவர் தன் சேவைகள் மூலம் வெளிப்படுத்தினார். அவர்கள் அருகே மருத்துவப் போராளி லிங்கன் அமர்ந்து இரவும் பகலும் சேவையாற்ற, அண்ணனும் இணைந்து சேவை புரிந்தார். போராளிகளின் காயங்கள் சீழ் கட்டி ரணமாகி வலியெடுத்த போதெல்லாம் அவர்களின் இதயத்தை தடவிவிட்ட நல்ல குணவாளனாக அவர் இருந்தார். காயப்பட்டவர்கள் புதிய உத்வேகம் பெறும்வரை அண்ணன் அரும் பாடுபட்டார்.**

யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிக்கும் திட்டத்துடனான நீண்ட படை நடவடிக்கையின் முதற்கட்டமாக High tide நடவடிக்கை முடிய- அடுத்தகட்டமான நடவடிக்கைக்கு சிங்களப்படைகள் தீவுகளில் தயார்ப் படுத்தத்தொடங்கின.

இதேவேளை 1991 ஒகஸ்டில் 'விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்' என கடற்படை அணி பெயர் சூட்டப்பட்டு வளரத்தொடங்கியது. கடற்புலிகளின் ஆரம்பகட்ட செயற்பாடுகள் சிங்கள கடற்படை தளங்கள் நிறைந்த தீவகத்தில் முனைப்புற்றன. கடற்புலிகளின் தாக்குதல் தளபதிகளான (வீரச்சாவைத் தழுவிய) லெப்டினன் கேணல் சார்ள்ஸ், லெப்டினன் கேணல் கங்கை அமரன் ஆகியோர் தீவகத்தில் சிறிலங்கா கடற்படையினரை தாக்குவதற்காக குறிவைத்து செயற்பட்டனர்.

முதல் கட்டமாக கடற்படை படகுகளை தாக்குவதற்காக கடற் கண்ணிவெடிகளை புதைக்கின்ற நடவடிக்கைகள் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. கடற்புலிகள் அனலைதீவு அருகாக (நயினாதீவுக்கு வடக்காக அனலைதீவு உள்ளது) போட்ட கடல் கண்ணிவெடி செய்த சாதனையை இங்கு குறிப்பிட வேண்டும்.

1. தீவகத்தை முழுதாக ஆக்கிரமிக்கும் அடுத்த கட்ட படை நடவடிக்கைக்காக சிறிலங்காப் படைகள் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தன.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 18



இதற்கான ஒரு கூட்டத்துக்கு 1991 செப்ரெம்பர் 21 இல் திட்டமிடப் பட்டிருந்தது. யாழ் சிறிலங்கா படைத்தளபதி பிரிகேடியர் விஜயவிமலரத்ன- ஊர்காவற்றுறையிலிருந்த 10ஆம் பிரிகேட் தளபதி பிரிகேடியர் T.G திலகரட்ண. வடகடற்படை தளபதி கப்டன் H.R. அமரவீர ஆகியோர் எலரா கடற்படைத்தளத்தில் சந்திக்க அந்த ஏற்பாடு இருந்தது. மூவரும் படையினரை தரையிறக்க இடங்களை தெரிவு செய்யும் திட்டங்களை தீட்டினர். கூட்டம் முடிய- கப்டன் அமரவீர டோறா படகொன்றில் விஜய விமலரத்தின. திலகரத்தின ஆகியோரை காங்கேசன்துறையில் இறக்குமாறு கட்டளையிடுகிறார். மறுநாள்தான் நயினாதீவு கடற்படை தளத்திற்கு செல்ல தயாராகிறார்.

கப்டன் அமரவீர- தன் ஊடகத் தொடர்புத் துறை அதிகாரி லெப்டினன் கொமாண்டர் ரூபசிங்கவுடன் 'கூகர்' வகை படகில் ஏறி நயினாதீவு கடற்படை தளத்துக்கு பயணமாகிறார். நயினாதீவினை சென்றடைந்து அங்குள்ள முகாமில்தன் அதிகாரிகளுடன் கடற்படை நடவடிக்கைகள் குறித்து அவர் கலந்துரையாடுகின்றார். கலந்துரையாடல் முடிந்தது. அமரவீர. ரூபசிங்க உட்பட கடற்படையினர் காரைநகருக்கு திரும்புவதற்காக தாம் வந்த கூகர் வகை படகில் ஏறுகின்றனர். கொக்ஸன் (படகோட்டி) படகு இயந்திரத்தை இயக்குகிறார். இயந்திரம் இயங்க மறுக்கின்றது. பல தடவை முயற்சியின் பின் அடுத்ததாக நின்றிருந்த P126 குறியீட்டு இலக்கம் கொண்ட கூகர் படகின் அதிகாரிகள் - கடற்படையினர் தாவி ஏறுகின்றனர். படகின் மேற்புற பின்புற ஆசனங்களில் அமரவீர. ரூபசிங்க ஆகிய அதிகாரிகள் அமர்ந்திருக்கின்றனர். படகு நயினாதீவிலிருந்து புறப்படுகின்றது. அதிவேகமில்லாமல் மிதமான வேகத்திலேயே படகு சென்றது. படகு புறப்பட்டு 10 நிமிடங்கள் ஆகியிருக்கும் அனலைதீவு அருகாக அது நகர்ந்து கொண்டிருந்தது.

திடீரென பாரியதொரு வெடியொலி கடலில் - படகின் அடியிலிருந்து கிளம்பியது. நீர் பெரும் திரளாக மேல் எழுந்து சிதறியது. அதில் கடற்படை படகும் சிதறிவீழ்ந்தது. அமரவீர. ரூபசிங்க படகின் கொக்ஸன் ஆகியோர் பின்புறமிருந்து தூக்கியெறியப்பட்டனர். கண்ணிவெடி முன்புறம் வெடித்ததனால் படகு முன்புறமே சிதைந்தது. சம்பவம் காலை வேளையில் தான் நடந்தது. படகின் முன்புறமிருந்த 07 கடற்படையினர் கண்ணிவெடி வெடித்தவேளையிலேயே கொல்லப்பட்டனர். இவர்கள் P126 படகில் செயற்பட்டவர்கள் வடகடற்படைத் தளபதி கப்டன் அமரவீர தூக்கி கடலில் வீசி எறியப்பட்டவர் அல்லவா.

படகின் சிதறிய கண்ணாடி இழை சின்னத் துண்டுகள் அமரவீரவின் கண்களை தாக்கியதால் அவரால் எதையும் பார்க்கமுடியவில்லை. கையொன்று அசைக்கப்பட முடியவில்லை லெப்டினன்ட் கொமாண்டர் வீசி எறியப்பட்ட நிலையில் ஒரு மிதப்பு கவசம்(Jacket) கிடைக்க அதை பிடித்துக்கொண்டு தொங்கினார். ஒரு பக்கம் கொக்ஸன் தத்தளிக்கிறார். வட கடற்படை தளபதி சிங்களத்தில் அலறுகிறார். என்ர கால் உடைஞ்சு போச்சு (மகே அகுலா கடிலா)கை உடைஞ்சு போச்சுது. (மகே அத கடில) என யாரும் தப்பியிருந்தால் தன்னை காப்பாற்றட்டும் என அமரவீர அலறுகிறார். மிதப்பு கவசத்தில் தொங்கிக்கொண்டிருந்த ரூபசிங்க அமரவீர அருகில் வந்து காயமடைந்த கைக்கு கிடைத்த துணியொன்றினால் கட்டு போடுகிறார்.

அந்த 03 கடற்படையினரும் அந்த இடத்தில் உதவிக்காக அவலப்பட்டுக்கொண்டிருந்தனர்.

இரண்டு மணி நேரம் கழித்து ஒரு படகு தூரத்தில் வருவதை அவர்கள் கண்டனர். தமக்கு உதவவரும் படகு என அவர்கள் மகிழ்ந்திருந்தனர். ஆனால் அதிலிருந்தது ஆப்பு. வந்தது கடற்புலிகளின் படகு அது. ரூபசிங்க நீரில் மூழ்கி ஒளிந்தார். அமரவீர கடலில் வீசப்பட்டு கிடந்த தமது படகின் கேஸ் சிலிண்டரில் மறைந்துகொண்டார்.

கடற்புலிகள் படகு - சிறிலங்கா கடற்படை படகு ஒன்றை கண்டுவிட்டு திசை திரும்பினர். மேலும் அரை மணிநேரம் கழித்து காரைநகரில் இருந்து வந்த சிறிலங்கா கடற்படைப் படகு 03 கடற்படையினரையும் காப்பாற்றிக்கொண்டுசென்றது.

கடற்படைப் படகு சென்ற பின் கடற்புலிகளின் தாக்குதல் தளபதி லெப்டினன் கேணல் சார்ள்ஸ் குழுவினர் கடலின் அடியாக நீர் மூழ்கிச் சென்று கடற்படைப் படகில் பூட்டப்பட்டிருந்த ஆயுதங்களை கழற்றி மீண்டனர்.

கடற்புலிகள் பிரகடனப்படுத்தப்பட்டபின் கடற்படை உயர் அதிகாரியையே அவலப்படுத்தி- இழப்பை ஏற்படுத்திய முதல் தாக்குதல் அது.

துருவன்





# வன்னியில் காணப்பட்ட தொல் ஈமச் சின்னங்கள்


கிளிநொச்சியின் அக்கராயன் நிலை ஆற்றின் படுகையோரம் ஒரு தொல் இடுகாடு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தமிழர்களின் தொல் வரலாற்றில் நாகரிக சமூகமாக எழுச்சி பெற்றபெருங் கற் காலத்துக்குரிய சான்றுகளுடன் இந்த ஈமக்காடு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் மேலாய்வு மூலமே இது கண்டறியப் பட்டது. தொல்லியல் ஆய்வாளர் ந.குணரட்ணம் மேற் கொண்ட தேடலின் மூலம் இந்த ஈமக்காடு கண்டுபிடிக்கப்பட்டது.

பெருங்கற்காலத்துக் குரிய 'கற்குவை' வகையிலான ஈமக்காடே அது. கற்குவை எனப்படுவது இறந்தவர் அடக்கம் செய்யப்பட்டு- அந்த மையத்தை அடையாளப் படுத்த மூட்டை வடிவத்தில் கற்களை அடுக்கி வைக்கும் முறையாகும். ஏற்கனவே வவுனியா மாமடுவில் (இன்று சிங்கள குடியேற்றம்) கல்வட்ட ஈமச்சின்னம் கண்டறியப் பட்டது.

அக்கராயன் நிலைஆற்றுக்கரையில் கற்குவை ஈமக்காடு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 9 கற்குவை அடக்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த கற்குவை அடக்கங்கள் எவையும் அகழ்வு செய்யப் படவில்லை. நிலையற்ற அரசியல் போக்கு காரணமாக இந்த தொல்லியல் மையங்கள் அகழ்வு செய்யப்பட்டு சிதைந்து போய்விடும் என்ற நோக்கிலேயே அகழ்வு செய்யப்படவில்லை. ஆனால் தொல்லியல் மையங்களை தேடி அடையாளப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிராந்தியத்தில் 3பெரும் தொல் ஈமஅடக்கங்கள் 1999 முதல் 2002 வரை ந.குணரட்ணம் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டு





அடையாளப்படுத் தப்பட்டுள்ளன.

அக்கராயன் நிலை ஆற்றுக் கரையோரம்

1.கற்குவை ஈமக்காடு

2.அக்கராயன் ஆறுக் கரையோரம்- கற்றகடு ஈமக்காடு

3.மண்டைக்கல்லாறு கரையோரம் பழைய முறிகண்டியில் கற்களால் அமைக்கப்பட்ட ஈமக்காடு

அக்கராயனில் கலவலப்பு ஆற்றுக் கரையோரம்- செங்கற்களால் அமைக் கப்பட்ட வட்டவடிவ பாரிய ஈமச்சின்ன கட்டுமானம். இவற்றில் கலவலப்பு ஆறின் கரையோரம் இருந்த ஈமச்சின்னக் கட்டுமானம் அறிவியல் முறைப்படி முழுமையாக அகழ்வு செய்யப்பட்டு அதன் முழு உருவம் வெளிப்படுத்தப்பட்டது. ஒரு நீள் சதுர சுற்றுக்கட்டை அடிப்புறத்தில் இது கொண்டிருந்தது. அது கிரவல் கற்களால் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நுழைவாயில் படிகள் இருந்தன. பிரதான வாயில் புறத்தில் இருந்து மறுமுனையில் சதுரவடிவ பீடத்தின் நடுவில் கிணறு போன்று வட்டவடிவில் செங்கற்களால் கட்டப்பட்டு இருக்கும் மையத்துள் ஈமப்பொருட்கள் சிறிய தாழிகளில் வைக்கப்பட்டிருந்தன. எரிக்கப்பட்டு அதன் சாம்பல் அவற்றில் இடப்பட்டிருந்தன. தாழிகளுள் உலோக வளையங்கள் (மோதிரவகை) சிறிய சிமிழ் என்பனவும் படிகக்கல் ஒன்று உள்ளிட்டவை இருந்தன. அந்த ஈமச்சின்னம் பற்றிய முழுவிபரங்களும் இங்கு தரப்படவில்லை. பிறிதொரு தடவை அதனை முழுமையாக தரலாம். அது ஒரு தனித்தவிரி வான விடயம்.






இந்த ஈமச் சின்ன கட்டுமான சான்றுகள் அறிவியல் ரீதியாக வெளிநாடு ஒன்றில் C-14 காலக்கணிப்புக்குட்படுத் தப்பட்டது. அந்த காலக் கணிப்பின் அடிப்படையில் அது 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டது.

இது ஈழத்தமிழரின் மிகுதொன்மை கட்டுமானங் கலையை பண்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

குரலோன்



# மண்ணின் மைந்தர்களின் கதை

கிளிநொச்சி மீனாட்சி அம்மன் கோவிலடியின் மேற்குப்பக்க எதிரியின் நகர்வு தொடர்ந்திருந்தது. சுதந்திரப் பொன்விழாகாணும் சிங்கள தேசத்தின் வரலாற்றை இரைமீட்கச் செய்வதற்கான உளவியல், அரசியல் மூலோபாய சண்டையைத் தொடங்கி இப்போது இரண்டு நாளாகிவிட்டது.

02.02.98 அன்று கிளிநொச்சியின் முன்னரங்கிலும் இடம் வலமாக தொடங்கியசண்டை எமக்கு இராணுவ ரீதியில் பெரிய வெற்றியை தரா விட்டாலும்,



மான குண்டுச்சத்தங்கள் அவனுக்கு இழப்பை ஏற்படுத்திவிட்டதை உறுதிப்படுத்தியது. அன்று காலை தொடங்கி மாலைவரை நடந்த தாக்குதல்களில் தனது துப்பாக்கிகளாலேயே பல எதிரியை கொன்றிருந்தான். பல சண்டைகளுக்குச் சென்றிருந்த அவன் திறம்பட சண்டை செய்வதாக அவனது பொறுப்பாளர்கள் தொடர்ந்து பெருமையுடன் சொல்வதுண்டு.

வைப்பதிலும் எதிரியிடமிருந்து எடுக்கின்ற ஆயுதத்தினால் அவனுக்கே திருப்பி அடிப்பதிலும் எப்போதும் குறியாக இருப்பான்.

ஆமிக்காரன்ட துவக்க எடுத்து அவனுக்கே அடிக்கவேனும் என்று அடிக்கடி சொல்லுவான்.

இதன் ஓர் அங்கமாகத்தான் 4ஆம் திகதி சண்டையில் எதிரியின் உந்துகணை செலுத்தியால் (ஆர்.பி.ஜி) அவனுக்கே அடித்து அவனை சேதப்படுத்தினான். சிலசண்டைகளில் எதிரியின் ஏதாவது ஒரு ஆயுதம்கிடைத்துவிட்டால் அதனால் சண்டைசெய்வதை தனது வாழ்வின் ஒரு சந்தோசமான நிகழ்வாக நினைத்து சண்டைசெய்வான். எதிரியின் சினைப்பரை எடுத்து ஒரு சண்டையில் இரண்டு எதிரியைச் சுட்டுக்காயப்படுத்தியவன், அதைவிட இளவீரன் ஆர்.பி.ஜி உதவியாளனாக இருக்கும்போது தனது முழு உந்துகணைகளையும் எடுத்து எதிரிக்கு எதிராக அடித்துவிட்டு அவனது புதிய உந்துகணைகளை எடுத்து வைத்துக் கொள்வான்.

கிளிநொச்சிச் சண்டையில் பல நாட்கள் அவனது செயற்பாடுகளை நேரிலே கண்டு

கின்ற எறிகணைகளை பார்த்துப் பார்த்து காப்பெடுத்து ஓடி ஓடி சில உந்துகணைகளை எடுத்துவந்து குவித்தான்.

அவன் வந்து தனது நிலையில் இருந்தபோது கண்ணெதிரே ஒரு போராளியின் வீரச்சாவை கண்டுவிட்டான். நகர் வானில்வந்துகொண்டிருந்த போராளி ஒருவனை எதிரியின் பதுங்கிச் சுடுபவன் சுட்டுவிட்டான். அந்தப் போராளி தலைக்காயத்துடன் சுருண்டு கீழே விழுந்துவிட நாம் எல்லோரும் உடனே ஏதோ ஒன்று செய்ய வேண்டியவர்களாய் இருந்தோம். எதிரி எங்கிருந்து சுட்டான் என்பது தெரியாமல் போய்விட்டது. ஆனால் இள வீரனின் கூர்மையான பார்வை எதிரியை இனங்கண்டுவிட்டது.

தான் எதிரியின் இரண்டு மறைவிடத்தை அவதானித்துவிட்டதாகச் சொன்னவன், வழமையான பொறுமையுடன் ஒரு சூட்டை மாத்திரம் செய்யக்காத்திருந்தான்.

சண்டையின் நிலைமை மற்றவரை பொறுமையுடன் இருக்க விடாது தடுத்தது.

டேய் இளவீரன் எந்த இடத்தில் என்று சொல்லடா...

எந்த இடத்தில் இருக்கிறான் என்று சொல்லடா... அடிப்பம் என்று கேட்டுப்பார்த்து விட்டோம்.

ஆனால் அவன் சொல்லவே இல்லை. டொக்டர் அந்தா அந்தக் கழிப்பிடத்தை பார்த்துக்கொள்ளுங்கோ, நான் ஒரு பீ.கே எடுத்துவாறன் என்று சொல்லிவிட்டு ஓடிச்சென்று

ஒரு நிமிடத்திலேயே நடந்திருந்தன. எதிரிக்கு சேதம் ஏற்பட்டிருக்கவேண்டும். காரணம் அவனிடமிருந்து எந்த எதிர்ப்பும் வரவில்லை. அதேபோல் ச்ண்டை முடிந்ததும் கிளிநொச்சி மீட்பின் பின் அந்த இடத்தில் எதிரி செத்துக்கிடந்ததற்கான தடயங்கள் கிடந்தன. கட்டடத்தொகுதியில் ஒரு லெப்ரினன், அவனது பெயர் சயந்த சில்வா என இராணுவ அடையாள அட்டையில் எழுதப்பட்டிருந்தது. அவனும செத்ததற்கான தடயம் இருந்தது.

இளவீரனின் தாக்குதலுக்குப் பிறகு அந்த இடத்திலிருந்து எந்த எதிர்ப்பும் வரவில்லை. இப்படியாக இளவீரன் குறித்த போராட்ட வெற்றிகளுக்கு காரணமாய் இருந்தவன். இப்படி எத்தினையோ சாதனைகளுக்கு மத்தியில் இத்தாவில் சமரில் 27 நாட்கள் சாதனை செய்துவிட்டு 21.04.200 அன்று தாயக மண்ணை முத்தமிட்டான் எங்கள் இளவீரன்.

# எதிரியின் ஆயுதமே அவனுக்கு எமனாக வேண்டும்

டிப்போ சந்தி உட்பட குறிப்பிட்டளவு இடத்தை கைப்பற்றியிருந்தோம். இதன்தொடராக சுதந்திரதினமான 04ஆம் திகதி தனது நிலையை உறுதிசெய்ய முன்னேறினான். காலை 10 மணியளவில் ஆரம்பமான எதிரியின் நடவடிக்கையை எதிர்கொள்ள தீர்மானித்துவிட்டவர்களாய் நிலையெடுத்திருந்தபோது எதிரி தனது தலையில் தானே மண்ணை வாரிப் போடுவதுபோல் முன்னேறத் தொடங்கிவிட்டான். சண்டையும் ஆரம்பித்தது.

களத்திலே எல்லாப் போராளிகளையும் போல் அவனும் களமாடத்தொடங்கிவிட்டான். தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருந்தான். திடீரென அவனது கையில் ஒரு உந்துகணைச் செலுத்தி புதிதாய் காணப்பட்டது. எடுத்தவேகத்தில் ஒரு இலக்கை அவதானித்து அடித்துவிட பெரிய சத்தத்துடன் அந்த உந்துகணை சென்றுவெடிக்க எதிரியில் ஒருசிலர் மாத்திரம் ஓடத்தொடங்கிவிட்டனர்... அதிலும் சில எதிரி நொண்டியபடி ஆயுதமும் இல்லாமல் ஓடியது தெரிய, மேலும் ஒரு உந்துகணையை அந்த இடத்திற்கு அடிக்கிறான். இப்போது அங்கிருந்த எதிரிகள் கொல்லப்பட்டுவிட்டனர். அங்கே புகைமண்டலம் எழும்பிவிட்டது. அங்கு என்ன நடக்கிறது என்று சொல்லமுடியாமல் இருந்தாலும் எஞ்சிய எதிரி அணிகள் வானவேடிக்கைபோல தீர்த்த ஏராள

இந்தப்பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியவன் மாவீரன் லெப். இளவீரன் (செல்லத்துரை தவேந்திரன்) உருவத்தில் கட்டையாக இருந்தாலும் உள்ளத்தில் பரந்த எண்ணம் கொண்டவன். போராட்டத் தேவை கருதி சிறுவயதிலேயே போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவன் போராட்டத்தில் இணைந்த நாளிலிருந்து வீரச்சாவு அடையும் வரை அவனது செயற்பாடும் விசுவாசமும் நேர்மையும் பிறரிடத்தில் உதவிசெய்யும் மனப்பான்மையும் அவனை போராளிகளிடத்தில் தனியான மதிப்பு மிக்க மனிதனாய் ஆக்கியது.

இளவீரன் என்றால் எல்லோரும் எதற்கும் அவனையே நாடுவார்கள். காலில் குத்திய முள்ளிலிருந்து, கிணற்றில் விழுந்த வாளிவரை எடுப்பதற்கு எல்லோரது அழைப்பிற்கும் உரியவன் லெப். இளவீரனே. போராட்டத்தில் தெளிவும், உறுதியுமிக்க வீரன். இவன் சண்டை பிடிக்கும் வடிவமே ஒரு வித்தியாசமான [illegible].

எதிரியை உன்னிப்பாக அவதானித்தே அடிப்பான். தேவையில்லாத எந்தச் சூடுகளையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சுடமாட்டான். ஒரு ரவையோ, அல்லது ஏதாவது ஒரு இராணுவப் பொருளோ எங்குகிடந்தாலும் அதை எடுத்து பத்திரப்படுத்தி

திகைத்தேவிட்டோம். ஒரு சம்பவம் என்றுமே அழியாத நினைவாய் பதிந்துவிட்டது. கிளிநொச்சிச் சண்டை ( ஓயாத அலைகள் -02) ஆரம்பித்த மறுநாள் சண்டை மிகவும் மோசமாக இருந்தது. இப்போது எதிரியின் பக்கமே வெற்றிபெறுவதற்கு வாய்ப்பு இருந்தது. அந்தளவிற்கு எதிரியின்

**— க. மிரேசு —**

தாக்குதல் அமைந்திருந்தது. கிளிநொச்சி கடைத்தொகுதியின் கட்டடங்களுக்குள்ளும், இடிபாடுகளுக்குள்ளும் இருந்து எதிரி தாக்கிக் கொண்டே இருந்தான். நிலைமை மோசமாக இருந்ததை இளவீரன் உணர்ந்துகொண்டவனாய் நாம் நிலை எடுத்து இருக்க, அங்குமிங்குமாய் ஓடினான்.

அண்ணோய் எங்கேயும் ஆர்.பி.ஜி செல் கிடக்குதோ என கேட்டுக்கொண்டே சென்றான்.

அங்கே களப் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த ஒரு பெண் போராளி கை நீட்டி ஓர் இடத்தை காட்டினாள். இளவீரன் அங்கே ஓடிப்போனான் எதிரியின் எறிகணைகள் அந்த இடத்தை துளையிட்டுக் கொண்டே இருந்தன. விழுந்து வெடிக்

எங்கோ கிடந்து ஒரு பீ.கேயை ரவைத்தொடருடன் எடுத்துவந்தான்.


டொக்டர் கொஞ்சம் முன்னுக்குப் போவோம் என சொல்லிவிட்டு... நாங்கள் தவண்டு பின்னே செல்ல அண்ணா நானும் வருகிறேன் என்று புகைப்படம் எடுக்கும் பெண் போராளியும் வந்தாள்.

எதிரி மறைந்திருந்து தாக்கிய கழிப்பிடமும், கட்டடத்தின் ஒரு பகுதியையும் நோக்கி இளவீரன் எழுந்து நின்று கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு செல்லை அடித்துவிட்டு அடுத்தசெல்லை, கட்டட துவாரத்திற்குள் அடித்தான். சமநேரத்தில் இரண்டு இடத்திற்கும் பீ.கே சூட்டை வழங்கியது. 100 ரவைகள் சொற்பநேரத்தில் பறந்தன. இவைகளை படம் எடுத்துக்கொண்டாள் அந்தப் பெண் போராளி.

இவையெல்லாம்





# புள்ளியிலிருந்து...

அவன் நடக்கத்தொடங்கினான். நீண்ட தெருவினோரம் நடந்தபடியே இருந்தான். மூச்சிரைக்க மூச்சிரைக்க ஒரு சீரற்று இருந்தது நடை. கால்கள் ஏனோதானோ எனத்தான் இயங்கின. என்னசெய்ய? நடக்கத்தானேவேணும். கால்கள் சோரவும், தேகம் இளைக்கவும் சோர்வுடன் அவன் நின்றசைந்தான். ஒவ்வொரு அடிவைப்புக்களிலும் அவனது அவசரமும் அவாவும் கூடவே தெரிந்தது.

மனிதர் எவரையும் கண்டு கொள்ளமுடியாத அந்த தெரு மூடிய பற்றைகளால் அலங்கரித்திருக்க, இருமருங்கும் சடைத்து வளர்ந்திருந்த பற்றைகள் தெருவை அலங்கரிக்கிறதா? அன்றி அழிக்கமுனைகிறதா? என அவனால் ஊகிக்க முடியவில்லை. அந்நிலையில்.

பற்றைக்குள்ளிருந்து ஏதோ பாய்ந்தோட அவன் திடுக்குற்றான் மனம் திக்கென்றது. ஏதோ ஒன்றினது நடமாட்டமாகத்தான் அது இருக்கும். என்றெண்ணியபடி நடை தொடர அதன் வேகம் இன்னும் இன்னும் அதிகரித்தது. உடல் தளர்கிறதாயினும் ஒரு கணம் நிற்கமுடியவில்லை அவனால்.

தெருவில் சில வாகனங்களின் இறுக்கப்பதிந்திருந்த தடம் கண்டான். அது அச்சத்துள் அமிழ்த்தியிருக்கவேண்டும். இருந்தாலும் தன் பயணம் இறுதிவரை தளராமலே இருக்க வேண்டுமென்ற அவா.

நடந்தான் மிக வேகமாக, காற்று இலேசாக வீசியது வீதியில் ஒரு சில முகங்களை காணமுடிந்தது. புரியாத அறியாத முகங்கள். என்றாலும் ஒரு சிறு புன்னகையை மட்டும் சம்பிரதாயத்திற்கு உதிர்க்க முடிந்தது. அந் நிலையில் யாரோடும் நின்று கதைக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை.மௌனத்தோடு விரைந்த தன் பிரியத்துக்குரிய வளை அவன் திரும்பிப் பார்த்தான். அவள் குழந்தையோடு மல்லாடியபடி நடந்து கொண்டே இருந்தாள். அவளுக்கும் சுமக்க முடியாத சுமைதான். எங்கோ ஒரு மூலையில் இருந்து தொடங்கிய பயணம் கடலையும் நீண்ட தெரு வெளிகளையும் தாண்டி இன்னும் நகர்ந்து கொண்டே....

சலிப்பும், பெரும் சோர்வும் எஞ்சியதாய்ப் போனது. பயணத்திற்கான காத்திருப்பு, அலைச்சல் இவைதானோ காரணம். அவனுக்கு மட்டுமல்ல அவளுக்கும் கூட பெரும் சலிப்புத்தான். காலத்தை கணக்கெடுத்த பிறவிகள் இரண்டும்.

இவன் சற்றுவேகமாய்த் தான் நடந்தான். அவளுக்கு அவனோடு கூடி நடக்க முடியவில்லை அவனுக்கு பரிச்சயமாகிப்போன பாதை அவள் தன் வாழ்வின் முதல் தரிசனம் பெறும் வீதி அது. அவனுக்கு தான் நடைபயின்ற வீதியில் மீள கால் பதித்த வேகம்.

வீதியை யாரும் இறங்கி துப்புரவு செய்யத் துணியவில்லை. ஏனோ? யாருக்கும் இது பற்றிய சிந்திப்பும் அறவே இல்லாமல் போயிற்றோ? கேள்விமேல் கேள்வி.

இந்தவீதியால் தானே 'லைன்பஸ்' ஓடுவதாக பலரும் கூறினார்கள். ஆனால், எப்படி..? பாதையில் வாகனங்களின் சுவடுகள் இறுகப்பதிந்திருந் தனதான். அது எவற்றின தாக இருக்கும். சந்தேக நிழல் பரவியிருக்க, மனம் இருப்பின்றிச்சுழன்றது.

சிறுவயதில் அப்பாவின் சயிக்கிளை எடுத்து ஏறிமிதித்து விழுந்தெழும்பிப் பழகிய அந்தச் சுவடுகள் கண்ணில் நிழலாடியன. பள்ளிக்கூடம் போய்வரும்போது கால் கல்லில் பட்டு இடறி விழுந்து எழுந்து போய் வந்த சுவட்டைத் தேடினான்.

கடந்த காலங்களை சப்பித்தின்று தொலைத்தபடியே இருப்பின்றி சுழன்றது மனசுப்புயல்.

அவள் அவனோடு மூன்று வருசங்களுக்கு முன்தான் கூடினாள். அவனோடு கூடிப் பிறந்ததுகள் எதுவும் கூடியிருக்க கொடுத்துவைக்கவில்லை.

தம்பியன்தான் போன போக்கில் எங்கு தொலைந்தானோ? அவன் போன திசை தேடிப்பிடிக் கவே பலமாதங்களாயிற்று. அவன் முகம்பார்கவென்று அலைந்த இடங்கள்? அப்பாடா...! நினைக்கவே தலை சுற்றியது ஒரு தடவை இலங்கை முழுவதையும் சுற்றி இருக்கலாம் போல்...

அவனும் அம்மாவும் தம்பியைத் தேடி புழுதி படிந்த தெருக்களையும், அடர்ந்த காட்டு வீதிகளையும் பல நாட்கள் கடந்து ஒவ்வொரு படி ஏறி இறங்கியும் கிடைக்காத பாக்கியம் பலமாதங்களின் பிறகுதான் கிடைத்திற்று. அதுவும் அம்மாவின் மரணவீட்டில்தான். அம்மாவுக்கு தம்பியை காணக் குடுத்துவைக்க வில்லை. கடைசிவரைக்கும் தேடித்திரிந்த அந்தத்தாயின் கண்கள் மூடும்வரை அவனைத் தேடியே இருந்திருக்கும்.

தம்பி படித்தது குறைவுதான். ஆனா சின்ன வயதில் எல்லாத்தொழிலும் ஓடியாடிச் செய்யக்கூடியவன். அவன் போனது குடும்பத்துக்கு இழப்புத்தான்... தம்பிஇல்லாட்டியும் அவன் தன் சுமைதீர உழைக்க வேண்டியே இருந்தது. தன்னோடு இருந்த தங்கை அவளுக்காக உழைப்பதே வாழ்வாகியது. பெருத்திருந்த குடும்பம் ஆற்கண்பட்டதோ இப்போது அடிகொடியற்றுப் போயிற்று.

அம்மா போய் ஆறுமாதம் கூட இல்லை. தம்பி ஏதோ ஒரு புயலுள் அள்ளுண்டு போனானாம். உடம்பு கூட கிடைக்கவில்லை. குடும்பமே ஈடாடிப் போனது. தங்கையும் தம்பியின் செய்தி கேட்ட ஐந்தாம் நாள் எங்கோ தொலைய, அவன் தம்பியை தேடியதுபோல் தேடி அலையவில்லை அப்போது.

அவன் தனித்தெருவில் விடப்பட்டான். ஒண்டிக்கட்டையாகி எதுவுமற்ற தனிப்பிறவியென ஆயிற்று அவன் வாழ்வு. அந் தரித்து அலைந்தான். ஆறுதல் தர எவருமற்று சுமைமேல் சுமை யெனப் போனது வாழ்வுச் சக்கரம்.

எங்கோ ஒரு மூலையில் உறவினரோடு சிறிது காலம். அவனுக்குத் தெரியும் உறவுகள் நிலைக்காதென்று. கொஞ்சக்காலம் நல்லமாதிரி நடக்குங்கள் பிறகு ஒரு பக்கத்தால இடிக்கத் தொடங்குங்கள் எவ்வளவு காலத்துக்குதான் அணைச்சுவைச்சிருக்குங்கள். எல்லாம் நாடகம்தான்...

அவன் நிதானித்துத் தான் அந்த முடிவை அப்படி எடுத்திருந்தான். யாருக்கும் எதுவும் புரியாமல் எங்கோ ஓடி மறைந்தான்.

ஊரில் பலரும் எதை எதையோவெல்லாம் பேசிக் கொண்டனர். அவன் யாரையோ கூட்டிச்சென்றுவிட்டதாகவே பலரும் பேசினர். அது கூட அவன் சொந்தங்களுக்கு ஏதோ அவமானத்தை உண்டுபண்ணி விட்டதாம் ஏனோ...?

அவள் அந்த ஊர்க்காரிதானாம். ஓரிரு நாட்களில் உண்டான காதல் திடீரென்று கதைத்துப்பின் ஓட்டமாக மாறி எங்கோ ஒருமித்து வாழ நேர்ந்திற்ற அவன் நிதானமாய்த்தான் அதைச் செய்தான் அவனுக்கு தன் முடிவில் திருப்தியும், நேர்மையும், தெளிவும் இருந்தது. தன் வாழ்வுக்கான அடுத்த அடிவைப்பில் அவன் இதைச் செய்வதை தவிர வேறு எதை அவனால் செய்யமுடியும்?

வேறு ஏதாவது இருந்தால்...?

திருமணவாழ்வில் கூட கொஞ்சக்காலம் அலைச்சலும், சலிப்பும்தான். பிறகு நிதானமாக சரியானதொரு வழிபிடித்துச் சென்று கொண்டிருந்தான்.

முதல் பிறந்த குழந்தையோடு அவனுக்கு குருச்சந்திர யோகம் அடித்தாற் போல வாழ்வு கொஞ்சம் இனிப்பாயிருந்தது. என்றாலும் அவனை ஏற்காத உறவுகளின் எதிர்ச்சுவர்கள் பெருஞ்சுவராய் அவனால் தாண்ட முடியாத அளவுக்கு எழுப்பப்பட்டுக் கொண்டேயிருந்தன.

அவனால் என்ன செய்ய இயலும்? போனால் போகுதெண்டு அவளோடு அவன் மீளத்தன் பிறப்பிடத்திற்கே பயணிக்கத் தொடங்கினான். அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

"இன்னும் கனதூரமே போகவேணும்?" மௌனம் சிதற உதிர்ந்த அவளின் வார்த்தையோடு அவன் அவளை திரும்பிப் பார்த்தான். அவளும் இளைக்க இளைக்க நடந்தபடியே இருந்தாள் பின்னே கொஞ்சம் தள்ளி.

சற்று ஆறிநின்று. அவள் நெருங்கும்வரை ஆறுதல் மூச்சு விட்டான். இவ்வளவு தூரம் நடந்து வந்ததே பெரும் காரியம். இனி...?

அவள் அவனருகில் வரவும். இவன் அவளைப்பார்க்கவும் அவளில் சலித்த பார்வை இளையோடியிருந்தது. அவனுக்கும் அது புரியாமலில்லை - குழந்தை அவளின் தோளில் முகம் புதைத்து உறங்கியபடி...

"கிட்டத்தான் வீடு" குழந்தையை வேண்டித்தன் தோளில் போட்டான். அவள் அவனிடமிருந்த "சூட்கேசை" வேண்டினாள். அவன் குழந்தையை சுமந்தபடி எட்டிநடந்தான். பெரும் சத்தத்தோடு புளுதிகிளம்ப வந்த மூடிய வாகனம். முடிந்தளவு நின்று கரையொதிங்கினான். கொஞ்சம் தானும் நடை வீதியை விட்டுப்போனாலும் என்ன நடக்குமோ...? யாருக்குத்தெரியும்.

வாகனம் கடந்துபோக புளுதியும் மெல்ல அடங்கியது. நடந்தான் அவளும்தான்.

ஒழுங்கையின் முகப்பில் நின்றபெரியவேம்பு எங்கு போயிற்று - ராசண்ணையின்ர வீடு...? நெஞ்சு கனக்க திரும்பி மேற்கு ஒழுங்கையில் இறங்கவும் - கண்கள் வழியைத் தேடின. அந்த ஒற்றைப்பாதை பற்றை மூடிக்கிடக்க. நடக்க கால்கள் மறுத்தன. குழந்தையை அவளிடம் கொடுத்தான். மெல்ல மெல்ல பற்றைகளை விலத்தி நடந்தான். யாரோ முன்பு நடந்து போய் வந்த சுவடு. அதைப்பார்த்தபடி நடந்தான். உடல் வியர்த்தது - குழந்தை கண்விழித்துச் சிணுங்கியது.

"கவனமப்பா"

"ம்"

" உதுக்கை என்னத்துக்கு..." அவன் எதுவும் பேசவில்லை. வீட்டின் முகப்பைத் தேடினாள்.

நெஞ்சு திக்கென்றது. எல்லைகள் எதுவுமற்று - கூரையின்றி பற்றை மூடிக்கிடக்க மண் திடலென அது...

கண்கள் நம்பிக்கையற்று இன்னுமின்னும் எதையோ தேடின உள்ளே நுழைந்தான். வீட்டின் உட்புறங்களில் புற்றெடுத்திருந்தன. கால்கள் நடுங்கின. பக்கத்தில் அவளில்லை. முற்றத்தில் நின்றிருந்தாள். கண்கள் திசையின்றிச் சுழல பாம்பொன்று சீறி எழுந்தோடியது. அது சாரையாகத்தானிருக்கும். திடுக்குற்று வெளியே ஓடிவந்தான். நெஞ்சுபடபடக்க.

"என்ன...?" என்றபடி அவள் அவனையே பார்த்தாள். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எடுத்து மறு அடிவைக்கத் திராணியற்று அண்ணாந்து வானத்தைப் பார்த்தான். மழை வருவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை அவன் கண்களுக்கு.

கவிதைகள்

உயிரின் நிழல்
நெடுஞ்சாலையின் ஓரம்
சரிந்து கிடப்பதாய்
வந்து சொன்னார்கள்.
சூரியனின் நிழல்
உடைந்த கண்ணாடித் துண்டில்
மையங்கொள்வதைப்போல
தெருக்களின் சரிவில்- நிழலின் தயவில்
உயிர் நடுங்குகிறது- ஓர்
தீபத்தைப்போல...
விபத்தில் சிதைந்த முகத்தையும்
ஊர்திகளின் கோலத்தையும்
துண்டிக்கப்பட்ட கால்களையும்
வைத்துக்கொண்டு
விம்முகிறது காலம்...
ஒரு மரத்தின் வெற்றிடத்தில்
கோடரி சாத்தியுள்ளது- நெடுகலும்
காற்றுக்குச் சொரிந்த பூக்களை- மரம்
நாளையும் உதிர்க்குமென
நம்புதல் முடியாது.
சற்று நேரத்தில்
காலமும் இறந்துவிட்டதென
வந்து சொன்னார்கள்.
குருதி உறையாமல்,
ஈக்கள் மொய்காமல்,
மனிதரும் வராமல்- சிதைந்தபடி
காலம் கிடக்கும்-விபத்தில்
சிதைந்த முகத்தின்
புன்னகையையும்.
பேரிரைச்சலோடு சரிந்த மரத்தின்
கடைசி உயிரின் வாசத்தையும் - இனி
எந்தத் தேவதையாலும்
மீட்கமுடியாது.
கூடவே சூரியனையும்,
மலர்களையும்தான் -இனி
அஞ்சலிப்பதற்கு
பூக்களுமில்லை
மனிதர்களுமில்லை- ஏன்
கடவுளர்கள் கூட இல்லை.

முல்லைக்கமல்

*எதிர்காலப் பக்கங்கள்*
*எங்கேயென்று தெரியாமல்*
*நாம் தவித்திருந்த*
*அவலம் தோய்ந்த நாட்கள்*
*மனக்கண்ணில் தெரிகிறது.*

*வாழ்ந்துகொண்டே சாகவும்*
*செத்துக்கொண்டே வாழவும்*
*எமக்குக் கற்றுத் தந்தது*
*இந்த நாச யுத்தம்தான்!*


*தொலைந்துபோன இருப்புகளை*
*உயிர் பிரிந்த உறவுகளை*
*விட்டு விட்டு தொலைதூர*
*இடப்பெயர்வுகள் தொடர்கையில்*
*இனிமையே இல்லாத பக்கங்களாய்*
*தொடர்ந்தது எம் வாழ்க்கை!*

*வறுமையின் நிரந்தர இருப்பும்*
*பசி பட்டினியின்*
*நித்தியத் தாக்கமுமாக*
*நிரந்தரமில்லாத வாழ்வின்*
*நிஜ தரிசனங்கள்!*

*நிலா ஒளியை விளக்காக்கி*
*நித்தமும் அதுவுமின்றி*
*இருண்டுபோனது எம்வாழ்வு!*
*விண் மேகங்கள் மோதி*
*மழை பொழிவதில்லை.*
*வானம் பொழிந்ததெல்லாம்*
*தணல் கக்கும்*
*குண்டு மழைதான்!*

*இப்போது சிறு இடைவெளி.*
*எனினும் பயமாக இருக்கிறது*
*மீளுமோ அந்த நாட்களென்று.*

ச.முருகானந்தன்



# இலக்கியப்பகிர்வு

# புரிதல்/புரியாமை

இலக்கியம் புரிதல் என்பது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. காலம் காலமாக தொடர்ந்துவரும் பிரச்சினை அது மட்டுமல்ல தீர்க்கப்பட்ட பிரச்சினையாகவோ தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையாகவோ கருதக்கூடியதும் அல்ல.

புரிதல் என்கின்ற பிரச்சினையே ஒன்றை அறிதல் தொடர்பாகவே ஏற்படுகின்றது. அறிதலில் அக்கறை உள்ளவனே புரிதல் தொடர்பில் கேள்வியை ஏற்படுத்துகின்றான்.

ராஜேஸ்குமார், ரமணிச்சந்திரன் கதைகளை அல்லது அதை ஒத்ததாக உள்ள படைப்புக்களை வாசிக்கும் ஒருவன் புரிதல் தொடர்பில் பிரச்சினையை ஏற்படுத்தமாட்டான். ஆக புரிதல் பற்றிக்கதைப்பவன் தொடர்ச்சியாக தேடலின் அறிவில் உள்ளவனே என்பதை யாரும் மறுக்கமுடியாது.

சாதாரணமாக ஒரு பாடத்தைப் படிக்கும் ஒரு மாணவன் அல்லது ஒரு கணக்கைச்செய்து முடிக்க முனையும் மாணவன் அதனை புரியமுடியாவிடின் அல்லது செய்யமுடியாவிடின் ஆசிரியர் துணையை நாடுவான். அது தவிர்க்க முடியாதது.

அவ்வாறு கேட்கும் மாணவனை ஆசிரியர் கேலிசெய்ய முடியாது. கிண்டல் அடிக்கமுடியாது. விளங்கப்படுத்த / புரியவைக்க ஆசிரியர் முனைவார். இதுவே பொதுவான செயற்பாடும் இதனையே இலக்கியத்திற்குப் பொருத்திப் பார்க்கலாம்.

காலாதிகாலமாக இலக்கியத்தில் புரியாமை பற்றி யாரும் கதைக்கப் புறப்பட்டால் கேலியாக சிரிப்பதும் கொடுப்புக்குள் நகைப்பதும் தொடர் கதையாகிவிட்டது. புரிதல் தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பவர்கள் மலினப்படுத்தப்பட்ட வாசகர்களாக முத்திரை குத்தும் பழக்கம் அன்றும் இருந்தது. அந்தக் கருத்துக்களை அப்படியே விழுங்கிக்கொண்டவர்கள் இன்றும் அதனையே செய்கின்றனர்.

உண்மையில் புரிதலின் மட்டம் என்ன ரெடிமெட் உடுப்புக்கள் போல அவரவர் அளவுகளுக்கு ஏற்ப அவர்களுக்குரிய புரிதல் இருக்கும். இந்த இடத்தில் நாடகவழக்கு அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும் என்னும் தொகுப்பு நூலில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் கருத்துக்களில் ஒரு பகுதியைப பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

"நாம் பார்க்கும் படிக்கும் அனைத்தும் எமக்குப் புரியவேண்டும் என்பது மிகமிக இன்றியமையாத ஒன்றே" விளக்கமாகப் புரிந்துகொள்வதே தொடர்பாடலின் பயன். இருப்பினும் எல்லாம் புரிந்த நிலையில்தான் நாம் கலை இலக்கியங்களை நயக்கிறோமா? வெள்ளத்தனைய மலர் நீட்டம் போன்று எமது அறிவு, அனுபவம், ஆர்வம், பரிச்சயம் என்பவற்றுக்கு ஏற்ற வகையிலேயே நாம் ஒன்றை நயக்க முடியும் எமக்குப் புரிந்துவிட்டது. என்று நாம் நினைத்துக்கொள்ளும் அனைத்தும் எமக்கு உண்மையில் புரிந்துதான் உள்ளதா? புரிதலுக்கும் விளக்கத்துக்கும் எல்லை இருக்கிறதா? நல்லதொரு படைப்பு ஆழ அகலம் அறிய முடியாத பிரபஞ்சத்தைப் போன்றதாக இருந்துகொண்டு அதனை நாடு தோறும் நலநலமானபொருளையும் அழகையும் தந்து நிற்கும் என்பார்களே "பயன் தொறும் பண்புடையாளன் நட்பு" என்பார்களே.

மேலும் அனைவரும் ஒரு படைப்பினூடே ஒன்றைத்தான் புரிந்து கொள்கிறார்களா? நன்றாக இருக்கிறது என்று நாலுபேர் சொன்னால் அவர்கள் ஒவ்வொருத்தரும் ஒரே அளவில்தான் புரிந்துகொண்டிருக்கிறார்கள் எனக்கொள்ளமுடியுமா?

அத்தோடு படைப்பாளி சொல்ல நினைத்ததனைத்தையும் நுகர்வோர் புரிந்துகொண்டு விடுகிறார்களா? படைப்பாளி நினைத்தவை கூட நுகர்வோர் தம்முள் வந்து நிற்பினும் நிற்கும். என்பது சிறந்த படைப்புக்கள் விளைவிக்கும் மாய வித்தைகளில் ஒன்றல்லவா? நாம் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைப்பது போன்று படைப்பாளிகள் ஒன்றை நினைக்க நுகர்வோர் வேறொன்றை நினைப்பதில்லையா? கலை இலக்கியத் தொடர்பாடலில் இத்தனையும் இருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இவை அத்தனையும் இருப்பினும் தனது படைப்பு படைக்கப்படும் மக்கள் கூட்டத்தார் புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதையே எந்தவொரு படைப்பாளியும் விரும்புவான். தமது படைப்பு புரிந்து கொள்ளலுக்கு அப்பாற்பட்ட தளத்தில் நிற்கவேண்டும் என்று எந்தவொரு கலைஞனும் கருதமாட்டான்,

என்கிறார் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள்.

புரிதல் புரியாமை இந்தக் கோணத்தில் வைத்துத்தான் பார்க்க வேண்டும். புரிதல் மட்டங்கள் வேறாக இருப்பதனால் இதில் ஏற்ற இறக்கங்கள் உண்டு. அதன் காரணமாக ஒருவரை ஒருவர் கேலியாகப் பார்க்க முடியாது.

இதற்கான காரணத்தை குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"ரசனை, நயப்பு என்பன பரிச்சயத்தால் பழக்கத்தால் சூழலால் ஏற்படுபவை. நாம் வாழும் சூழல் எம்மைச் சிலவற்றுக்குத் திறந்துவிடுகிறது. அவற்றின் மத்தியில் வாழும் நாம் அவற்றுக்குப் பழக்கப்பட்டுவிடுகிறோம். பழக்கப்பட்டவை என்பதால் அவை எம்மைத்தொடர்ந்து கவர்கின்றன. அவற்றையே நாம் நயக்கின்றோம். தாயின் உணவுதான் பிள்ளைக்கு என்றென்றைக்கும் சுவை மிக்கது. பின்னர் படிப்படியாகவே தாரத்தின் பாகத்தைச் சுவைக்கப் பழகிக்கொள்கிறோம். இதில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதல்ல பிரச்சினை, இரண்டும் இரு வேறு வகையினவே அன்றித் தரத்தினவல்ல.

கலை இலக்கிய ரசனையும் இவ்வாறே, எனவேதான் ரசனையை நிலைக்குத்துக் கோட்டு முறையில் வைத்துஉயர்ந்தது, மத்திமம், தாழ்ந்தது என நோக்காது, அதனைக் கிடைக்கோட்டு நிலையில் வைத்து அதாவது ஒன்றின் பக்கத்தில் மற்றயதை சமநிலையில் வைத்து, நோக்குவது பிரச்சினையைத் தவிர்க்க உதவக்கூடும். ஒவ்வொரு ரசனையும் ஒவ்வொருவகையினது எனக்கொள்வதே மேலானது. ஒவ்வொருவகையும் அவை அவற்றை நயப்படுவர்தம் தேவைகளை நிறைவுசெய்து கொண்டே உள்ளன. இதுகலை இலக்கியங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக அமையும் ஒன்றல்ல. மனிதனது அனைத்து நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தி நிற்கும், உணவு, உடை, தொழில், பொழுது போக்கு, நட்பு, உறவு என மனித வாழ்வின் சகல துறைகளையும் இது உள்ளடக்கி நிற்கும்.

"புரியாமை" என்பது இன்று நேற்றுத் தோன்றிய ஒரு புதுமை அல்ல. எமக்கு மட்டும் தோன்றியுள்ளதொரு பிரச்சினையும் அல்ல, இது ஆதியும் அந்தமும் இல்லாததொரு பெரும் பிரச்சினை இதனைப் போக்கிப் புரிதலை ஏற்படுத்துவதற்காக எல்லாக்காலங்களிலும் எல்லா மக்கள் கூட்டத்தினரும் பலவாறு முயன்றுதான வந்துள்ளனர். அவ்வாறு முயன்றவிடத்தும் 'நூற்றுக்கு நூறு' என அனைவரும் புரிந்துகொண்டார்களா என்பது ஐயத்துக்குரிய ஒன்றே."

என குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுவது எவ்வளவு அர்த்த புஷ்டியானது. எந்தப்பிரச்சினையையும் யதார்த்தமாகவே பார்க்கும் சண்முகலிங்கம் அவர்கள் இதனையும் வெகு நுட்பமாக விளங்கப்படுத்தி உள்ளார்.



ஆனால் எங்கள் படைப்பாளர்களில் பலபேர் பட்டியலில் இடும்போது தங்களைத் தாங்களே சிறந்த படைப்புக்காரர்களாக பட்டியல் இடுவது போல ஏனைய படைப்பாளரின் படைப்புக்களை மட்டந்தட்டுவது போல-எல்லா இலக்கியங்களையும் விளங்கிக் கொண்டவர்கள் தாங்கள் தான் எனவும் நெஞ்சை நிமிர்த்துகின்றார்கள்.

ஆனால் படைப்பை புரிந்து கொள்ளல் என்பதற்கு எல்லை விதிக்கமுடியாது. எனக்குத்தான் புரிகிறது உனக்கு புரியாது என்று கூறவும்முடியாது.

வாசகர்கள் தங்கள் தங்கள் தளங்களிலேயே தங்கள் தங்கள் புரிதல்களை வைத்திருப்பார்கள். ஒவ்வொரு தளமாக மாறும்போது புரிதல்களின் தளங்களும் மாறிக் கொண்டே இருக்கும்.

எனவே புரியாமை பற்றிய சர்ச்சைகளும் விவாதங்களும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அவ்வாறான சர்ச்சைகளை உருவாக்குபவர்களை யாரும் கொச்சப்படுத்தவோ, மலினப்படுத்தவோமுடியாது.

படைப்பாளியை இப்படி எழுது அப்படி எழுதாதே என்று யாரும் கட்டளையிட முடியாது என்று எவ்வாறு அழுத்தம் திருத்தமாக கூறுகின்றோமோ வாசகனையும் இன்ன படைப்பைத்தான் வாசிக்க வேண்டும் என யாரும் கட்டாயப்படுத்த முடியாது. வாசிப்புத் தொடர்பான சுதந்திரம் வாசகனுக்கும் உண்டு.

"வாசகன்தான் விரும்பியதைத் தெரிவுசெய்து படிப்பான். மற்றையதைப் பற்றி அவன் அதிகம் அக்கறை கொள்ளமாட்டான்." என குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் கூறுகின்றார்.

இவ்வாறு மட்டுப்படுத்த தான் விரும்பியதை வாசிக்காமல்-விருப்பமில்லாதவற்றையும் வாசிக்க முனையும் ஒருவன்தான் புரிதல் பற்றிய சர்ச்சைகளை, விவாதத்தை உருவாக்குகின்றான்.

எனவே புரிதல் தொடர்பான சர்ச்சையை உருவாக்கும் வாசகனே வாசிப்புத் தளத்தில் தொடர்ந்து இயங்குபவன் புதிய எல்லைகளை நோக்கி நகர்பவன், அவன் செக்கிழுக்கும் மாடுபோல தொடர்ந்து ஒரே தளத்தில் உழன்றுகொண்டிருக்கமாட்டான்.

ஆகையினால் புரிதல் பற்றிய விவாதங்களை எழுப்பும் ஒருவரை மூன்றாந்தர வாசிப்புக் காரன் என மட்டம்தட்டி தம்மை அதிமேதாவிகளாகக் காட்ட முனைவது ஒரு பொருத்தமில்லாத நடவடிக்கையே.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## வீடு

# எமக்குள் இருக்கும் பலவீனங்களே எமக்கு எதிரி!

சிறு குழந்தைகள் கேட்கும் பொருட்களை வாங்கிக் கொடுப்பதற்கு பெற்றோர்கள் சில வேளை மறுப்பதுண்டு. ஆனால் குழந்தைகள் அழுது, கத்தி, நச்சரித்து அடம்பிடிக்க ஆரம்பிக்கும், அத்தொல்லை தாங்காமல் பெற்றோர்கள் பிள்ளைகள் கேட்கும் பொருட்களை வாங்கிக் கொடுத்து விடுவதுண்டு.

மனித பலவீனத்தைப் பயன்படுத்தி காரியங்களை சாதித்துக் கொள்ளும் வித்தையை - அதன் முதல் பாடத்தை குழந்தை கற்றுக் கொள்ளுகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்வதில்லை. குழந்தை அம்மா அல்லது அப்பாவின் பலவீனத்தை புரிந்து கொள்கின்றது. மற்றவர்களை தனக்குத் தேவையான படி கையாளும் நடத்தை குழந்தையின் மனதில் ஸ்தாபிக்கப்படுகிறது. தேவையான பொழுது ஒவ்வொரு முறையும் குழந்தை இச் செயல் முறையைப் பின்பற்றும் என்பதில் சந்தேகமில்லை. சிறு குழந்தைகளுக்கே இத் திறமை இருக்குமானால் நாலும் தெரிந்து வளர்ந்தவர்கள் இந்தத் திறமையை எப்படிப்பயன்படுத்துவார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நம்மோடு உறவுகளை பேணி பழகிவரும் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது நடத்தைகளிலிருந்து நமது உணர்வுகளை தூண்டி மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தி உளரீதியான அழுத்தத்தை தோற்றுவிப்பது எப்படி என்ற அறிவினைப் பெற்றுக்கொள்கிறார்கள். நாம் அந்த சந்தர்ப்பத்தில் செய்யவேண்டிய சரியான காரியத்தை விடுத்து அந் நெருக்கடியை தோற்று வித்தவர்களை சாந்தப்படுத்த முனைகின்றோம். ஈற்றில் நாம் மற்றவர்களால் பயன்படுத்த பட்டு விட்டதை எண்ணி வருந்துகின்றோம்.

நாம் நம்முடைய பலவீனங்களை இனங்கண்டு அவற்றை குறைதத்துக்கொண்டால் நம்மை கட்டுப்படுத்தி மற்றவர்களால் நம்மை அவர்கள் விரும்புகிற படி பயன்படுத்திக் கொள்ளவிடாது தடுத்துக்கொள்ளலாம். பலவீனங்களைப் பயன்படுத்தி மனிதர்களிடம் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளும் வழிமுறையில் பின்வரும் பலவீனங்களே பெரும் பங்கு வகிக்கின்றன என்று மனோதத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

நெகிழ்ச்சியான, இளகிய மனதுடையோர் பெரும்பாலானோர் பிரச்சினைகள் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதை விரும்புவதில்லை. தமது இளம் வயதில் வீட்டில் தமது பெற்றோர் அடிக்கடி சண்டை இட்டுக் கொள்வதில் வெறுப்படைந்தவர்கள் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதை பயங்கரமானதாகக் கருதுகிறார்கள். அதேநேரத்தில் தமது சண்டை சச்சரவுகளை தந்திரமாக மறைத்துக் கொள்ளும் பெற்றோரும் தமது குழந்தைகளை உலகம் பற்றிய உண்மையான சித்திரத்தை புரிந்துகொள்ள விடாமல் தடுத்து விடுகிறார்கள். ஒரு பொய்யான உலகத்தில் அவர்கள் வாழத் தொடங்குகிறார்கள். சண்டை சச்சரவு ஏற்படுவதாகக் காட்டி இத்தகையவர்களிடம் காரியங்களை சாதித்துக் கொள்ளலாம்.



சிலர் தமக்கு நேர்ந்ததெல்லாம் துரதிர்ஷ்டமே தாம் ஒரு பாவப் பட்ட ஜென்மம் என்பதாகக் காட்டிக் கொள்வார்கள். இந்தவலையில் நாம் அகப்பட்டுக்கொள்ளாமல் இவர்கள் நம் உணர்வுகளோடு விளையாடுகிறார்களா? இவர்கள் சம்பந்தமாக நாம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள் அரிது, ஏதாவது தவறு செய்ய குழந்தைகளை பெற்றோர்கள் தண்டிக்க முயலும்போது சிரித்து வேடிக்கை காட்டும் பெற்றோர்களை கட்டித் தழுவி முத்தமிட்டு தப்பிவிடும் கெட்டிக்கார குழந்தைகளை நாம் கண்டிருக்கிறோம். குழந்தைகளின் இந்தச் செயற்பாடு பெற்றோர்களின் மனதில் எந்த உணர்வை அக மகிழ்வை ஏற்படுத்துகின்றதோ அதனையே வளர்ந்தவர்களிடம் புகழ்ச்சி ஏற்படுத்துகின்றது.

புகழ்ச்சி நமது அறிவை மயக்கி உண்மையை திரிவுபடுத்தி மற்றவர்களை திருப்திப்படுத்த நம்மை தூண்டுகின்றது.

தாம் மற்றவர்களால் விரும்பப்படமாட்டோமோ மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டோமோ என்ற சந்தேகம் சிலரிடம் பலவீனமாக இருக்கிறது. மற்றவர்கள் நம்மை ஏற்றுக்கொள்வது நமது சுய மரியாதையிலும் நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற மரியாதையிலுமே தங்கியுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நம்மெல்லோருக்கும் குறிப்பிட்ட சில குடும்பத்தொழில், சமூக பொறுப்புக்கள் உண்டு. இப்பொறுப்புக்கள் குறித்து சிலர் நம்மை விமர்சித்துக்கொண்டும் அடிக்கடி குற்றம் சுமத்திக்கொண்டும் இருப்பார்கள். இதன்மூலம் நமக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு நாம் பலவீனர்களாகக்கூடும்.

நமது பலவீனங்களை நாம் குறைத்துக்கொள்வது எப்படி. நீங்கள் மற்றவர்களால் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களை எண்ணிப் பாருங்கள். உங்கள் மன உணர்வுகளை தூண்டிவிட அவர்கள் என்ன செய்வார்கள், என்ன செய்தார்கள் என்பவைகளை கவனத்திற்குகொண்டு வாருங்கள், அப்படி உங்கள் உணாவுகளை தூண்டிவிட்டவர்கள் யார் என்பதை கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் உணர்வுகளை தூண்டிவிடும் நபர்களையும் அவ் உணர்வுகளையும் சரியாக இனங்கண்டு கொண்ட பின்பு மற்றவர்களால் நீங்கள் பயன்படுத்தப்படுவதை தவிர்த்துக்கொள்ள அத்தகைய நபர்கள் எத்தகைய உணர்வுகளை தூண்டிவிடும் சந்தர்ப்பத்தில் நீங்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை நீங்கள் முறையாக தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

உங்கள் பலவீனங்களை முற்றாக நீக்கிவிட முடியாவிட்டாலும் அவைகளை குறைத்துக்கொள்ளலாம். உங்கள் மனதில் அந்த பலவீனமான எண்ணங்கள் ஏற்படும் போது எச்சரிக்கையாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.


**இ.றஜித்**

## இறால் பொரியல்




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| இறால் பெரியது | -1/4கிலோ |
| தக்காளி | -1/4கிலோ |
| தனியாத் தூள் | -2கரண்டி |
| மிளகாய்த்தூள் | -2கரண்டி |
| வெங்காயம் பெரியது | -1/4கிலோ |
| இஞ்சி பூண்டு விழுது | -2கரண்டி |
| உப்பு, மல்லி | -தேவையான அளவு |
| எண்ணெய் | -6கரண்டி |
| கறிவேப்பிலை | -தேவையான அளவு |



**செய்முறை**

இறாலை நன்றாக சுத்தப்படுத்திக் கொள்ளவும். தக்காளி, வெங்காயத்தை சிறிதாக நறுக்கவும் தாச்சியில் எண்ணெய் ஊற்றி காய்ந்தவுடன் வெங்காயம் தக்காளி இஞ்சி, பூண்டு, இறாலை போட்டு வதக்கவும்.

தக்காளி சுருளும் போது தனியாத்தூள் மிளகாய்த்தூள் உப்பு சேர்த்து அரைகப் தண்ணீர்விட்டு வேகவிடவும்.

அடிக்கடி கிளறிக் கொண்டேயிருக்கவும். தண்ணீர் சுண்டி பொரியல் பதம் வந்ததும் இறக்கி விடவும்.

## சிறப்பான வாழ்வுக்கு சேமிப்போம்

சேமிப்பு எல்லா உயிர்களிடமும் இருக்கும் ஓர் இயற்கைத் தூண்டுதல்! எறும்பைப் பாருங்கள்: எவ்வளவு சிறிய உணவுப் பொருளானாலும் எவ்வளவு அக்கறையுடன் எடுத்துக்கொண்டுபோகிறது! ஒட்டகத்தின் 'பாதுகாப்புப் பெட்டகங்கள்' உடலில் உள்ளன பல நாட்களுக்குரிய தண்ணீரும் உணவும் அதன் உடலில் சேமிப்பாகின்றன. குரங்கு, மீன்கொத்தி, மாடு முதலியவைகளும் உணவை உடலில் சேமிக்கின்றன. நாமும் கூட பல உயிர்ச்சத்துக்களைத் தேவையானபோது உபயோகிப்பதற்காகச் சேமித்துக்கொள்கிறோம். தேனீ....? அது ஒரு சுயநலமில்லாத தலைசிறந்த 'சேமிப்பாளர்'...

ஆனால் நாம்தான்....

சேமிப்பது என்பது எதிர்பாராத செலவுகளுக்காக மட்டுமல்ல; எதிர்பார்க்கும் திருமணம், மேற்படிப்பு, முதுமைக் கால உதவி, முதலீடு முதலியவைகளுக்காகவும் தான். பெருகும் தேவைகளை ஈடு கட்டுவதும் சேமிப்பே தேவைகள் எதிர்காலத்தில் பெருகும் போது வருமானம் சிறியதாகும்; விலைகளின் ஏற்றத்திற்கும் ஊதிய உயர்வுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது! இவைகளுக்கெல்லாம் 'கைகொடுக்கும் ஒரே கடவுள் சேமிப்புதான்.

## இப்படிச் செய்யலாம்...

*முகம் பார்க்கும் கண்ணாடியை தேயிலையினால் துடைத்தால், அழுக்கு நீங்கி கண்ணாடி பளபளவென்று இருக்கும்.*

* * *

*திடீரென்று சுளுக்கிக் கொண்டால், ஒரு கரண்டி தேங்காய் எண்ணையில் சிறிது கற்பூரத்தை பொடியாக்கி போட்டு காய்ச்சி, சுளுக்கிய இடத்தில் சூடு வரத் தேயுங்கள். சுளுக்கு அகன்று விடும்.*

* * *

*நகைகளை பஞ்சில் சுத்தி வைப்பதால் புதுப் பொலிவுடன் இருக்கும்.*

* * *

*மாமிசத்தை வேகவைக்கும் போது அதில் உப்பைச் சேர்க்கக் கூடாது. மாமிசம் நன்றாக வெந்தபிறகுதான் உப்பைச் சேர்த்து வறுவலோ குழம்போ,சூப்போ வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் வாசனை கமகம என்று வரும்!*

* * *

*காலையில் கறந்த பால் இரவுவரை பழுதடையாமல் இருக்கவேண்டுமா? பத்துப் பதினைந்து நெல்லைச் சுத்தமாக கழுவிவிட்டு, அந்தப் பாலில் போட்டு வையுங்கள். பால் இரவு வரைக்கும் கெட்டுப் போகாமல் இருக்கும்.*

* * *

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகு பொருள் வாணிபத்தின் பாரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—18**

பெயர்:.................................................

முகவரி:.................................................

.................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




## ஆச்சரியத்திற்குள்ளாகும் மக்கள் தொகை கணிப்பீடு

இன்னும் 297 ஆண்டுகளில் தான் உலகின் மக்கள் தொகை 900 கோடியாக உயரும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகைப் பிரிவு கூறியுள்ளது!

தற்பொழுது உலகின் மக்கள் தொகை 630 கோடியாக உள்ளது. தற்பொழுது உலக அளவில் பெண்களுக்குள்ள சராசரி பிள்ளை பெறும் திறனை அடிப்படையாகக்கொண்டு- ஒவ்வொரு பெண்ணும் தனது வாழ்க்கையில் இரண்டு பிள்ளைகளை பெறுகின்றார் என்கிறது சராசரி - 2300ஆம் ஆண்டு இறுதியில் உலகில் மக்கள் தொகை மேலும் 270 கோடி உயரும் என்று அந்தப் புள்ளிவிபரம் கூறுகிறது.

30 ஆண்டுகளுக்கு முன் இருந்த பிள்ளை பெறும் திறனின் அடிப்படையில் உலகின் மக்கள் தொகை 2075 ஆம் ஆண்டிற்குள் ஆயிரம் கோடியாக உயரும் என்றும், கூறப்பட்டது.

ஆனால், மக்கள் தொகை ஆய்வாளர்களை ஆச்சரியத்தில் தள்ளும் அளவிற்கு பெண்களின் பிள்ளை பெறும் திறன், வெகுவாக குறைந்ததன் காரணமாக அடுத்த 300 ஆண்டுகளில் மேலும் 300 கோடி மக்கள் தொகை உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது வருடத்திற்கு 13 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துவரும் ஆப்பிரிக்கக் கண்டத்தின் மக்கள் தொகை, அடுத்த 300 ஆண்டுகளில் 24 விழுக்காடாக உயரும். ஆனால், தற்பொழுது ஆண்டிற்கு 12 விழுக்காடாக உயர்ந்து வரும் ஐரோப்பாவின் மக்கள் தொகை 7 விழுக்காடாக குறையும்.

இதேகாலகட்டத்தில் 60 வயதுக்குத் தாண்டிய பின்னும் உயிர் வாழ்பவர்களின் எண்ணிக்கை தற்பொழுதுள்ள 10 விழுக்காட்டிலிருந்து 38 விழுக்காடாக உயரும். அதேபோல, உலக மக்களின் சராசரி வாழ்க்கைக் காலம் 26 வயதிலிருந்து 2300 ஆம் ஆண்டு 50 வயதாக உயரும்.

## பூமிக்கு ஆபத்து...!

பூமியின் காந்த மண்டலம் கடந்த 50 வருடங்களில் 10 சதவீதத்தால் பலவீனம் அடைந்துள்ளதாகவும் இந்த பலவீன விகிதத்தில் காந்த மண்டலம் தொடர்ந்து பலவீனமானால் பூமியின் முழுக் காந்த மண்டலமும் இன்னும் 1500 தொடக்கம் 2000 வருடங்களுக்குள் முற்றாக பலமிழந்துவிடும் என்றும் அமெரிக்க கவாட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்...!

இந்த காந்த மண்டலப்பலவீனம் தென் அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேல் நன்கு அவதானிக்கப்பட்டுள்ளது... இதனூடாகவே பூமிக்குமிக அருகில் சுற்றிவரும் செயற்கைக் கோள்கள் தமது மின் காந்த மண்டல அழிவு பூமிக்குள் பலமான மின்காந்த அலைகள், மின்னேற்றம் பெற்றதுணிக்கைகள் தடையின்றி உள்வர உதவி அளிக்கும் என்றும் இவை உயிரினங்களுக்கும் பூமிக்கும் அதன் காற்றுமண்டலக் கட்டமைப்புக்கும் ஆபத்தானவை ஆகவும் அமையலாம்...!

## உலகம் வெப்பமுறுதலால் மரணங்கள் அதிகம்...!

உலக வெப்பமுறுதலின் (Global Warming) பக்க விளைவால் 160,000 பேர் வருடம் தோறும் மரணிப்பதாக விஞ்ஞானிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.... மலேரியா, டயறியா மற்றும் போசனைக் குறைபாடுகள் போன்றவை இதற்கான முக்கிய நேரடிக்காரணிகளாக இருக்கின்றன... இது ஆபிரிக்க தெற்கு, தென்கிழக்காசிய பிராந்தியத்தையே மிகவும் பாதிப்பதாகவும்...சிறிய வெப்பநிலை உயர்ச்சிகூட பெரிய அளவில் நுளம்புப் பெருக்கத்திற்கு வழிவகுப்பதாகவும்... நுளம்புகள் பரந்து தேசம்விட்டு தேசம் பெருகவும் வகைசெய்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது...! அத்துடன் இவ் வெண்ணிக்கை 2020 இல் இருமடங்காகும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது... இந்த ஆய்வில் உலக சுகாதார ஸ்தாபனமும் (Wh/O) ஒரு பங்காளியாக இருந்தது. என்பதும் குறிப்பிடத்தக்கது...



த.அருவி




## தொய்வு பற்றிய சில அடிப்படைத்தகவல்கள்

தொய்வு அல்லது அஸ்மா நீங்கள் அடிக்கடி காணும், கேள்விப்படும் ஒரு நோயாகும். நூற்றுக்கு நாலு பேருக்கு இது காணப்படுவதாகச் சில மேல் நாட்டு ஆய்வுகள் கூறுகின்றன. நோயாளிகளுக்கு கடும் சுவாச அவஸ்தையையும், அருகில் இருக்கும் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் பீதி உணர்வையும் கொடுப்பதால், நோயாளிகள் மாத்திரமின்றி ஏனையவர்களும் இந்நோய் பற்றிய சில அடிப்படை உண்மைகளையும், உடன் சிகிச்சை முறைகளையும் அறிந்திருப்பது அவசியம்.

□ தொய்வு எந்த வயதிலும் தொடங்கலாம்: ஆனால் குழந்தைகளையும் இளம்பராயத்தினரையும் அதிகம் பீடிப்பதை நீங்கள் அவதானித்திருக்கக்கூடும். சிறு குழந்தைகளில் காணப்படும் தொய்வு அவர்கள் வளர்ந்த பின்னரும் அவர்களை விட்டகலாது அல்லற்படுத்துமா என்பதே பெரும்பாலான பெற்றோர்களின் அங்கலாய்ப்பு ஆகும். பெரும்பாலான குழந்தைகள் (60%மேல்) வளர்ந்து 13 வயது ஆவதற்கிடையில் இது முற்றாக மறைந்துவிடும். இல்லையெனிலும் சுலபமாகச் சமாளிக்கக்கூடிய அளவிற்குத் தணிந்துவிடும்.

□ சில குடும்பங்களில் இந்நோய் பரம்பரை பரம்பரையாகக் காணப்படுவதையும் நீங்கள் பல தடவை கண்டிருக்கக்கூடும். இது ஒரு பரம்பரை நோய்தான். ஆனால் நோயுள்ளவரின் குழந்தைகள் எல்லோரையும் இது நிச்சயம் பீடிக்கும் என்று சொல்லமுடியாது. அதேநேரத்தில் பரம்பரையில் இல்லாதவர்களுக்கு புதிதாகவும் தோன்றக்கூடும்.

□ இது ஒரு தொற்று நோயல்ல என்பது கட்டாயம் நினைவில் வைத்திருக்கவேண்டியசெய்தி. தொய்வு நோயாளிகளைப் பராமரிப்பதினாலோ அவர்களுடன்கூட வாழ்வதினாலோ ஒருபோதும் தொற்றாது.

□ அஸ்மாவின்போது சுவாசக் குழாய்கள் சுருங்குகின்றன. அவற்றின் மென்சவ்வுகள் (Mucus membrane) தடிப்படைகின்றன. சளி (Mucus) அவற்றை அடைக்கிறது. இதனால் சுவாசம் கடுமையான தொழிற்பாடாகிறது. மூச்சை உள்ளே எடுப்பதை விட, உள்ளெடுத்த காற்றை வெளியேற்றுவதே சிரமமாக இருப்பதை நோயாளர்கள் உணர்வார்கள்.

□ சிலருக்கு அஸ்மா திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து விடலாம். சிலருக்குச் சிறிது சிறிதாகத் தோன்றி பல மணிநேரமோ பல நாட்களோ கூட நீடிக்கலாம். சிலருக்குச் சாதாரணமாக இருக்கலாம். சிலருக்கு மிகக் கடுமையாக இருக்கலாம். ஆனால் நோயின் பாதிப்பு இல்லாத நேரங்களில் ஏனையவர்கள் போல சுகதேகியாக இருப்பார்கள்.

□ அஸ்மாவில் இரண்டு முக்கிய வகைகள் உண்டு. கடும் பனிக்குளிர் நேரத்தில் பலருக்கு அஸ்மா தோன்றுவதைக் கண்டிருப்பீர்கள். இதே போல் தூசி, மகரந்தம், பறவைச் சிறகுகள், விலங்குகளின் மயிர், சிலவகை உணவுகள் போன்றவற்றிற்கு அலர்ஜியினால் ஏற்படுவது முதல்வகை. இது பொதுவாகச் சிறு வயதிலேயே ஆரம்பித்துவிடும். இரண்டாவது வகை வளர்ந்தவர்களிடையே ஆரம்பிப்பது. இவர்களது அஸ்மாவிற்கு அலர்ஜி ஒரு காரணமாயிருப்பதில்லை.

□ அஸ்மாவின் முக்கிய அறிகுறிகளாக மூச்சு விடுவதில் சிரமம், ஒருவித ஓசையுடன் மூச்சு விடுதல் (இதையே 'அதுமாவின் இராகம்' எனக் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்.) நெஞ்சில் இறுக்கத் தன்மை, இருமல் ஆகியவற்றைக் கூறலாம். சிலரில் அதிலும் முக்கியமாக குழந்தைகளில் இரவில் ஏற்படும் தொடர்ச்சியான இருமல் மாத்திரமே, அஸ்மாவின் ஒரே அறிகுறியாக இருக்கலாம்.

## இயற்கை உணவு முளைக் கீரை

கீரைத் தண்டாக வளரும் தண்டுக்கீரையின் இளஞ்செடியே முளைக் கீரையாகும். முளைக்கீரை எங்கும் தாராளமாகக் கிடைக்கும். வருடம் முழுவதும் த்டையின்றிக்கிடைக்கும்.

முளைக்கீரை குளிர்ச்சி என்று நினைத்து சிலர் அடிக்கடி சாப்பிட பயப்படுவார்கள். முளைக்கீரை அப்படியொன்றும் அதிகக் குளிர்ச்சியைத் தரக்கூடியதல்ல.

முளைக் கீரையைப் பெரியோர் முதல் சிறுவர்வரை எவ்வித பயமின்றி தாராளமாகச் சாப்பிடலாம். முளைக்கீரையில் கல்சியம் நிறைய இருக்கிறது. இந்தக்கீரையில் உடலை வளர்க்கத்தேவையான A.B. உயிர்ச்சத்தும் உண்டு. இதில் கல்சியச் சத்து நிறைய இருப்பதால், வளரும் குழந்தைகளுக்கும், வாலிபர்களுக்கும் இதை அடிக்கடி கொடுத்துவரவேண்டும். இதனால் எலும்புகள் வலுவடைந்து நன்றாக வளரும் உடலையும் வளர்க்கும்.

உணவு சாப்பிடக்கூடிய குழந்தைகளுக்கு, தினசரி ஒரு எலுமிச்சம்பழ அளவாவது முளைக் கீரையைக் கடைந்து உணவுடன் சேர்த்துக் கொடுத்து வந்தால், குழந்தைக்கு எந்த நோயும் வராது. நோய்க்குக் காரணமான மலச்சிக்கல் என்பதே ஏற்படாது. வளரும் குழந்தைக்குத் தேவையான அத்தனை உயிர்ச் சத்துக்களையும் இந்தக் கீரைகொடுத்துவிடும்.

வயதானவர்களும் இதைத் தினசரி சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் ஏற்படாது. நரம்புகளுக்கும், எலும்புகளுக்கும் தேவையான சத்தையளிக்கும்.

குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிய அன்று மட்டும் கீரையை நிறுத்திவிடலாம். முளைக் கீரையைச் சாப்பிட்டு வந்தால் பல வியாதிகள் குணமாகும்.

- சொறி - சிரங்கு மறையும்.
- மூக்கு சம்பந்தமான வியாதிகள் நிவர்த்தியாகும்.
- மாலைக் கண் மறையும்.
- பல் நோய் குணமாகும்.
- நரம்புத் தளர்ச்சி பலமடையும்.
- பலவீனத்தைப் போக்கி பலம் உண்டாகும்.
- நல்ல பசியை உண்டு பண்ணும்.
- வயிற்றுப் புண்ணை ஆற்றும்.
- மலச்சிக்கலைப் போக்கும்.
- நீரைப் போக்கும்.
- நீரடைப்பை உடைக்கும்.
- எலும்புகளை வளரச் செய்யும்.
- கண் பார்வையைத் தெளிவு படுத்தும்.
- சோம்பலை ஒழித்து சுறுசுறுப்பை உண்டு பண்ணும்.
- அறிவைக் கூர்மையாக்கும்.




## இயற்கை தந்த கை

இயற்கை தந்த கை எதற்கு?
அள்ளி சோறு தின்பதற்கு.
இயற்கை தந்த கை எதற்கு?
அழுக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு.
இயற்கை தந்த கை எதற்கு?
ஆடை ஒழுங்காய் அணிவதற்கு.
இயற்கை தந்த கை எதற்கு?
அழகாய் எழுதிப் படிப்பதற்கு
இயற்கை தந்த கை எதற்கு?
அனுதினம் வேலை செய்வதற்கு.
இயற்கை தந்த கை எதற்கு?
அனைவருக் குதவி செய்வதற்கு.
இயற்கை தந்த கை எதற்கு?
அவரை நன்றாய் வணங்குவதற்கு.

## எங்கள் தவளை


தவளையை தெரியாதவர்களே இருக்க முடியாது. வீடுகளின் பழைய பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள், கிணறு, குளம் என்பவற்றில் பெரும்பாலும் தவளைகள் வசிக்கின்றன.

நீரிலும் நிலத்திலும். வசிக்கும் உயிரினங்களில் தவளையும் ஒன்று. தவளை தன் தலையை திருப்பாமலே நாற்புறமும் பார்க்கக்கூடியவகையில் கண்கள் அமைந்துள்ளன. ஏதாவது ஆபத்தென்றால் கண்களை உள்ளே இழுத்துக்கொள்ளும். தவளையின் முன்னங்கால் சிறியது. நீண்ட உறுதியான பின்னங்காலால் தத்தித் தத்திச் செல்லும் காலின் விரல் இடுக்குகளில் மெல்லிய தோல் உள்ளதால் நீரில் நீந்த வசதியாக உள்ளது. எமது பகுதியில் வாழும் தவளையில் பச்சைத் தவளையே (ரானாஹெக்ஸடாக்ட்டிலா) பெரிய தவளை. தேரையும் தவளை இனத்தை சேர்ந்ததுதான். தவளை நுரையீரல், வாயின் உட்பகுதி மற்றும் மேல் தோல் ஆகியவற்றின் மூலம் சுவாசிக்கின்றன. தண்ணீரில் மூழ்கியிருக்கும் போது மேல் தோலில் உள்ள மெல்லிய இரத்தக்குழாய்களால் நீரில் கலந்துள்ள ஒட்சிசனை எடுத்துக் கொள்கிறது. அந்த ஒட்சிசன் அதற்கு போதுமானதாக இல்லை. எனவே அடிக்கடி நீரின் மேல் வந்து சுவாசிக்கும். மேல் தாடையில் மட்டும் தவளைகளுக்கு சிறிய பற்கள் உண்டு.

பூச்சிகள், புழுக்கள், மீன் குஞ்சுகள் என்பவையே இவைகளின் பிரதான உணவாகும்.

மழைக் காலங்களில் தவளைகள் ஒலி எழுப்புவதை கேட்டிருக்கிறோம் அல்லவா. அவை தன் சோடியை அழைக்கவே ஒலி எழுப்புகின்றன. இவ்வொலியினை தவளைகளின் எதிரிகளான நீர்ப்பறவைகளும், பாம்புகளும் தவளைகள் இருக்கும் இடத்தை இனங்கண்டு அவற்றை பிடித்துவிடுகின்றன. இதனால் தான் ''தவளை தன் வாயால் கெடும்'' என்று சொல்கின்றார்கள்.

தவளைகளில் மிகப் பெரியது ஆபிரிக்காவின் மேற்குப்பகுதியில் வாழும் கோலியாத் தவளைதான்! இது 32 அங்குலம் நீளம் உடையது. தவளையின் வளர்ச்சியில் மூன்று நிலைகள் உள்ளன. அவை முட்டை, தலைப்பிரட்டை, (வால்ப்போத்தை) வளர்ச்சியடைந்த தவளை. பெண்தவளை நீர்ப்பரப்பிற்குச் சென்று முட்டையிடும். ஒரு தடவைக்கு 20இல் இருந்து 8000 முட்டைகள் வரை இடுகிறது. நிலத்தில் வசிக்கும் தேரையும் நீரில் தான் முட்டை இடுகிறது.



பொதுவாக நாற்பது ஆண்டுகள் வாழக்கூடியது. கஷ்டமான நிலைகளையும் தாங்கக் கூடியவை. கோடைக் காலங்களில் நீர் வற்றிவிட்டால் சேற்றுக்குள் புதைந்து மழைகாலம்வரும்வரை உறங்கிக் கொண்டேயிருக்கும். இதற்கு வேனில் உறக்கம் என்று பெயர். மழை வந்து தண்ணீர் தேங்கியதும் உறக்கத்தை கலைத்து வெளியே வருகின்றன. மழைக்காலம் வந்துவிட்டால் வாய்க்கால்களில் உள்ள தவளைகளை சிலர் பிடித்து விளையாடுவார்கள். சிலர் அவற்றைக் கண்டால் பயத்தில் நடுங்குவார்கள். சில தவளைகளிடம் விஷம் உள்ளது. மத்திய அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும் உள்ள நச்சுமிக்க தவளைகள் பாம்புகளுக்கு கடித்தால் பாம்புகூட செத்து விடுமாம்.

## சொற்சிலம்பம் - 57

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன் | தோ | ம | யோ | ற | ஏ | ர |
| கி | ஸ் | நி | வி | கெள | கா | ழா |
| நீ | பொ | கி | ரோ | ன் | எ | ம் |
| டோ | அ | க் | டி | ச | ங் | யா |
| வா | ல் | ப் | எ | ரா | வ | ஜா |
| க் | ல | க | இ | ன | ம் | தே |
| சி | பூ | வ | ஓ | ச | வி | ணை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -55 இன் விடைகள்

01. நீல் ஆம்ஸ்ட் -றோங்.
02. சிங்கராஜா வனம.

### சொற்சிலம்பம் - 55 இன் பரிசுக்குரியவர்

பா.துசிக்கா,
மீசாலை வீரசிங்கம் ம.வி,
மந்துவில் (கிழக்கு),
கொடிகாமம்.

### சொற்சிலம்பம் - 55 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கோ.போசகாந், தரம்-$4^{B}$, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி.
02. வ.கபிராசன், தரம்-6A, மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.
03. ச.துயேஸ்கரன், புத்தூர், ஆவரங்கால்.
04. சி.வினோஜன், ஜெயபுரம் அ.த.க.பாடசாலை , பல்லவராயன்கட்டு.
05. அ.சயந்தன், புன்னாலை,தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.
06. மீ.கார்த்திக், அம்பிகை பாலன் கோட்டம், வவுனியா.
07. செ.மேனகா, தரம்-$4^{C}$, கிளி/மத்தியகல்லூரி.
08. க.புவிதரன், நெடுங்கண்டல், அடம்பன்.

01. ஜப்பான் நாட்டின் தலைநகர்?
01) ..........................................

02. மின்குமிழை கண்டு பிடித்தவர்?
01) ..........................................

பெயர் :- ..........................................


முகவரி :-..........................................

..........................................

*சொற்சிலம்பம்-57*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## எலியாரின் வண்டில்

பகுதி-07



ஈராக்கில் சண்டை தொடங்கிய பிறகு எங்களுக்கு நல்ல பேரீச்சம் பழமும் இல்லாமற்போய்விட்டது என்றார் நண்பர் ஒருவர்.

பேரீச்சம் பழத்துடன் மட்டும் ஈராக்கின் அவலத்தையும் அதன் இன்றைய அரசியலையும் குறுக்கிவிட வில்லை. அல்லது எளிமைப்படுத்தி அந்தப்பிரச்சினையைப்பார்க்கவும் இல்லை.

நல்ல பேரீச்சம் பழத்தைத் தரமுடியாத அளவுக்கு இன்று ஈராக்கின் நிலைமையுள்ளது. அதே வேளையில் எங்களின் சந்தையிலும் தரமான பேரீச்சம் பழம் இல்லாமற் போய்விட்டது.

மிகச்சுருங்கி நன்றாகக் காய்ந்துவிட்ட பேரீச்சம் பழங்கள்தான் எங்களின் கடைகளில் விற்கப்படுகின்றன. அல்லது பழுதடைந்து புழுப்பிடித்த பழங்களே கிடைக்கின்றன.

ஒரு காலத்தில் இராணுவ நெருக்குவாரங்களும் யுத்த நடவடிக்கைகளும் பொருளாதாரத்தடைகளும் இறுக்கமாக இருந்த சூழலில்



காலாவதியாகும் நாட்களை நெருங்கிய பொருட்கள், விற்பனை குறைந்த பொருட்கள், விற்பனையே செய்ய முடியாத பொருட்கள் என எல்லாவற்றையும் வன்னிக்கு ஒரு தரப்பினர் தள்ளிவிட்டார்கள். ஒரு தரப்பினர் அவற்றை அள்ளிவந்தனர்.

அன்று மலிந்தவிலையில் பொருட்களைக்கொள்வனவுசெய்து

கடைகளில் இப்படித்தான் நடக்கிறது.'

அத்தியாவசியப்பொருட்களுக்கு மட்டும்தான் விலைப்பட்டியல் உண்டு. மற்ற எல்லாப் பொருட்களுக்கும் அது இல்லை என்பதும் இதில் உள்ள ஒரு பிரச்சினை. அப்படியான ஒழுங்கற்றநிலைமையை தமக்கு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு எந்த விலைக்கும் அந்தப் பொருட்களையும் விற்றுவிடுகிறார்கள். அதேவேளையில் பொருட்களைத் தரமதிப்பீடு செய்து விலைப் பட்டியல் இடுவதற்கான ஏற்பாடுகள் இல்லாதிருப்பது தரக்குறைவான பொருளை விற்கவாய்ப்பாகிறது.

நல்ல பெற்றோலை வாங்க முடியாது. நல்ல உடுப்புகளை தேர்வுசெய்ய இயலாது. தரமான வீட்டுப்பாவனைப்பொருட்களை பெற முடியாது. விருப்பத்துக்குரியவாறான பரிசுப்பொருட்களை அழகுப்பொருட்

லாம் இங்கேயில்லை. இதென்ன கொழும்பென்று நினைத்தீர்களா? என்று கேட்கிறார்கள். நாங்களென்ன அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரத்திலா வாழ்கிறோம்.

கொழும்பில் விற்கப்படுகின்ற அல்லது விற்பனையாகிறவற்றையெல்லாம் யாரும் கேட்கவில்லை. மனதுக்குப் பிடித்தமான குடுக்கிற காசுக்குத்தரமான பொருட்களை வாங்க நினைப்பது தவறா?

வணிகக் கவர்ச்சியில்லாத விற்பனை நிலையங்களாக பலவும் மாறிவிட்டதன் விளைவுதானிது. எதையும் பாவனையாளர்களின் தலையில் கட்டியடித்துவிடலாம் என்ற நம்பிக்கைதான் இப்படியான நிலைமையுருவாகக் காரணம்.

அன்பாக வாடிக்கையாளருடன் நடந்துகொள்ளும் விற்பனையாளர்கள் குறைவு. தேர்வுக்கு ஒத்துழைக்கும் நிலைமை குறைவு. தரமான பொருட்களைக் காண்பது குறைவு. வாணிப நிலையங்களின் இடவசதி, பொருட்களைப் பார்ப்பதற்கும்

# வாணிபம் என்பது ஒரு சேவையும் கூட...!

பேரீச்சம் பழத்தில் மட்டும் தான் இந்தத்தரக்குறைவு என்றில்லை.

வன்னியில் விற்பனை செய்யப்படுகிற தேயிலை, நுளம் புத்திரி, புடவைவகைகள், கோதுமை



மா, தின்பண்டங்கள், கட்டடப் பொருட்கள், அலங்காரப்பொருட்கள் எனப் பலவற்றிலும் தரக்குறைபாட்டைக் காணலாம்.

பொதுவாக வன்னியிலுள்ள சந்தைகளின் அமைப்பும் வாணிப முறைகளிலும் இருக்கக்கூடிய சில குறைபாடுகளும் இதற்கு ஒரு காரணம்.

இலங்கையில் வன்னிதான் பலவற்றுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிறது. நல்லன பலவும் வன்னியில்தான் நிகழ்வதாக சிங்களவர்களே கூறுகிறார்கள். சிறந்தன பலவற்றின் முன்னுதாரணத்துக்கும் வன்னியையே காட்டுகிறார்கள். குறிப்பாக லஞ்சம், ஊழல் பாரபட்சம் காட்டுதல் இல்லை. நிர்வாகக் கட்டமைப்பின் நேர்த்தி பலவும் சிறப்பாகக் கூறப்படுகிறது.

இப்படிப்பலவற்றில் சிறப்பாக இருக்கிற நாங்கள் மிஞ்சியுள்ள ஒன்றிரண்டு குறைபாடுகளையும் நிவர்த்திசெய்தால் இன்னும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் இருப்போமல்லவா!

வன்னிக்கு எப்படியான பொருட்களையும் அனுப்பி விற்றுவிடலாம் என்றொரு இளக்காரமான அபிப்பிராயம் கொழும்பு மற்றும் வவுனியா வர்த்தகர்கள் பலரிடமுண்டு.

பொருட்களுக்குப்பெரும் தட்டுப்பாடு இருந்தது. இது பொருட்களுக்கான கேள்வியை எல்லையில்லாத அளவுக்கு உயர்த்தியிருந்தது.

அந்த நாட்களில் விலை நிர்ணயமேயில்லை. ஒருபொருள் அதன் விலையைவிடவும் பன்மடங்கு அதிகவிலையில் விற்கப்பட்டது. வேறுவழியின்றி அவற்றை அந்தவிலையில் வாங்கியே தீரவேண்டிய யதார்த்தம் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தி அன்று

**வெளிவாசல்பாலன்**

வவுனியா, கொழும்பு வர்த்தகர்கள் வன்னிக்கு எப்படியான பொருட்களையும் அனுப்பிவிடத்தொடங்கினர்.

வேறுவழியில்லாமல் அந்தப்பொருட்களாவது வந்தால் போதுமென்றநிலை ஒரு பக்கம் இங்கே. இந்த வாய்ப்பை வன்னியிலுள்ள வர்த்தகர்களில் சிலரும் பயன்படுத்தத்தொடங்கினர். (கவனிக்கவும் எல்லோருமல்ல) தரம்குறைந்த பொருட்களை குறைந்தவிலையில் கொள்வனவு செய்துகொண்டு வந்து வன்னியில் அவற்றை அதிக விலைக்கு விற்றார்கள். யாராவது இதைச் சுட்டிக்காட்டினால் அல்லது இதைப்பற்றி விவரம் கேட்டால் அதற்கெல்லாம் சாட்டுகள், காரணங்கள், விளக்கங்கள் சொல்லிச் சமாளித்துவிடுவார்கள்.

இதில் தரமிழந்த பொருட்கள், காலாவதியாகியப் பொருட்கள்,

வந்து வன்னியில் அவற்றை கூடுதல் விலையில் விற்று ருஷிகண்ட வர்த்தகர்கள் இன்றும் அதே நடைமுறையை தொடரவே விரும்புகிறார்கள். முயற்சிக்கிறார்கள். சில இடங்களில் இது நடக்கிறது.

இதற்கு இன்றும் முற்றாக நீங்கிவிடா பொருளாதார தடையும் இறுக்கமும் மட்டுப்பாடுகளும் அவர்களுக்கு உதவுகிறது.

பொருளாதாரத் தடையின் இறுக்கம் சிறிதாக இருந்தாலும் அதனால் ஏற்படுகிற தட்டுப்பாடுகள், மட்டுப்பாடுகள், பற்றாக்குறைகள் எல்லாம் எந்தப் பொருட்களையும் எந்தவிலைக்கும் வாங்கித்தான் ஆகவேண்டும். என்ற ஒரு நிர்ப்பந்தத்தை பாவனையாளர்களிடம் உருவாக்கிவிடுகிறது. எப்படியான பொருளையும் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற யதார்த்தம் அது.

பெற்றோல் சிமெந்து



இரும்புப்பொருட்கள் போன்றவை நாளொரு விலையில் கடைக்குக் கடை வேறுபட்ட விலையில் விற்கப் படுகிறது. இதைப்பற்றிக் கேட்டால் அது கலப்புப்பெற்றோல் அதனால் தான் அதைக் குறைந்த விலையில் விற்கிறார்கள். அது தரங்குறைந்த கம்பி அதை அப்படிக்குறைத்து விற்கலாம்' என்று கண்ணாமூச்சிக் கதைகளை விடுகிறார்கள். இது மேலே குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டும்தான் என்றில்லை. சகல பொருட்களுக்கும் பெரும்பாலான

களை கொள்வனவு செய்யஏலாது. தரமான தின்பண்டங்கள் குறைவு. ஏன் பாதணிகள்கூட விருப்பத் தேர்வுக்குரிய மாதிரியில்லையே.

இப்படியிருக்க வன்னியைக் கடந்தே யாழ்ப்பாணத்துக்குப் பொருட்கள் போகின்றன. வாகனக் கூலி வன்னியைவிடக்கூடுதல். ஏற்றியிறக்கும் தடைமுகாம் ஒன்றும் கூடுதல். (முகமாலையில் இறக்கி ஏற்றவேண்டும்.) இப்படியெல்லாம் செய்தும் விலையைக்குறைத்து எப்படி அவர்களால் பொருட்களை விற்கமுடிகிறது? அதேவேளையில் தரமான பொருட்களாகவும் அவையிருக்கின்றனவே.

இவை ஒரு பக்கத்தின் நிலைமைகளென்றால் மறுபக்கத்தில் வேறுவிதமான பிரச்சினைகளும் நிலைமைகளும்.

கடைக்குப்பொருட்களை வாங்கப்போனால் உரிய நேரத்துக்கு அவற்றை வாங்கித்திரும்பமுடியாது. நாங்கள் இப்படித்தான் நடந்து கொள்வோம். நீங்கள் விரும்பினால் வாங்குங்கள். இல்லையென்றால் விட்டுவிட்டுப்போங்கள். போய்த்தான் என்ன செய்யப்போகிறீர்கள். மீண்டும் இங்கேதானே வரவேண்டும் என்பது மாதிரியான மனோபாவத்துடன்தான் பலகடைக்காரரும் நடந்துகொள்கின்றனர்.

பொருட்தேர்வுக்கு ஒத்துழைப்பது குறைவு. விருப்பங்களைச் சொல்லிக்கேட்டால் 'அதெல்

தேர்வதற்குமான அமைப்புகள் இல்லாமை, போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் கிடையாமை எல்லாமே பாவனையாளர்களுக்குப் பாதகமாகவேயுள்ளது.

ஒரு பொருளை ஒரு கடையில் வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் நின்று தேர்வுசெய்வதற்குரிய இடம், ஒளி, காற்றோட்டம் என்பவை முக்கியமானவை. உண்மையில் இந்த வசதிகளுக்கும் சேர்த்தே பாவனையாளரிடமிருந்து காசு பெறப்படுகிறது. விலை நிர்ணயத்தில் இவையும் சேர்க்கப்பட்டவையே.

வாடிக்கையாளருக்கும் விற்பனையாளருக்குமிடையிலான உறவென்பது மிகமுக்கியமானது. ஏனோதானோ என்றமாதிரி அது இருக்கக்கூடாது.

இப்படியான அணுகுமுறையும் நிலைமையும் இன்னும் எங்கள் பகுதியில் தொடரக்கூடாது. சில பெரிய வாணிப நிறுவனங்களில் விற்பனைக்கிருப்போர் ஒருவித பற்றில்லாத்தன்மைகளோடு பதில் சொல்வார்கள். அல்லது பொறுப்பெதுவும் தங்களுக்கில்லை என்பதுபோல நடந்துகொள்வார்கள். சில கடைகளில் போதிய ஆட்களிருப்பதில்லை. சாப்பாட்டுக்கடைகளில் பெரும்பாலும் இது கூடுதல்.


இப்படித்தான் பொதுச் சந்தையின் நிலவரமும் உள்ளது. அதை விவரித்தால் அதுவொரு தனிவாணிபம் பற்றி புதிய புதிய அறிமுகங்களும் உத்திகளும் வளர்ந்திருக்கின்றன. எங்கும் அனுபவ ரீதியாகவும் அறிவார்ந்த ரீதியாகவும் வாணிபத்தின் வளர்ச்சியும் அணுகுமுறையும்கூட மேம்பட்டிருக்கிறது. வாணிபம் என்பது வெறுமனே லாப நட்டக்கணக்கு மட்டுமல்ல. அதுவொரு சேவையுமாகும் என்ற புரிதலும வளர்ந்திருக்கிறது. பரவலாக இவற்றையெல்லாம் நாம் கவனத்திற்கொண்டால் இந்த விடயத்திலும் சிறப்புறுவோமல்லவா?

# மலைகளைக்குடைந்து தோண்டிய ஜப்பானிய கடலடிக்குகை



இரண்டாம் உலகப் போரில் தோற்றுச் சரணடைந்த ஜப்பான், அதி விரைவில் எழுந்து ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைப்போல் தொழில் வளத்தில் முன்னேறி, ஆசியாவின் பொறித்துறைப் பூதமாகவும், வல்லரசாகவும் உச்ச இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது! நவீனப் பொறி நுணுக்கங்களும், தொழிற்துறை நூதனங்களும் படைக்கும் மிகச் சுறுசுறுப்பான மாந்தரைக் கொண்டது ஜப்பான் தேசம்! தேள் கொடுக்குபோல் வளைந்த ஜப்பான் தேசம் சுமார் 7000 தீவுகளைத் தன்னகத்தே சேர்த்துக் கொண்டுள்ளது! 127மில்லியன் சனத்தொகை கொண்ட ஜப்பான் தீவுகளின் பரப்பளவை ஒப்பிட்டால் அமெரிக்காவின் கலி.ஃ.போர்னியா மாநிலத்திற்கு நிகராகும்! ஜப்பானின் நான்கு பெரிய தீவுகளும், அநேக சிறிய தீவுகளும் 2000 மைல் தூரம் நீண்டு வளைந்து பரவியவை! ஆண்டுக்கு 10,000 நிலநடுக்கங்கள் ஜப்பான் தீவுகளுக்கு அண்மையில் நேருகின்றன! அவற்றில் குறைந்தது 40 நில நடுக்கம் ஜப்பான் நிலப் பகுதியில் மட்டும் ஏற்படுகின்றன! ஆயினும் நான்கு தீவுகளை இணைக்கும் நீளமான பாலங்களையும், ஆழமான கடற் குகைகளையும், மலைக்குகைப் பாதைகளையும், அவற்றின் ஊடே புகும் அதிவேக இரயில் வண்டிகளையும், (Bullet Trains) கோடிக் கணக்கான டொலர் செலவழித்து, ஜப்பான், நுணுக்கமாகக் கட்டிக் கண்காணித்து வருவது பேராச்சரியம் அளிக்கிறது!

1954இல் அடித்த கடற் சூறாவளியில் சுகரு நீரச்சந்தியில் ஜப்பானியரை ஏற்றிச் சென்ற ஐந்து மீட்சிப்படகுகள் கவிழ்ந்து 1314 பேர் மூழ்கிப் போயினர்! பொதுமக்களின் பெரும் போராட்டத்தின் விளைவாய், ஜப்பான் அரசு அந்த நீர்ச் சந்தியைப் பாதுகாப்பாகக் கடக்க ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தது! அம்முயற்சி பத்தாண்டுகளுக்குப் பிறகு 1964 ஆம் ஆண்டில் வெளிப்பட்டு, உலகிலே நீண்ட செய்கன் கடலடிக்குகை, ஹோன்சூ தீவுக்கும் ஹோக்கைடு தீவுக்கும் இடையே கட்டப்பட்டு, 1988 முதல் அனுதினமும் இரயில் வண்டிகள் அதன் வழியே போய் வருகின்றன. அடுத்துத்



தென்திசையில் ஹோன்சூ தீவை ஷிகோகுத்தீவுடன் (Shikoku) இணைக்க 22.5 மைல் தூரத்தில் இடையிடையே நிலத்துடன் சேர்ந்த உலகிலே நீண்ட ஊஞ்சற்பாலங்களும், முறுக்கு நாண்பாலங்களும் அமைக்கப்பட்டன. கடல் இடையே மிதக்கும் எண்ணற்ற தீவுகளையும், மலைஇடையே அமைந்த நகரங்களையும் போக்குவரத்து மூலம் சேர்க்க பலவிதக் குகைகள், பாலங்க்ள், இரயில் பாதைகள் அமைத்த ஜப்பான் உலகில் சிறந்தசிவில் பொறியியல் நிபுணத்துவ நாடாகப் பெயர்பெற்றுள்ளது!

இச்செய்கன் கடலடிக்குகையானது. ஜப்பானின் வடதிசைத் தீவுடன் இணைத்து அமைக்கப்பட்டதாகும். இது மலைகளைக் குடைந்து 53.9 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. 800அடி வரை கடலுக்குக் கீழே செல்லும் செய்கன் குகை உலகத்திலேயே முதன்மையானதாக கருதப் படுகின்றது. இது 14.3மைல் நீளமான கடற்பகுதியை கடக்கிறது. அடுத்து நிலநடுக்க பாதுகாப்பு உளவிகள் பதிக்கப்பட்டு மேன்மையான பொறி நுணுக்க முறைகளில் அமைந்தது.

இந்த செய்கன் குகை பதினேழு ஆண்டுகளாய் 13.8 மில்லியன் பணியாளர்கள் வேலைபார்த்த இந்த இமாலியா திட்டத்தில் 33பேர் உயிரிழந்துள்ளனர். இச்சிறிய எண்ணிக்கை ஜப்பானியரின் உன்னத பாதுகாப்பு நிர்வாகத்தை எடுத்துக் காட்டுகிறது.

எரிமலைப்பாறைகள் இங்குமங்குமாய் அடுக்கப்பட்டு கிடந்தன. அந்தப்பாறைகளை வெடிமருந்தால் பிளந்து, மலைகளைக் குடைந்து,கடலடியே தோண்டி 33மைல் நீண்ட குகையை முடிக்க 17 ஆண்டுகள் ஆயின ஜப்பானுக்கு, கடலுக்குக் கீழே 800அடி உச்சஆழத்தில் குகை தோண்டப்பட்டு இரட்டை இரும்புப்பாதைகள் கொண்டு அதிவேக சிக்கன் ஸென் புள்ளெட் ரெயில் தொடரோட்டப் போக்கு வரத்துக்கு (Sinkansen Network hight speed Bullet Train) ஏற்றதாய் அமைக்கப்பட்டுள்ள இச் செய்கன் சுரங்க அமைப்பில் பல சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன.

ஹோக்கைடு தீவில் இருந்து பெருமளவான வளங்களை பிரதமதிவான ஹோன்சூவுக்குக் கொண்டு வருவதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இதுமாத்திரமன்றி 1954 ஆம் ஆண்டு இத்தீவுகளுக்கிடையே பயணத்தில் ஈடுபட்டிருந்த டோயா மாரு எனும் கப்பல் சூறாவளியில் சிக்கிகவிழ்ந்ததில் 1200 பேர்வரை உயிரிழந்தனர். இந்நிகழ்ச்சிக்குப்பிறகு மக்களின் வேண்டுதலுக்க மைய 1971ஆம் ஆண்டு செய்கன் குகை அமைக்கும் பணி ஆரம்பமானது.

1976ஆம் ஆண்டளவில் இப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக ஒரு வெள்ள விபத்து ஏற்பட்டு துன்பத்தை விளைவித்தது. இது அதிசயம் என்றே கூறவேண்டும் பல பணியாளர்களின் உயிரை காவுகொள்ளவேண்டிய அந்த விபத்து ஜப்பானிய அதியர் தொழில்நுட்பத்தால் பாதுகாக்கப்பட்டது. அதுவும் ஒரு உயிர் கூடபழியிடப்படாமல்பணியாளர்கள் மென்மையான அடுக்குப்பாறை ஒன்றை உடைத்தபோது இவ்வனர்த்தம் ஏற்பட்டது. பிரிட்டிஸ் கடல் வெள்ளம் உட்புகுந்தது. குகைக்குள் நிமிடத்திற்கு 80 டன் வீதம் கொட்டிக்குவிந்தது. ஆனால் மனிதர்கள் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை. கடல் நீரின் கசிவு ஓட்டத்தை நிறுத்தி குகை நீரைவெளியேற்ற 60 நாட்கள் வரைபிடித்தன. இவ்வாறு இக்குகைஅமைப்புப் பணிகளில் பல இடங்களில் கடல் உட்புகுந்த போதும் ஜப்பானிய அதியுயர் பொறியியல் திறமையில் இது தடுக்கப்பட்டன. இக் கடல் நீர்க்கசிவுகளை அடைக்க அதிக அழுத்தமுள்ள சோடியம் சிலி கேட் சிமெண்ட் (High Pressure Intection of Sodium) நுழைக்கப்பட்டுகசிவுகள் அடைக்கப்பட்டன.

(24ஆம்பக்கம் பார்க்க)

---

# அவுஸ்திரேலியாவின் வெற்றி இந்தியாவை சீண்டி விடுமா?



இந்திய ஆடுகளங்கள் எப்போதுமே அவுஸ்திரேலிய வீரர்களுக்குச் சவாலகவே அமைந்திருக்கிறது அவுஸ்திரேலிய அணிக்குப் பிறகு டெஸ்ட் தொடரில் இந்தியாவை அவர்களால் வீழ்த்தமுடியவில்லை.

2001 இல் ஸ்டிவோ தலைமையின் கீழ் அவுஸ்திரேலியா வெற்றி மேல் வெற்றி குவித்தது. தொடர்ந்து 15 வெற்றிகளுடன் இந்திய சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலியா முதல் டெஸ்ட்டில் வெற்றிபெற்றது. இந்தமுறை அவுஸ்திரேலியாதான் தொடரை வெல்லும் என எண்ணியிருந்த அனைவருக்கும் பெரும் அதிர்ச்சி அளித்தனர் இந்தியவீரர்கள்.

கொல்கெத்தாவில் நடந்த இரண்டாவது டெஸ்ட்போட்டியில் இந்திய அணிபொலோ-ஆன்பெற்று பரிதாப நிலையில் இருந்தது. அப்போது சோடிசேர்ந்த ராவிட்டும் லக்ஸ்மனும் பொறுப்புடன் ஆடி பலமான முன்நிலை பெற்றுக்கொடுத்தனர். இதனைப் பயன்படுத்திக்கொண்ட ஹர்பஜன் பந்துவீச்சில் கலக்கினார். கடைசியில் வெற்றியுடன் தொடங்கிய அவுஸ்திரேலியா 1-2 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை இழந்தது.

அதற்குப் பின்னர்மீண்டும் இந்திய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அன்றுபோன்று இன்றும் முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. ஹர்பஜன்சிங் வழமைக்கு மாறாக பிரமிக்கும் வகையில் பந்து வீசியிருந்தார். துடுப்பாட்டத்தில் சச்சினின் இழப்பு இந்திய அணிக்கு பேரிழப்பாக அமைந்துள்ளதுடன் அவ்வணியைப் பலமிழக்கவும் செய்துள்ளது.



இதனால் அணியைக்காக்க வேண்டிய அதிகளவு சுமை ராவிட் லக்ஸ்மன் மீது விழுந்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க அணித்தலைவர் கங்குலிக்கு அவுஸ்திரேலியாவின் பலமிக்க பந்துவீச்சை எப்படிச்சமாளிப்பது என்பதில் போராட்டமே நடத்துகின்றார்.

இந்நிலையில் ரிக்கிபொண்டிங் இல்லாத அவுஸ்திரேலிய அணி முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளமை இந்திய அணிக்கு ஏமாற்றமான ஒன்றே.



கணிப்புக்களையே பொய்யாக்கி விட்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இறுதி நாளில் அதிசயமான வெற்றி ஒன்றை இந்திய அணிக்குப் பெற்றுக்கொடுக்குமா என ஊகிக்காதவர்கள் இருந்திருக்க முடியாது.

அவ்வளவுக்குத் திறமையான ஆட்டத்தை வழங்கினர். பந்து வீச்சாளர்களான ஹர்பஜனும் பதான் இருவரும் இணைந்த ஆட்டம் அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் வியந்து போகும் வகையில் அமைந்திருந்தது.

முதல் 8 வீரர்கள் பெற்ற மொத்த ஓட்டங்களைக் காட்டிலும் இவர்கள் இருவரும் சேர்த்த ஓட்டங்கள் அதிகம் என்பது சுவாரஸ்யமான செய்தி. போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் இந்திய அணிக்கு புது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கிடைத்துவிட்டார்கள் என அட்டையில் எழுதிக்காட்டி உற்சாகம் வழங்கும்வகையில் அவர்களது ஆட்டம் அமைந்திருந்தது.

மொத்தத்தில் எச்சரிக்கை மணியாக அமைந்துவிட்ட அவுஸ்திரேலியாவின் வெற்றி இந்திய அணியை எழுச்சி கொள்ளவைக்குமா? என்பதைத் தற்போதைய உலக கிரிக்கெட் ரசிகர்களின் ஆவலாகவுள்ளது.

---

# இந்திய–அவுஸ்திரேலிய போட்டியில் தடுமாறி விட்ட நடுவர்

கடந்த வாரம் பெங்களூரில் நடைபெற்ற இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான டெஸ்ட் கிரிக்கட்டில் அவுஸ்திரேலியா 217 ஓட்டங்களால் இந்தியாவை வென்றது.



இப்போட்டித் தொடரின் போது இந்திய வீரர் செவாக்கின் ஆட்டமிழப்பு மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தி விட்டதெனில் தவறாகாது.

நடுவர்கள் என்போர் போட்டிகளில் பங்கு பற்றி இவ்வாறான சம்பவங்களுக்கு தானும் முகம் கொடுத்து பல போட்டிகளுக்கு தீர்ப்பு வழங்கிய நீண்டகால அனுபவமுடையோராகவே இருப்பர். இவ்வாறானவர்கள் மட்டுமே நடுவர்களாகப் பணியாற்ற முடியும்.

அதே போன்று நடுவர் ஒருவர் எடுக்கும் சந்தேகமற்ற தீர்ப்பை எந்த ஒரு வீரரும் ஆட்சேபிக்க மாட்டார். ஏனெனில் துடுப்பாட்ட வீரர் ஒருவர் தான் விட்டது தவறு என்று உணர்ந்துவிடுதல் ஆகும். இவ்வாறு எதிரணியினரோ நடுவரோ தீர்ப்பு வழங்கமுன்பும் சில நேர்மையான வீரர்கள் களத்தை விட்டு வெளியேறியதும் உண்டு. இது ஏனைய வீரர்களுக்கும் ஒரு முன்மாதிரியானதாகும்.

ஆயினும் நடந்து முடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டத்தின் போது சேவாக்கிற்கு ஆட்டமிழப்பை வழங்கியபோது நியூசிலாந்து நடுவர் சற்று தடுமாறிவிட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் பந்து மட்டையில் பட்டு கால்காப்பில் பட்டதால் அவர் ஆட்டமிழந்தார் என வழங்கிய தீர்ப்பு தவறானது எனக்கருதி நடுவரோடு வாதாடியமையாகும். அத்துடன் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டமை ரசிகர்களை மேலும் புண்படுத்தியிருக்கும் என்றே கூறலாம்.

பல போட்டிகளில் இவ்வாறான சம்பவங்கள் காணப்படுவதால் நடுவர்கள்தானே தீர்ப்பு வழங்குவோர் எனக்கருதாமல் நவீன தொழில் நுட்பத்தினையும் பயன்படுத்தி தீர்ப்பை அறிவிக்க வேண்டும்.

சம்பத்.

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் மக்களுடனான சந்திப்பின்போது மக்கள் பகிர்ந்துகொண்டவை.

# முள்ளிக்குளம் மக்களின் தீர்க்கப்படாத துயரங்கள்

இரா-வின்



ஒவ்வொரு மனிதப் பிறவியும் கல்வி கற்கும் உரிமையும், கடமையும் உடையவர்கள். இதில் வயது வேறுபாடு இருப்பினும் குறிப்பாகச் சிறுவர்கள் இந்த உரிமையை அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடக்க நிலையில் இருந்து இலவசக் கட்டாயக் கல்வியை வழங்குவதில் நிறுவன ரீதியாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

இந்தக் கல்வி அவர்களின் கலாசாரத்தனித்துவம், மொழி, மதம் ஆகியவற்றிக்கு மதிப்பளித்துச் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட வழிவகுக்கும். கல்வி சார்ந்த செயற்பாடுகளில் பெண்களும், சிறுவர்களும் பூரணமாகவும், சமமாகவும் பங்குபெறுவதை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அலுவலர்கள் முழுமையாகச் செயற்பட வேண்டும். இவ்வாறு U.N.H.E.R நிறுவனம் வெளியிட்ட உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறைகளின் 23 ஆவது விதி தெளிவுபடுத்தி நிக்கின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரது பிரிவுக்குட்பட்டதும் ஜே-133 கிராம சேவையாளரது மேற்பார்வையிலுள்ளதுமான ஆனைக்கோட்டை முள்ளிக்கிராமம் அபிவிருத்தியை எதிர்பார்த்திருக்கின்றது. இங்குள்ளவர்கள் சேமிப்பு, விழிப்புணர்வு, ஊக்குவிப்பு, சமூகக்கட்டமைப்புத் தொடர்பாகத் தெளிவற்ற நிலையிலுள்ளனர்.

நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு ஆகிய கிராமங்களை எல்லைப்புறமாகக் கொண்ட இவ்முள்ளிக்கிராமத்தில் அநேகர் கூலி வேலை செய்து தமது நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையானவற்றை முழுமையாகவும், சில வேளைகளில் பகுதியாகவும் நிறைவு செய்து வருகின்றனர். இங்கு 300 குடும்பங்களைச்சேர்ந்த 2000 பேர் வரையில் இருக்கின்றனர்.இதில் 5 வயதிற்கும், 16 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் 750 பேர் இருந்த போதிலும் 350 மாணவ மாணவிகளே கல்வி கற்கிறார்கள்.



ஏனையவர்கள் இடைவிலகியும், பாடசாலைகளிற்கே இன்றுவரை போகாதவர்களாகவுமே உள்ளனர். இடைவிலகளிற்குத் தாய், தந்தையரின் பொறுப்பான வழிநடத்தல் இன்மையும், குடும்ப வறுமையுமே காரணமாக இருந்த போதிலும் பாடசாலைச் சமூகத்தின் அசமந்தப்போக்குக் காரணம் என்று சொல்லிக் கொள்ளலாம்.



ஒரு சமூகம் விழிப்ப டைய வேண்டுமாயின் சமூகத்திலுள்ளோர் விழிப்படைய வேண்டும். தனியே தொழில், குடும்பம் மீண்டும் குடும்பம் தொழில் என்ற மிகச்சிறிய வட்டத்திற்குள் தொடர்ச்சியாக வலம் வருகின்றனர் முள்ளிக்கிராமத்தின் பெரும்பாலானவர்கள். ஒரு கட்டமைப்புக்குள் வந்து தனியே தம்மாலும் முடியும் என்ற பக்குவத்தில் செயற்படுவதற்கு எவரும் முன்வருவதில்லை. எல்லோரும் நாளாந்தக் கூலிகளாகவேயுள்ளனர்.இக்கிராமத்தில் கல்விச் சமூகம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். அவர்கள் ஊடாகவே இக்கிராமத்திற்குத் தெளிவையும், விழிப்பையும் ஏற்படுத்தமுடியும்.

மிகச்சிறிய குடிசையில் 7 பிள்ளைகளுடன் குடிசையில் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் திருமதி சுசிலாதேவி-செல்வரட்ணம் எம்முடன் பகிர்ந்துகொண்டவை; எங்களிற்கு நாளாந்தம் கிடைக்கும் சிறுதொகைப்பணத்தைக் கொண்டே பாடசாலைச் செலவையும், மருத்துவச் செல வையும் ஈடுசெய்து குடும்பத்தையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

கணவர் எல்லாநாளும் வேலைக்குப் போவதில்லை. அவர் வேலைக்குப்போகவில்லை என்றால் நான் குசினிக்குப் போவதில்லை. ஒரு கிழமையில் ஐந்து நாளைக்கு வேலைக்குப் போவதே பெரியபாடு... உதவி நிறுவனங்கள் கூரைவிரிப்பு, வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கியதுடன், எங்களது அர்ப்பணிப்புடன் மலசல கூடங்க ளையும் அமைத்து வருகிறார்கள். இவை இன்னும் முழுமை பெறவில்லை. நாங்கள் இரு குடும்பத்தவர்கள் ஒரு மலசலகூடத்தைப் பாவித்து வருகிறோம்.

விரும்பியோ, விரும்பாமலோ வாழ்ந்தே ஆகவேண்டும் என்ற காரணத் திற்காகவே இவ்வாறான நிலையிலும் பிள்ளைகளையும் பள்ளிக்கூடம் அனுப்பி நாளாந்தம் வறுமை எனும் சுமையைத் தாங்கி வருகிறோம். எமக்கு வீட்டையாவது தொண்டு நிறுவனமோ, அரசாங்கமோ அமைத்துத்தந்தால் எமது சுமையின் ஒரு பகுதி குறையும் எனத் தனது மனநிலையைத் தெளிவு படுத்தினார் சுசிலாதேவி.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இக்கிராமத்திற்குள் இதுவரை ஒரு சனசமூக நிலையம் அமைக்கப்படவில்லை. இவர்களிற்கான சனசமூக நிலையம் மானிப்பாய் பிரதான வீதியிலே அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தால் பயன் பெறுவோர்களில் அநேகமா னவர்கள் வேறு இடங்களைச் சேர்ந்தவர்களே. பெரும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வந்தால் முள்ளிக்கிராமத்தின் ஒரு பகுதி மக்கள் இடம்பெயரவேண்டும். மழை நீர் அவர்களது இருப்பிடங்களை ஆக்கிரமித்து விடும். அருகிலுள்ள பிள்ளையார் கோவிலும், பள்ளிக்கூடமுமே இவர்களிற்கு அபயக்கரம் நீட்டும். இவ்வாறான சம்பவம் 2002 ஆம் ஆண்டு இறுதியாக இடம்பெற் றுள்ளது. அரச அதிகாரிகள், உதவி நிறுவனங்கள் நிவாரண உதவிகளை இடையிடையே வழங்கிவருகின்றன. இவை வரவேற்கத்தக்கது. ஆனால் இக்கிராம மக்களிற்கு அவ சரமாகவும்,அவசியமாகவும் தேவைப்படுவது விழிப்புணர்வு. இவ்விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பான அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

ஐந்து பிள்ளைகளின் தாயான திருமதி விஜயகுமாரி-யேசுராசா தனது ஆதங்கத்தைப் பகிர்ந்துகொள்கிறார்; கோடைக்காலங்களில் தான் இங்க இருக்கமுடியும். மழைகாலங்களில் இங்கிருந்து இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய கட்டாயம் இப்பகுதி மக்களுக்கு உண்டு. எங்களால் முடிந்தளவு குடிசை அமைத்து இருக்கிறோம்.

எனத் தனது குடிசையை காட்டும் விஜயகுமாரி குடிசையை வேயவேண்டிய காலம் போய் வெறும் தடிகளும், ஈக்குகளும் தான் இருப்பதனை எமக்கு காட்டுகிறார். நான் கூலிவேலைக்குப் போவதினால் உதவி நிறுவனங்களால் வழங்கப்படும் பொருட்களையும் இழக்கநேரிடும். நிறுவனங்கள் பதியும்போது வேலைக்குப் போய்விடுவோம். சாமான்கள் கொடுக்கும்போது போனால் பதிவு இல்லை அடுத்தமுறை பார்ப்பம் என்பார்கள் அது அவ்வளவுதான்.

உதவி நிறுவனங்கள் சாமான்கள் குடுக்கேக்க வறுமை எது வறுமை இல்லை எது என்றில்லை. கொடுத்தவர்களுக்கே திருப்பித்திருப்பிக் கொடுக்கிறார்கள். இந்நிலை அடிக் கடி இங்கு இடம்பெறுகின்றது. உதவி என்பது தேவையான நேரத்தில் தேவையானவர்களிற்கு வழங்கும்போதே அது பயனுள் ளதாக அமையும். உதவி நிறுவனங்கள் தேவையானவர்களுக்கு ஒழுங்குமுறையாக உதவிகளை வழங்கவேண்டும் எனவும் இங்கு வழங்கப்படும் உதவிகளில் பாகுபாடு நிலவுவதாக குறைபட்டு தனது கருத்துக்களை நிறைவு செய்தார் விஜயகுமாரி.

ஊக்குவிப்பு, சேமிப்பு, சமூகக்கட்டமைப்புத் தொடர்பான தெளிவு நிலையை முள்ளிக்கிராம மக்கள் அனுபவ ரீதியாக உண ரும்வகையில் அவர்களை ஒழுங்கு படுத்தவேண்டும்.

இதன் மூலம் முள்ளிக்கிராமத்தை வளர்ச்சி யடையச் செய்வதுடன் ஏனைய கிராமங்களைப் போன்று இதனை மாற்றியமைக்கலாம். உதவிக்கு ஒரு நிறுவனம் என்றவகையில் பல உதவி நிறுவனங்கள் இங்குள்ளன. இவை தனியே உதவிப் பொருட்களை வழங்கு வதைப்போன்றே விழிப்புணர்வு, ஊக்குவிப்புத்தொடர்பான கருத்தமர்வுகளை நடாத்த வேண்டும்.

முள்ளிக்கிராமம் முன் னுக்கு வருவதற்கு இக்கிராமத்தில் இருந்து முன்வந்து ஏனைய சமூக அமைப்புக்களுடன் இணைந்து கிராமத்தை அபிவிருத்தி செய்யலாம். இவ்வாறு செயற்படுவதற்குப் பொறுப் பானவர்கள் பொறுப்புடன் முன்வர இன்னும் எத்தனை வருடங்கள் தான் தேவை.




# கத்தியால தமிழரை மடக் கேலாது எண்டால்... புத்தியால மடக்கப் பாக்கினம் கவனமாக இருங்கோ...!

வணக்கம் எல்லாருக்கும்! இண்டைக்கு எனக்கு குந்தடிக்கு வர நேரமில்லை. பென்சன் சம்பந்தமா சில படிவங்கள் எடுத்து நிரப்பிக் குடுக்க வேண்டியிருக்கு. பேய்க்குப் பேன் பார்க்கிற வேலையைச் செய்தாலும் பரவாயில்லை. ஆனா பென்சனியரா ஒருக்காலும் இருக்கக்கூடாது. அதைக் கொண்டுவா! இதைக்கொண்டுவா எண்டு ஒரே ஆக்கினை பாருங்கோ! அதுதான் ஒருக்கால் நேரேபோய் எல்லா அலுவலையும் முடிப்போம் எண்டிட்டுத்தான் வெளிக்கிட்டனான்.

அந்த அலுவலகத்தின்ர காத்திருப்பவர்களுக்கான கூடத்தில் ஒரு தொகை சனம். சரி என்னைப் போலத் தானே ஒவ்வொருத்தருக்கும் ஏதோ ஒரு சோலி இருக்கும்! யன்னல் பக்கமா ஒரு இடத்தில வசதியா இருந்தன். ஒவ்வொருத்தற்றை பெயரும் வரிசைப்படி கூப்பிடப்பட்டுக்கொண்டிருந்திச்சு. என்ர நேரம் வர இன்னும் செல்லும் எண்டது விளங்கிச்சு சரி...சும்மா இருக்கிற நேரத்தைப் பிரயோசனமா பயன்படுத்துவோம் எண்டிட்டு. முன்னுக்கு மேசையில கிடந்த பத்திரிகையை எடுத்துப்புரட்டினன். புலனாய்வு பற்றி தொடர்ச்சியா வாற அந்தத் தொடரும் கிடந்திச்சு. எனக்கு மிச்சம் பிடிச்ச பக்கம். நாங்கள் அவதானமா இருக்க வேண்டின கன விசயங்களை எடுத்து விளக்கிற நல்ல தொடர். படிச்சு முடிச்சுப் போட்டு. ஒரு பெருமூச்சோட யோசிச்சுப்பார்க்கிறன். கிழக்கு மாகாணத்தில ஒரு பிரிவினையை ஏற்படுத்தி. தொடர்ச்சியான ஆள்புலத்தைக் கொண்டிருக்கிற தமிழீழத்தாயகத்தைத் துண்டாட எதிரியள் போட்ட திட்டம். எங்கட தலைவரால வெற்றிகொள்ளப்பட்டுவிட்டிது. இப்ப என்னடா எண்டால் மன்னார் பக்கம் தமிழ்-முஸ்லிம் மக்கள் தரப்புகளுக்கிள்ளை குரோதத்தை உண்டாக்கி குழப்ப நிலையை ஏற்படுத்திற சதியள் நடக்கிது. ஆர் சுட்டது? ஆர் செத்தது? எண்ட எந்த ஒரு உறுதியான தீர்மானமும் இல்லாமல். முஸ்லிம் இளைஞர்களின்ர ஆவேசத்தை புலிகள் மீது திருப்பி விடிற. வஞ்சகத்துக்கு. தெரிஞ்சோ தெரியாமலோ முஸ்லிம் தரப்பு உடன்பட்டது பற்றி. அந்த சமூகத்தலைவர்கள் கொஞ்சம் விழிப்பா இருக்கோணும். என்னதான் வேறுபட்ட ஒரு மதசமூகம் எண்டாலும். நாங்கள் எல்லாரும் தமிழ்பேசும் தமிழீழ மக்கள். எங்கள் எல்லாரின்ர உரிமையளுக்காயும் தான் விடுதலைப் போராட்டம் நடக்கிது எண்டிறதை நாங்கள் நினைச்சுப் பார்த்து. சதிகாரர்களின்ரை நாசகார நடவடிக்கைகளுக்குப் பலியாப் போகக் கூடாது. உப்பிடியான சக்திகள் மன்னார் மாவட்டத்தில மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்திலயும் செயற்படிது. அந்தப் படிப்பு. இந்தப் படிப்பு எண்டு சொல்லிக் கொண்டு ஆயிரத்தெட்டு கல்வி நிறுவனங்கள் மூலைக்கு மூலை முளைச்சிருக்கிது. வஞ்சகம் இல்லாமல் 2-3 கிழமைகளிலேயே டிப்ளோமா அது இதெண்டு குடுக்கிற இப்படியான நிறுவனங்களில சில வெளிநாட்டு ஆக்களும் படிப்பிக்கினமாம். சனங்களோட நல்ல மாதிரி அன்னியோன்னியமாப் பழகி. வன்னிக்கு சுற்றுலா போக விருப்பம் எண்டெல்லாம் ஆசைப்படுகினமாம்! கத்தியால தமிழரை மடக்கேலாது எண்டிட்டுப் புத்தியைப் பாவிக்கத் தொடங்கிட்டினம். அப்ப நாங்கள் எங்கட புத்தியை கொஞ்சம் பாவிக்க வேண்டாமோ! அப்படி யாழ்ப்பாணத்தில இருக்கிற குறிப்பிட்ட வேறநாட்டு ஆக்கள் உங்களோட சேர்ந்து வன்னிக்கு சுற்றுலா வரசரியா ஆசைப்பட்டால். நீங்களும் கதைக்கவேண்டின ஆக்களோட விளக்கமாகக் கதைச்சுப் போட்டு. அவையின்ர உதவியோட சுற்றுலா காட்டிவிடுங்கோவன்! என்ன மாதிரி விளங்கிதோ அப்பு சொல்லிறது?

பொறுங்கோ! அந்தப் பேர் கூப்பிடப்பட பிள்ளை ஒண்டு கஷ்டப்படிது. நடக்க ஒற்றைக்கால் தான் நிலத்தில ஊண்டினவடி தெரிஞ்சிது. மற்றக் கால் ஊண்டாமல் மடிச்சபடி வைச்சிருந்தா. நடக்கமுடியாமல் எழும்பி நிண்டவாறு பரபரத்துப் போய் நிண்ட அந்த பிள்ளைப் பக்கமாப் போனன். "தங்கச்சி! என்ன விசயம் சொல்லுங்கோ! உள்ளுக்கை போகோணுமோ? வாங்கோ நான் உதவிசெய்யிறன'' கூடவந்த பிள்ளை இந்தா வாறன் எண்டு போனது தான். இன்னும் வரேல்லை கைப் பொல்லும் வாகனத்துக்குள்ளை. இந்தப் படிவங்களைக் குடுத்தால். அவையள் வேற விண்ணப்பப்படிவம் ஒண்டு தருவினம். அதை ஒருக்கால் வாங்கித் தாறீங்களோ? "இந்தளவுதானே விசயம். சும்மா கஷ்டப்படாமல் நீங்கள் உதிலை இருங்கோ! நான் வேண்டிக்கொண்டு வாறன்." என்றபடி அந்தப் படிவங்களை வாங்கி உள்ளே போனன்.

"தங்கச்சி! நீங்க குடுத்ததெல்லாம் சரியாம். மற்றப் படிவங்கள் நீங்கள் நிரப்பத் தேவையில்லையாம். கொஞ்சநேரத்தால அவையள் உங்களைக் கூப்பிட்டுக் கதைச்சுப்போட்டு. ஒரு கடிதம் தருவினமாம். அதுகளைக் காட்டினால் பல்கலைக்கழகத்தில இருக்கிற உங்கட டொக்கியு,மென்ற்ஸ் (Documents)எடுக்கலாமாம்!" "அப்ப நல்ல வசதியாய்ப் போச்சு நன்றி அப்பு!" "இதுக்கெல்லாம் என்ன நன்றி வேண்டிக்கிடக்கு'' எண்டபடி பக்கத்தில இருந்த கதிரையில இருந்துகொண்டன். எங்கேயோ பார்த்த முகமாக் கிடக்கிது. ஆனால் ஆரெண்டு அடையாளம் பிடிபடேல்லை "எங்கேயோ உம்மைப் பார்த்த மாதிரிக்கிடக்கிது. ஆனால். எங்கையெண்டு ஞாபகம் வரேல்லை'' "என்னப்பு! அவ்வளவுக்கு ஞாபக மறதி வந்திட்டுதோ? கரும்புலிகள் தின நிகழ்ச்சியள் முடிஞ்சு போகேக்கிள்ள. நான் வான்ல ஏறினதைப் புதினம் பார்த்தது. இதுக்கிடேக்கிள்ளை மறந்து போச்சிதோ?", சின்னச்சிரிப்போடு கேட்டாள்.

"ஓ...ஓ...இப்ப விளங்கிது. ஆனால் அம்மா. நான் புதினம் பார்க்கேல்லை. நீர் ஒற்றைக்கால் தாங்கி நடந்து போனனீர். என்னண்டு ஒற்றைக் காலை ஊண்டி வானில ஏறுவீர் எண்டறிய ஆவலா இருந்திச்சு. அதுதான்!" "அப்பு. ஆனாலும் உங்கட ஆவல். சில நேரம் மற்ற ஆக்களுக்கு சங்கடமாவும் இருக்கலாமல்லா?" "ஓம் தங்கச்சி விளங்கிது. நாங்கள் கஷ்டப்படிறதை மற்றாக்கள் அவதானிச்சுக்கொண்டிருக்கினம் எண்டால். ஒரு அந்தரமா அலுவல் பார்க்கேலாம இருக்கும் விளங்குது. என்ன விசயம் பல்கலைக் கழகத்தில?" கதையை வேற திசைக்கு மாற்றி என்ர பிழையைச் சமாளிச்சன்.'' "அதுவோ! முதலாம் வருசம் படிச்சுக்கொண்டிருக்கேக்கிள்ளை.நிலைமையள் எல்லாத்தையும் பார்க்க அதுக்கு மேல பொறுக்கேல்லை. இடையில விட்டுட்டு இஞ்சால வந்திட்டன். அப்பிடியே பேந்து இஞ்சால சத்ஜெய. ஓயாத அலைகள் எண்டு அப்பிடியே காலம்போட்டிது. இந்த யுத்தநிறுத்த காலத்தில சண்டை துடங்குமட்டும். சரிவந்தால் தொடர்ந்து படிக்கலாமெண்டு பார்க்கிறன். வீட்டாரும் எல்லாத்தையும் விட்டிட்டு இடம் பெயர வேண்டி வந்ததால. பரீட்சை முடிவுகள் பற்றின என்ர 'டொக்யூ மென்ஸ்' ஒண்டுமே இல்லை அதுதான் கம்பசில இருக்கும் தானே! சரிவந்தால் தொடர்ந்து படிக்கலாம் நாளைக்கு சண்டை தொடங்கிற நேரமும். நாங்கள் சண்டை ஓய்வுக்கு வந்த நேரம் இருந்த நிலையிலேயே இருக்கக்கூடாது. எல்லா விதத்திலும் எங்கட ஆளுமையளை நாங்கள் வளர்த்தெடுக்கோணும். அப்படித்தான் அண்ணை எங்களை வளர்த்திருக்கிறார். விழிகளில் ஓர்மம் பொங்க உறுதியாகக்கூறினாள். "ஓமோம் நீர் சொல்லிறது மெத்தச்சரி. அப்பிடித்தான் இருக்கோணும். நல்லதொரு விசயம் அதுசரி உமக்கு எந்தச் சண்டையில காயம்பட்டது?'' "ஆ...வோ! 'ஓயாத அலைகள்-2' தான். ஒரு இடத்தில எங்கட விநியோகப் பாதைக்கு 'கவறிங்' ஆக நிண்டனாங்கள். ஆமி வெட்டி அடிக்க முயற்சியள் எடுத்தும் நாங்கள் விடேல்லை. அப்ப தான் மேலாலை கொண்டுவந்து கண்ட பாட்டுக்கு கொண்டீட்டுப் போட்டான். அப்பதான் பட்டது''.

எனக்கும் 74 வயசும் ஆகப் போகுது. கடவுளே எண்டு ஒரு குறையும் இல்லாம இருக்கிறன். இப்பிடியே சாகிற வரைக்கும் ஒரு குறையும் இல்லாமல் இருக்கோணும். அப்பிடி ஏதாவது குறை. கிறை எண்டு கை. கால் ஏதாவது போனால். இழுபடாமல் போயிடோணும். இதுதான் என்ர பொலிசி! "படபடவெண்டு என்னுடைய கருத்துரையை நிகழ்த்தி முடிச்சன்''.


அந்தப்பிள்ளை நிமிர்ந்து என்ர முகத்தை பார்த்திது. செங்கடலில இரண்டு கறுப்புச்சூரியன் மிதக்கிற மாதிரி இருந்த அந்த இரண்டு கண்களையும் என்னால முகம் குடுக்க முடியாம இருந்திச்சு "அப்பிடியெண்டால் இப்பிடி இருக்கிறதைவிட சாகலாம் எண்டு எனக்கு ஆலோசனை வழங்கிறீங்களோ? நீங்கள் பெரிய்ய புண்ணியங்கள் செய்தனீங்கள். இத்தினை வயசிலையும் ஒரு குறையும் இல்லாமல் இருக்கிறீங்கள். உங்கட பேரப்பிள்ளைக்குச் சமனான நான் வாழோணும் எண்டு நினைக்கிற அளவுக்கு மனசு வரேல்லை. ஆனால் ஒருத்தருக்கும் ஒரு கெடுதலும் செய்யேல்லை எண்டு நினைக்கிறீங்கள். நீங்கள் இண்டைக்கு நுளம்புத்திரியும் கொளுத்திப் போட்டு. உத்தினை வயசாகியும் உயிரிலயும். ஆரோக்கியத்திலயும் வலுகவனமா குந்துரஞ்சிற 'ஏ9'வீதியிலதான் எனக்குக் காயம் பட்டது. அந்தக் காலத்தில உங்கட தலைமுறைக்காரர் எல்லாம் உப்பிடி தத்துவங்கள். வேதாந்தங்கள் பேசிக் கொண்டு. தனிப்பட்ட நலன்களைப் பார்த்துக்கொண்டு சமூகப்பொறுப்பில்லாமல் இருந்ததாலதானே. இந்தக்காலத்தில போராடவேண்டி வந்தது. அங்கையும். இஞ்சையும் பதுங்கி இருந்து உங்களைக் காப்பாத்தி வைச்சிருக்கிறது சுயநலமே தவிர.கன்மவினை இல்லை. அதென்ன மாதிரி? உங்களுக்கு ஒரு குறையும் இல்லையோ? உங்கட உந்த 75 வருச காலத்திலை ஒரு விநாடி எண்டாலும் 'உரிமையுள்ள தமிழனா' வாழ்ந்திருக்கிறீங்களே? ஏதோ பெரிய உதாரண புருசன் எண்டு உங்களை நினைக்கிறீங்களோ. ஆ...அது என்னமாதிரி. பொம்பிளைப்பிள்ளை! ஏன் நாங்களெண்டால் என்ன குறையாம்! ஆம்பிளை எண்டால் 'ஐயோ அருமந்த ஆம்பிளைப்பிள்ளை இப்பிடி ஏலாமக் கிடக்கு!' எண்டு சொல்வீங்கள். அதேபொம்பிளைப்பிள்ளை எண்டால் 'ஐயோ! அருமந்தபிள்ளை.இப்பிடி அநியாயமாப்போச்சு!' எண்டு. ஒவ்வொண்டுக்கும் ஏதோ ஒரு கதை வைச்சிருப்பியள். அப்பு புண்ணியவான்! விலங்குகளின்ரை அதே வாழ்க்கை நடைமுறைகளிலை இருந்து. எந்த விதத்திலையும் வேறுபடாதவரைக்கும். மனிதப்பிறவி எண்டு நீங்கள் பெருமைப்படுவீங்களா இருந்தால் அது வெற்றுப்பிரம்மை மட்டும்தான்! உங்கட வயசிலையும் எத்தினை ஐயாமார் அம்மாமார் எங்களுக்கு தங்களால முடிஞ்ச உதவியெல்லாம் செய்து. அன்பாகக் கதைச்சு ஆதரவா இருக்கினம். ஆனால் உங்களைப்போல ஒரு சிலர் ஏன் உப்பிடியான வரட்டுக் கதையளைக் கதைச்சு வேதனைப் படுத்திறீங்கள்? தயவுசெய்து உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன். என்னட்டை அவிழ்த்த இந்த உங்கட வாழ்க்கைச் சித்தாந்த மூட்டையை. என்னை மாதிரி வேற ஆரிட்டையும் அவிழ்த்துப் போடாதீங்கோ! நீங்கள் தட்டிக்கழிச்ச பொறுப்பைத்தான் நாங்கள் சுமக்கிறோம். அதில எங்களுக்கு ஏதாவது நடந்தால் 'தீக்குள் விரலை வைத்துத் தீண்டும் இன்பம்' போலத்தான் எங்களுக்கிருக்கும். எங்கட மண்ணுக்காக நாங்கள் குடுத்த எங்களால குடுக்க முடிஞ்ச விலையை நினைச்சுப் பெருமைப்படிறோம்! ஒரு விசயத்தை யோசிச்சுப்பார்த்தனீங்களே? என்ர குறையால பாதிக்கப்பட்டது நான் மட்டுமாத்தானிருக்கும். ஆனால். உங்கட உள்ளத்தில இருக்கிற உந்தக் குறையால என்னை மாதிரி இன்னும் எத்தினையோ பேரின்ர மனசை புண்படுத்தப் போறீங்கள்! எனக்குத் தொண்டையைத் தாண்டியும் கதைக்கேலாம துக்கம் அடைச்சுக் கொண்டு வந்திச்சு. என்னெண்டு எனக்குள்ளை இருந்து உப்பிடி ஒரு விசர்த்தனமான வியாக்கியானம் வெளிவந்திச்சோ தெரியாது. நான் அப்பிடி நினைக்கிற ஆளும் இல்லை... சே! இல்லை எண்டு அப்பிடியெல்லே மிருகத்தனமான கதை கதைச்சிருக்கிறன். "தங்கச்சி! உண்மையிலேயே அப்பிடி நினைச்சுச் சொல்லேல்லை. ஏதோ வாய்க்குள்ளை பாடமாக்கிடக்கிற வசனம்தான்... வழமையா எல்லாரும் கதைக்கிற கதை ஏதோ என்ரை வாய்க்கிள்ளை வந்திட்டிது என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ! சும்மா நானும். என்ர குடும்பமும் எண்டு சின்னனான ஒரு வட்டத்துக்குள்ளை காலம் ஓட்டிக்கொண்டிருக்கிற நான் எங்கே! உந்த சின்ன வயசிலையே நீர் இந்த நாட்டுக்கு எவ்வளவு செய்திருக்கிறீர்... தொடர்ந்தும் செய்யிறீர்! சே... நான் என்ன செய்தனான்... சும்மா வாயும். வயிறும் வளர்த்தது தான் மிச்சம்! என்ர அப்பன் எல்லே! மனசில ஒண்டும் வைச்சுக்கொள்ளாமல். மன்னிச்சன் எண்டொரு வார்த்தை சொல்லுங்கோ!"

"நீங்கள் பெரிய புண்ணியவான்! நான் பாவி! நான் ஆர் உங்களை மன்னிக்க! ஆனா ஒண்டு. இதை நான் என்ர நிலையை நியாயப்படுத்திறதுக்காகச் சொல்லிறன் எண்டு நினைக்க வேண்டாம்! நாங்கள் இப்ப இருக்கிற நிலைக்குக் காரணம் கன்மவினை தானெண்டு நிலையான அரசுகள். நீதிமன்றங்கள் இல்லாத ஒரு காலத்தில சொல்லப்பட்டதுக்குக் காரணம் அப்பை எண்டாலும் அடுத்தவங்களுக்குப் பயப்பிடாத ஆக்களும். கன்மவினைக்குப்பயந்து தனிமனித ஒழுக்கம் பேணப்படும் எண்டுதான். பிற்காலத்தில அதே நம்பிக்கையை பாவிச்சு மக்கள் எழுச்சியளைக் கட்டுப்படுத்தி. சமூக ஏற்றத்தாழ்வுகளை குறிப்பிட்ட ஒருசிலர் தங்களுக்குச் சார்பா நியாயப்படுத்தப் பார்த்தவை. ஒவ்வொரு வினைக்கும். நிகழ்வுக்கும் பின்னால ஒரு காரணம் இருக்கு. அதை விஞ்ஞான ரீதியாத் தேடி அறியிற போக்கை மழுங்கடிக்கிற தான். உந்த வரட்டுத்தனமான 'எல்லாம் தலைவிதி' எண்ட நம்பிக்கை! தங்கட பலவீனத்தை. இயலாமையையும் நியாயப்படுத்திறதுக்குப் பாவிக்கிறது தான் தலைவிதி! தன்னம்பிக்கை இருக்கிற ஆக்கள் தலைக்கு உள்ளுக்குள்ள இருக்கிறதை நம்புவினம். இல்லாத ஆக்கள் தலைக்கு மேலவிதி இருக்கெண்டு நினைச்சு அதை விடுங்கோ! நான் சொல்லிறது உங்களுக்கு அலட்டலா இருக்கும். உங்களை மாதிரி ஆக்களோட கதைக்கிற நேரத்துக்கு. எங்கையாவது ஒரு சுவரோட கதைக்கலாம்"

"அப்ப சரி. நானும் உங்களை மன்னிச்சாச்சு.'' ஒரு முறை திரும்பி என்னைப் பார்த்துச் சொன்னாள். செங்கடலில் உருண்ட அந்தக் கறுப்புச் சூரியர்கள். அங்கிருந்து வெளியேறி நந்திக்கடலுக்கு வந்ததுபோல வெம்மை தணிஞ்சு தெரிஞ்சிது.

"அப்பு! நீங்கள் தெரியாமல் கதைச்ச கதையளை நினைச்சு மனம் வருந்தாங்கோ! ஒவ்வொருதரும் ஏதோ தான் தான் உலகத்திலையே பெறுமதியான ஜந்து எண்டு நினைக்கினம் எப்ப உங்கட பிழையை உணர்ந்தீங்களோ அப்பையே நீங்கள் திருந்தீட்டிங்கள். நாங்களும் அப்பா. அம்மா. வீடு எண்டு எல்லாத்தில இருந்தும் தூர வந்து நிக்கிற இடத்தில அந்த அன்பை எல்லாம் உங்களை மாதிரி மக்களிட்டத்தானே எதிர்பார்த்து நிற்போம். From now, we are good friends! Okay?"

"தாத்தா! எனக்கொரு ஆசை. சமாதானப் பேச்சுவார்த்தை சரிவர சிங்களத்தரப்பு விடிற மாதிரித் தெரியேல்லை. சண்டை தொடங்கிச் செண்டால் நானும் கலந்துகொண்டு எங்கட நாடு விடுதலை அடையப் போராடுவன். எனக்கு ஏதாவது நடந்திச் செண்டால். என்ர கண்களை நீங்கள் எடுத்துப் பாவியுங்கோ! உங்கட வயசு போன கண்ணுகளை வைச்சுக்கொண்டு. 'ஏ9' இல காலம் தள்ளேலாது. நாட்டுக்காக உயிர் போறது பிரச்சினையில்லை. ஆனாலும் ஒரு சின்ன ஆசை எங்கட கனவுகள் போலவே ஏதாவதொரு உறுப்பும்.இன்னுமொரு ஆளில தொடர்ந்தும் வாழோணும். அதுதான் என்ன மாதிரி? உந்த நைன்ரிக்கு இநத ருவென்ரீன்ர கண்ணுகளை வீரச்சாவடையிற நேரம் தானம் செய்வோமா?'' துருதுருத்த அந்த விழிகள் திரும்பிப்பார்த்தன. நைன்ரி அழுதுகொண்டிருந்திச்சு.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 03

### பகுதி -18


உங்களுடைய ஒரு மணித்தியாலம் முடிந்ததும் வந்து கூட்டிச் செல்கிறேன்"

"அதுவும் பிரச்சினையில்லை" என்று அவளுக்கு உறுதியாகக் கூறினேன். "நீங்கள் அவனைக் கூட்டி வந்து அங்கே விட்டுவிட்டுப் போகலாம். ஒரு மணித்தியாலம் முடிந்ததும் வந்து கூட்டிச் செல்லலாம். அல்லது நீங்கள் விரும்பினால் வேறுயாருடனாவது அவனை அனுப்பி வைக்கலாம்." என்றேன் நான்.

"மிக்க நன்றி" என்ற அவள், நீண்ட நேரம் பேசாமல் இருந்து விட்டு, "உங்களுடைய புரிந்துணர்வு மகிழ்ச்சி தருகிறது" என்றாள்.

தேனீரைக் குடித்து முடித்தோம். இதுவும் அதுவுமாக முக்கியமற்ற வேறு பலவிடயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டோம். டொறத்தியும் வெறும் புள்ளி விவரத்தைப் போலவே குறிப்பிடப்பட்டாலும் "முழுநிறைவான பிள்ளை" என்று விவரிக்கப்பட்டாள். டிப்ஸ் தனது முதலாவது சந்திப்பில் காட்டியதை விட அதிக பயம், கவலை, திகிலை டிப்ஸின் தாயார் இந்த முதலாவது சந்திப்பில் வெளிக்காட்டியிருந்தாள். அவளுக்கெனவே சில மணித்தியாலங்களை என்னுடன் செலவிடும்படி வற்புறுத்துவதில் எந்தப்பயனும் விளையப் போவதில்லை. அது அளவுக்கதிகமான அச்சுறுத்தலாக அவளுக்கு இருக்கும். மிகவும் அபாயகரமானதாகவும் இருக்கும். அப்படிச் செய்தால் டிப்ஸை நாம் இழந்து விடும் வாய்ப்பே அதிகமாக இருக்கும். அதையும் விட எனது முயற்சிகளுக்கான பதில் வினையை அவனது தாயாரை விட அதிகமாக டிப்ஸ் காட்டுவான் என்ற வலுவான எண்ணம் எனக்குள் எழுந்திருந்தது. கதவுகளைப் பூட்டுவது பற்றி டிப்ஸ் எதிர்ப்புக் காட்டுகிறான். ஆனால் அவளது வாழ்வில் ஏதோ ஒரு முக்கியமான கதவு ஏற்கனவே இறுகப் பூட்டப்பட்டே இருக்கிறது. அவள் எதிர்ப்புக் காட்டுவதற்கு காலம் கடந்து போய்விட்டிருந்தது. உண்மையைச் சொல்லப் போனால் இந்தக் குறுகிய சந்திப்பின் போது இன்னொரு கதவைப் பூட்டிவிட அவள் மிகுந்த முயற்சி எடுத்தாள் என்றே சொல்லலாம்.

நான் புறப்படத் தயாரான போது அவள் என்னோடு கதவு வரை வந்தாள். "அவனது விளையாட்டு அறை யில் அவனைப் பார்வையிட நீங்கள் நிச்சயமாக விரும்பவில்லையா? என்று கேட்ட அவள், அவனிடம் அருமையான விளையாட்டுப் பொருள்கள் இருக்கின்றன. நீங்கள் விரும்பும் எதையும் வாங்கித் தரமுடியும்... எதையும்..." என்றாள். அவள் உண்



மையிலேயே ஒரு நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தாள். அவளைப் பற்றி எனக்குள் இலேசான ஒரு அனுதாபங்கூடத் துளிர்த்தது. அவள் தெரிவித்தது பற்றி அவளுக்கு நன்றி தெரிவித்த நான், டிப்ஸை வழிகாட்டு மையத்தில் உள்ள விளையாட்டு அறையில் மட்டும் தான் பார்வையிடுவேன் என்பதை அவளுக்கு மீண்டும் சொன்னேன். "நாங்கள் முடிவு செய்ததும் உங்களுக்கு




அறிவிக்கிறேன்" என்று கையிலிருந்த தாளை சிறிது அசைத்துக் காட்டியபடி அவள் சொன்னாள்.

"நன்றி" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன். நான் எனது காரை நோக்கி நடந்து கொண்டிருந்த போது துன்பத்தில் சிக்கியிருக்கும் அந்தக் குடும்பத்தின் ஒடுக்கும் வித்திலான சுமை, மனத்தைக் கனமாய் அழுத்திக் கொண்டிருந்தது. நான் டிப்ஸைப் பற்றியும் அழகாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கக் கூடிய அவனது விளையாட்டு அறையைப் பற்றியும் எண்ணிக் கொண்டேன். பணத்தால் வாங்கக் கூடிய எதுவும் அங்கே இருக்கும் என் பதை நியாயமான அளவில் உறுதி செய்து கொள்ள அந்த விளையாட்டு அறைக்குள் நுழைய வேண்டிய தேவையிருக்கவில்லை. அதிகஅளவில் மினுக்கமூட்டப்பட்ட வலுவான கதவு ஒன்றும் அங்கே இருக்கும் என்பது எனக்கு உறுதியாகத் தெரிந்தது. அளவுக்கு அதிகமான சந்தர்ப்பங்களில் இறுகப் பூட்டப்பட்டிருக்கும் கனமான பூட்டு ஒன்றும் அங்கே இருக்கலாம்.

டிப்ஸ் பற்றி ஏதாவது அவள் சொல்ல நினைத்தால் இதைவிட மேலதிகமாக எதைச் சொல்ல முடியும் என்று எண்ணிக்கொண்டேன். இங்கே நிலவிய குடும்ப உறவுகளின் இயக்கவியல் பற்றி விளக்கக் கூடிய எளிமையான பதில்கள் எதுவும் நிச்சயமாக இல்லை. டிப்ஸ் விடயங்கள் தொடர்பான சந்திப்புக்களை மேற்கொள்வது பற்றியும் கேள்விகள் கேட்கப்படுவது பற்றியும் நினைத்து திகிலடையும் அளவிற்கு டிப்ஸ்பற்றியும் அவளது இளம் வாழ்க்கையில் அவன் வகிக்கும் பங்கு பற்றியும் இந்தப் பெண் என்ன நினைக்கிறாள்? என்ன உணர்கிறாள்? என்று கேள்விகளாக என்னுள் கிளர்ந்து கொண்டிருந்தன.

பயன்தரக்கூடிய முறையில் இங்கே விடயங்களை நான் கையாண்டிருக்கிறேனா அல்லது அந்தக் குழந்தையை ஆய்வுக்குட்படுத்துவதிலிருந்து பின்வாங்கச் செய்யும் அளவுக்கு அவள்மீது அழுத்தங்களை பிரயோகித்து விட்டேனோ என்று நான் எண்ணிக் கொண்டேன். அவளும் அவளுடைய கணவனும் என்ன முடிவை எடுப்பார்கள் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். நாங்கள் கலந்து பேசிய ஒழுங்குகளுக்கு அவர்கள் ஒப்புக்கொள்வார்களா? டிப்ஸை நான் மீண்டும் காண்பேனா? அப்படிச் சந்தித்தால் அந்த அனுபவத்திலிருந்து என்ன உருவாகப் போகிறது? எனக்குள் எழுந்து கொண்டிருந்த கேள்விகளைச் சுமந்தபடி நடந்தேன்.

(தொடரும்....)

---




'நிலாகாலம்' என்ற நல்லதொரு சினிமாவை தந்தவர்கள்' இப்போது 'செல்லமே' எனவொரு கண்ணாமூச்சிப் படத்தைத் தந்திருக்கிறார்கள். நிலாகாலம் படத்துக்கு கதை, வசனம் எழுதிய சுஜாதாதான் 'செல்லமே' படத்துக்கும் கதை, வசனம் எழுதியிருக்கிறார். ஆனால் அதில் சுஜாதா மட்டும் தனியே எழுதியிருந்தார். இதில் இயக்குநர் காந்தி கிருஷ்ணாவும் சுஜாதாவுடன் இணைந்து எழுதியிருக்கிறார். அதில் பாடல்கள் வைரமுத்து. இதிலும் அவரே. அதில் ஒளிப்பதிவு செய்தவரே இதிலும் ஒளிப்பதிவைச் செய்திருக்கிறார். அதில் இயக்குநராக இருந்த காந்தி கிருஷ்ணாவே இதிலும் இயக்குநராக அதே அணி செல்லமேயையும் எடுத்திருக்கிறது.

இங்கே ஒரு சுவாரஷ்யமான, கவனிக்கத்தக்க விடயத்தைப் பார்க்கவேணும்.

நிலாகாலம் நல்ல படமாக வந்த போதும் வணிக ரீதியாக அது வெற்றிபெறவில்லை. பெரும் லாபத்தைக்கொடுக்கவும் இல்லை. படத்தின் தயாரிப்புச்செலவு குறைவு என்பதால் ஓரளவு கையைக்கடிக்காமல் தப்பிக்கொண்டார்கள். ஆனால், தமிழ்மக்கள்தான் நல்லபடத்தை காணத் தவறிவிட்டார்கள். அவர்களுடைய ரசனைக்கு இது எட்டாக்கனியாகி விட்டது. அப்படிச்சொல்லவும் முடியாது. எட்டிய கனியை ருஷிக்கத்தெரியாமல் விட்டுவிட்டார்கள். என்றுதான் சொல்லவேணும்.

இந்த நிலைமையில் நிலாகாலம் அதை உருவாக்கியவர்களுக்குத் தந்த மனத் திருப்தி அதிகமிருக்கலாம். மடியை வெறுமை ஆக்கிவிட்டது. அல்லது மடியை நிறைக்கத் தவறிவிட்டது. அதனால் வந்த வினைதான், விளைவுதான் இப்போது வந்தசெல்லமே.

மிகக் கவர்ச்சிகரமாகக் காட்டப்படும் 'செல்லமே' விளம்பரம் இளைய வயதுடையோரைக் குறிவைத்து படத்தை உருவாக்கியிருப்பதைச்சொல்கிறது.

தமிழ்மக்களின் ஆசை, கனவு, ரசனை, விருப்பம் எல்லாவற்றுக்குமான ஒரு தீனியாக செல்லமேயை தரமுயன்றிருக்கிறார்கள், "நிலாகாலம்" போன்ற படத்தை மட்டும்தான் எடுக்க எங்களுக்குத்தெரியும் என்றில்லை. நாங்கள் செல்லமே போலவும் எடுத்துக்கலக்குவோம் என்கிறமாதிரியாக இந்தப் படத்தை எடுத்துத் தள்ளியிருக்கிறார்கள்.

இப்படித்தான் நல்லபடத்தை ஆர்வத்தோடும் ஆசையோடும் கடும் முயற்சிகளோடும் எடுத்த பலர் பிறகு தமிழ்பேசும் நல்லுலகுக்கு தீனிபோடும் படங்களை எடுத்து அறிந்தார்கள். ஆனால் சிலர் அப்படியெடுத்து கொஞ்சம் உழைத்துச் சம்பாதித்தும்விட்டார்கள். ஆனால் நல்ல படங்கள் வருவதுதான் வரவரக்குறைந்துவிட்டது.

தமிழ்மக்கள் முண்டியடித்துக்கொண்டு பார்க்கும் படங்களைப் பட்டியலிட்டால் அவர்களுடைய அறிவுத்தரத்தையும்




ரசனை மட்டத்தையும் கணிப்பிடலாம். சினிமாவை வெறுமனே பொழுதுபோக்காக மட்டும் பார்க்கின்ற அறிவிலித்தனந்தான் இதில் முதற்காரணம். சினிமா ஒரு அனுபவப்பகிர்வு, வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தைத் தருவது, மனித உறவையும் உணர்ச்சிகளையும் அது மோதும் சூழ்நிலைகளையும் நிகழ்த்திக் காட்டுவது. சினிமா உண்மையில் ஒருவித அறிவியல் முறைச்சாதனம். ஆனால் அதனை நாங்கள் வேறெப்படியோ ஆக்கிச் சிதைத்துவிட்டோம்.

செல்லமே நிலாகாலத்தை ஈடுசெய்வதற்காக வந்துள்ள படம். நிலாகாலத்தில் செலவழித்ததை செல்லமேயில் எடுக்கப் போகிறார்கள். நிலாகாலத்தைப் புறக்கணித்தவர்களுக்கு செல்லமே ஒரு தண்டனை.

ஆனாலும், மதுர, கில்லி, கஜேந்திரா, அழகேசன் போல ஆக விசர்த்தனமாக இல்லாமல் இதனைக்கொண்டு வந்துள்ளார்கள்.

ஒருவகையில் உளவியல் சார்ந்த கதைதான் இதிலும் காதல் கிறுக்கன், குடைக்குள் மழைபோல இன்னொரு விதத்தில் உளவியலைப் பேசுகிற படம்.

குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்த ஒருவனை அவனைவிட எட்டு அல்லது பத்துவயது கூடிய பெண் அரவணைத்து வளர்க்கிறாள். அவள் ஒரு நாள் திருமணம் செய்து வெளியேறுவதைச் சகிக்கமாட்டாமல் அவளைக் கடத்துகிறான். தன்னுடைய வருமானவரிப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவன் அவளுடைய கணவன் என்பதால் அவளைப் பழிவாங்க இந்தக் கடத்தல் சம்பவத்தை ஆதரிக்கிறார் தந்தை. ஆக பெண்ணின் கடத்தல் மகனுக்கும் தேவை. தந்தைக்கும் தேவை.

ஆனால், அந்த இளைஞன் தன்னைக் கடத்தி வந்து சிறைவைத்திருக்கிறபோதும், வெளியே கணவனும் உறவுகளும் நிம்மதியற்றுத்தவிக்கின்ற வேளையிலும் கடத்திய இளைஞனின் மேல் அனுதாபம் கொள்கின்ற அந்தப் பெண்ணை பாராட்டவேணும். உண்மையில் அவனுடைய செயல்கள் பெரும் விபரீதத்திற்குரியவைதான். ஆனால், அப்படி அவன் யோசிக்கவும் செய்யவுமான பின்னணி இந்தச் சமூகத்தினுடையது. அவளுடைய பார்வையில் அவன் குற்றவாளியல்ல. அவன் இரக்கத்துக்குரியவன். இறுதிக் காட்சியில் அந்தப் பெண் காட்டுகிற இரக்கம்,வணிக உத்திகளுக்குள்ளும் சில விடயங்களில் ஆகத்தரமிறங்கிப்போகாமல் சமரசம் செய்துள்ளார்கள்.

படத்தில் ஆகவும் இழுபடுகிற காட்சி அவள் தப்பிச் செல்லும் காட்சிதான். அது மிகைப்படுத்தப்பட்டதும்கூட பார்வையாளர்களை கதிரையின் நுனிக்கு இழுத்துவருகிற மலினமான முயற்சி. காசை செல்லமே சம்பாதித்துக்கொடுக்கும். படத்தின் காட்சியமைப்பும் கதையும் காசுக்குரியதே.


நிலாகாலத்தைத் தந்தவர்களை செல்லமேயையும் தந்திருக்கிறார்கள்? எனும்போது துக்கம்தான் வருகிறது. அப்படியொருபடத்தை தந்தவர்கள் இப்படித்தரவேண்டிய சூழ்நிலை தமிழில் இருக்கிறதோ என்பது ஆகப்பெரிய கவலைக்குரியது.

சரி, திரைக்கதை எழுதுவது எப்படி என்று அறிவியல் ரீதியாக புத்தகம் எழுதிய சுஜாதாவா இந்தக்கதையையும் எழுதியிருப்பது?

—— ஆரதி

இந்த நாட்டிலேயுள்ள வளங்களைக் கொண்டு புதிய தொழில் நுட்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சித்தால் நிச்சயமாக இந்த நாட்டை முன்னேற்றலாம்.

இதனைவிடுத்து எடுத்ததற்கெல்லாம் வெளிநாடுகளின் உதவிக்காகக் கையேந்துவது இந்த நாட்டின் வளங்களை அழிப்பது போலாகும். எனக் கருத்துத் தெரிவித்தார் ஜப்பான் நாட்டின் தொழில் நுட்ப உதவி வழங்கும் தூதரகங்களின் முதுநிலை ஆலோசகர்.




# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

சமீபத்தில் யாழ்ப்பாணதொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்த அவர் தெரிவித்த மேற் குறித்த கருத்துக்கள் எத்தகைய பெறுமதிமிக்கவை என்பதை நாட்டுப்பற்றுக் கொண்ட எந்தவொரு குடிமகனும் உணர்ந்து கொள்வான்.

எங்கள் தாய் நாடு அரசியல் விடுதலை, பொருண்மிய விடுதலை பெற்று தரணியிலே தலைநிமிர எங்கள் வளங்களை நாங்கள் உச்சமாகப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட்டால் மாத்திரம் போதாது எங்கள் சுதேசப் பொருட்களை நுகரும் மனோபாவமும் எங்களுக்கு வரவேண்டும். எங்கள் இரத்தத்தில் கலக்கவேண்டும்.

ஜப்பான் பிரமுகரின் கருத்து ஒட்டுமொத்த இலங்கைக்குமான கருத்தாக எடுத்தால் என்ன தமிழர் தாயகத்திற்கு என எடுத்தால் என்ன மிகமிக அவசியமானது.

"ஜப்பான் நாடு அபிவிருத்தி அடைந்த தொழில்நுட்பத்தில் உயர்ந்த நாடாக மிளிருவதற்கு அங்குள்ள மக்கள் தமது சொந்த வளங்களைக் கொண்டு கடும் முயற்சியுடன் உழைத்தமையே காரணம்" எனவும் தெரிவித்தார் ஜப்பான் பிரமுகர்.

ஜப்பான் மக்கள் சுதேசப்பற்று மிக்கவர்கள். மொழிமீதும், மண்மீதும், உழைப்பின் மீதும் தீராத பற்றுக்கொண்டவர்கள்.

அதன் காரணமாகவே பொருண்மிய ரீதியில் உலக நாடுகளில் முன்னணியில் உள்ளார்கள். ஜப்பான் நாட்டை நாங்கள் முன் உதாரணமாகக் கொள்வோமா?

(சி-10552)

# வன்னி சுரபியின் உற்பத்திகளும் அதன் நன்மைகளும்

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட வன்னி சுரபி இக்குறுகிய காலத்திற்குள் நிறுவனத்தின் வளர்ச்சியும் பலவகையில் முன்னேற்றமடைந்துள்ளது. பலருக்கு தொழில் வசதியும் கிடைத்துள்ளது.

இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற யோக்கட், சுவையூட்டிய பால், யெலி, பால் கோவா என்பன விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

**உற்பத்திகளின் விபரம்:-**

யோக்கட்:- பால், சீனி, ஜெலற்றீன், அனுமதிக்கப்பட்ட நிறமூட்டி வாசனை.

யெலி:- பால், சீனி, அனுமதிக்கப்பட்ட நிறமூட்டி.

பால்கோவா:- பால், சீனி

சுவையூட்டப்பட்ட பால் 3 வகை

சொக்கலேட் சுவையூட்டப்பட்ட பால். பால், கொக்கோ பவுடர் அனுமதிக்கப்பட்ட வாசனைத் திரவம், நிறமூட்டி.

ஸ்ரோபரி சுவையூட்டப்பட்ட பால், பால் அனுமதிக்கப்பட்ட ஸ்ரோபரி சுவை நிறமூட்டி.

வன்னி சுரபி உற்பத்திகள், அனைத்தும் சுத்தமான தரமான பாலிலிருந்து சுகாதாரமுறையில் செய்யப்படுபவை. முதலில் சுத்தமான தரமுயர்ந்த பால் தெரிவுசெய்யப்பட்டு சுகாதார முறையில் தொற்று நீக்கம் செய்யப்படுகிறது. அதன் பின் வெவ்வேறு வகையான உற்பத்திகளுக்கு ஏற்றவிதத்தில் தேவையான சீனி அனுமதிக்கப்பட்ட வாசனைத் திரவங்கள், நிறமூட்டிகள் என்பன சேர்க்கப்பட்டு சுகாதார முறையில் சுத்தமான சூழலில் பிளாஸ்ரிக், கோப்பைகளிலும் பொலித்தீன் பைகளிலும், கண்ணாடிப் போத்தல்களிலும் அடைக்கப்பட்டு குளிரூட்டிகளில் சேமிக்கப்படுகின்றன.

யோக்கட், சுவையூட்டிய பைக்கற் பால் மில்க்யெலி என்பன குளிரூட்டிகளிலேயே சேமித்து வைக்கப்படல் வேண்டும். போத்தலில் அடைக்கப்பட்ட சுவையூட்டிய பால் சாதாரணமுறையில் சேமித்து வைத்திருந்து தேவையான போது குளிரூட்டியபின் அருந்தலாம்.

வன்னி சுரபி உற்பத்திகள் அனைத்தும் சாதாரணமாக கடைகளில் கிடைக்கும் குளிரூட்டப்பட்ட மென்பானங்களிலும் பார்க்க எமது உடலுக்கு மிகவும் அவசியமான புரதம், விற்றமின், கொழுப்பு, மாப்பொருள், கனியுப்புக்கள் என பலவிதமான சத்துக்களையும் கொண்டுள்ளன. அத்துடன் இச்சத்துக்கள் எமது உடலால் சுலபமாக உறிஞ்சி சமிபாடடையக் கூடிய நிலையிலேயே உள்ளன. மென்பானங்களில் செயற்கையான மணம், நிறம், சுவை என்பனவே உள்ளன. அவற்றிற்கு நாம் கொடுக்கும் விலை மிக அதிகம்.

ஆனால் உணவுப் பெறுமதி உள்ள உற்பத்திகளுக்கு மிகவும் குறைந்த விலையே கொடுக்கிறோம். வன்னி சுரபி உற்பத்திகளை உட்கொள்பவர்கள் தங்களின் உடலுக்கு நன்மையை பெறுவது மட்டுமல்லாமல் எமது உள்ளூர் பாலுற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து அவர்களின் வருமானம் அபிவிருத்தி அடையவும் உதவுகிறார்கள். இவ்வுற்பத்திகள் சிறுவர் முதல் வயோதிபர் நோயாளிகள், நோயிலிருந்து தேறிக்கொண்டு வருபவர்கள் போன்ற அனைத்து தரத்தினருக்கும உகந்தவை. யோகட் எமது உணவு சமிபாட்டை ஊக்கு விப்பதோடு குடற்புண் போன்ற வருத்தங்கள் உள்ளவர்களுக்கு சிறந்த உணவாகவும் பயன்படுகிறது.

எனவே இவற்றின் பயனை அறிந்து செயற்கையான மென்பானங்களுக்குப் பதிலாக எமது உள்ளூர் உற்பத்தியான சத்துக்கள் அடங்கிய வன்னி சுரபி உற்பத்திகளை அருந்துவதோடு மற்றவர்களையும் ஈடுபடச் செய்யலாம்.

கால்நடை வளர்ப்போர் உங்கள் கால்நடைகளில் இருந்து பெறப்படுகின்ற பாலை சந்தைப் படுத்த முடியவில்லை என்ற கவலை வேண்டாம். உங்கள் பசுக்களில் இருந்து பெறப்படுகின்ற பாலை உங்கள் தேவையை மட்டும் பூர்த்தி செய்து விட்டு மிகுதியை கறக்காமலே விட்டு வந்தீர்களா? அப்படியானால் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் வன்னி சுரபி என்ற பெயருடன் இயங்கிவருகிற இந்நிறுவனத்தில் பாலைக்கொடுங்கள்.

வன்னி சுரபி பாலுற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டது. எனவே இனிவரும் காலத்தில் உங்கள் பசுக்களிலிருந்து பெறப்படும் பாலை உடனடியாக நல்ல விலையில் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் வன்னி சுரபி நிறுவனம் உள்ளது என்பதை அறியத்தருவதோடு உடனடியாக சுரபி நிறுவனத்துடன் தொடர்புகொண்டு அதற்கான ஒழுங்குகளைச்செய்யவும்.

(11 பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் வீரச்சாவடைந்தவர்கள் சிலர், பணிகளின் நிமித்தம் வெவ்வேறு இடங்களுக்கு சென்றவர்கள் சிலர் என பிரிவுகளை அவர் சந்தித்தார். ஆதலால் பழைய போராளிகளின் உறவுவட்டம் அவருக்குக் குறைந்தேபோனது.

அவர் தன் பழைய போராளிகளின் முகம்பாராது போய விடுவேனோ என்பதால் அவரின் சொற்களிலும் கவலை ஊடுருவியே இருந்தது. அவரின் நெஞ்சை ஏதோ பாரமாக அழுத்துவதுபோல் இருப்பதாகத் தன் சார்ந்தவர்களிடம் சொல்லிக் கொள்வார். அவர் தன் இதய பாரங்களை இறக்கிவைக்கப் போராளிகளை எதிர்பார்த்துக் காத்து இருந்தார்.

இப்படி இருக்கும்போது தான் 91ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களப்படையாட்களின் சுற்றிவளைப்பில் சிக்கி சாவைத் தழுவிக்கொண்டார். இச்சோகமான செய்தி அறிந்த போராளிகளின் பேச்சில்கூட அவரது இழப்பின் தாக்கம் படிந்திருந்தது.

அவரின் உயர் நோக்கம் பிரதிபலன் எதிர்பாராது போராளிகளுக்கு சேவைசெய்ய வேண்டுமென்ற பொது ஆர்வமாக இருந்தது. அவரின் செயல்களை போராளிகள் வியந்துபோற்றுவது எதை என்றால் அவரது துணிச்சலையும், தளர்வுறாத அவரது மன உறுதியையுமாகும்.

அவரின் சுதந்திர தாகத்தை வெளிப்படுத்திய செயல்கள் அவரை நினைவூட்டும் வலிமை வாய்ந்தவைகளாகும், தமிழர்கள் சுதந்திர மக்களாக வாழவிரும்புவதை அவர் தன் செயல்களால் வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது இலட்சியப் பயணத்தில் அவரது ஓர்மத்தைக் காட்டுகின்ற உழைப்பானது எப்போதும் தாய் மண்ணின் வரலாற்றோடு பிணைந்தே இருக்கும். ஆதலால் அவர் போராளிகளால் மறக்கமுடியாத அண்ணன் மட்டுமல்ல. அவர் தமிழர் சரித்திரத்தால் மறக்கப்படாத பூநகர் கந்தண்ணனாக திகழ்கின்றார்.

(02 பக்கத் தொடர்ச்சி)

காவல்துறை மகளிர் விவகாரப்பிரிவின் இன்னுமொரு கதவு திறந்துகொள்ள பாதிக்கப்பட்டோர் (பெண்கள்) விபரங்களடங்கிய வரைபடங்கள் புதியகதை சொல்கின்றன. யுத்தம் நடைபெற்ற காலத்தைவிட யுத்தநிறுத்தம் உள்ள காலம்தான் பெண்களுக்கெதிரான குற்றச்செயல்கள் பெருகியுள்ளன. ஏன்? காதலித்துக் கைவிடல், தாய்மையடையச் செய்து கைவிடல், குடும்ப வன்முறைகள் என்றவகைப்படுத்தலுள் இவை நிமிர்ந்து நிற்கின்றன. இரண்டாயிரத்தின் பின் இரண்டாயிரத்து நான்குவரையான வரைபின் முன்சென்ற மூன்று வருடங்கள் வருகின்றன. மண்விடுதலையோடு பின்னப்பட்ட விடுதலை பெண்விடுதலை.

நேர்மையான திருமணத்துக்குப் பலலட்சம் கோரும் பல ஆண்கள். திருட்டுத்தனமான கர்ப்பங்களுக்குக் காரணமாக நிற்பதேன். ஆணாதிக்கக் கருத்துகளை உடைக்க பெண்ணாதிக்கம்தான் வழிமுறையாகும் என்றொரு பெண்ணியலாளர் வானொலியில் பேட்டியளிப்பது சரியா? இவைதவிர "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மையுண்டாகப் பெறின்" என்ற குறளுக்கு விலாவாரியாக விளக்கம் சொல்லும் பெண்ணியலாளர்கள், சமுதாயத்திலுள்ள சாதாரண பெண்களுக்கு ''கற்பு'' என்பதற்கு வானொலியில் விளக்கமளிப்பதும் இன்னும் நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு பெண்தான் பெற்ற பெண்மகவைப் பிறந்த உடனேயே மிதித்துக் கொன்றாள் என்ற செய்தியை அடியத்திவாரத்துடன் வெளியிடுபவர்களால் அந்தக்கருவை அந்தச்சிசுவை அவள் கொல்லுமுன் நடந்திருக்கக்கூடிய மனக்கொலையை வெளிக் கொணரவேண்டுமல்லவா? பெண் பெருத்தகைமை கொண்டவளாக இல்லாதமைக்கு யார்காரணம். சமூகத்தில் புரையோடிப் போயுள்ள பெண்களின் பிரச்சினைகள் பேசப்படவேண்டும். ஏனெனில் தமிழீழப் போராட்டம் அவர்களின் விடிவுக்குத்தான். அவர்கள்தான் இந்நாட்டின் எதிர்கால வாரிசுகளைத் தரவேண்டும். சட்டமுறையற்ற பிரசவங்கள் ஒரு சுபீட்சமான நாட்டுக்கு சுமைகளாகிப் போகும். பெண்கள் பேணப்படாதவரை அவர்கள விடுவிக்கப்படாதவரை சமூகவிடுதலை இருப்பதாகக்கொள்ள முடியாது. பெண்களின் மலையளவு சாதனைகளின் உயர்வு பூரிக்க வைக்கிறது. அச்சாதனைகளின் பெறுபேறாய் வரவுள்ள தமிழீழத்தின் சமுதாயப் பெண்களின் வாழ்க்கை இன்னும் பள்ளத்தில்தான் அதை மிண்டி போட்டா கிண்ட வேண்டும்.

(20 பக்கத் தொடர்ச்சி)

பாறைக் குடைவுகள் முடிந்ததும் கொங்கிரிட் கலவையினால் பாறைக்குழிகள் மூடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன. எரிமலைகள் இருந்த இடத்திற்கு அருகே பாறைகளை குடைய பொதுவாகக் கையாளப்படும் இயந்திரம் (Tunnel Boring machine) இங்கே பயன்படுத்தப்படவில்லை. கடலடிக் குகையைத் தோண்ட 2800டன் வெடிமருந்தைப் பயன்படுத்தி மலைப் பாதைகளை துளைக்க நேரிட்டது. 180,000டன் தேனிரும்பு கம்பிகளும் சாதனங்களும் குகைக்கு கொங்கிரிட் கவசமாக தேவைப்பட்டன. கடலுக்கடியில் 800 அடி ஆழத்தில் அமைக்கப்பட்ட இச்சுரங்கப் பாதையே உலகிலேயே ஆழமான குகைப் பாதையாகவும் உள்ளது.


33மைல் நீளமான மூன்று தண்டவாளங்களைக் கொண்டு இரண்டு ரயில்கள் பயணிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள இக்குகைக்குள் இரண்டு ரெயில்நிலையங்களும் உள்ளன. ஒன்று! யோஷியோகா கைத்தி நிலையம் (Yoshioka-Kaitei Station) மற்றையது டாப்பி கைத்தி நிலையம் (Tappi Kaitei Station) இரண்டு நிலையங்களும் இச் செய்கன் குகையின் வரலாறு விளக்கம் அளிக்கும் காட்சி மையங்களாக மாறியுள்ளன.

ஆசியப் பிராந்தியத்தின் அணுகுண்டு தாக்குதலின் சின்னாபின்னமானதும் ஜப்பான் நாடுதான். வருடம் தோறும் நிலநடுக்கம் தாலாட்டும் நித்தியபூமியும் யப்பான் நாடுதான். ஆண்டு தோறும் சூறாவளி, சுனாமி (Tsunami) புயல் தாக்குதலுக்கும் உள்ளாவதும் யப்பான் நாடுதான்.

இயற்கை அன்னை விளைவிக்கும் கோர விபத்துகளை எதிர்பார்த்து இடர்களை ஏற்றுக்கொண்டு மீண்டும் சீர்ப்படுத்தி நிமிரும் ஜப்பானியரின் நெஞ்சுறுதிக்கு நிகர் உலகில் வேறெங்கும் இல்லை! இல்லை!! இல்லை!!!

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*
*விடுதலைப் புலிகளின் மேற்குலக பயணம் சர்வதேச ரீதியில் திருப்பத்தை ஏற்படுத்துமா?*

*சுகிர்தா,*
*யாழ்ப்பாணம்.*

மேற்குலகம் நியாய பூர்வமாகச் சிந்திக்குமேயானால் திருப்பம் ஏற்படலாம். எல்லாம் அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததே....

*அன்பின் பாவலரே.....?*
*ஒருவரை நேரில் கண்டதும், அன்பு காட்டுவதும், ஆரவாரம் செய்வதும், பின் அவர் சென் றவுடன் மறந்துவிடுவதும், இவ்வுலக குணாம்சமா அல்லது, தமிழரின் பண்பாடா விடை தருவீரா பாவலரே*

*அ.ராதினி,*
*தண்ணீரூற்று.*

இது மனிதனின் இயல்புகளில் ஒன்று தாயே...! அன்பு காட்டுவதும்- அடுத்தகணம் மறந்து விடுவதும் ஒரே இதயம் தான் அது தான் வியப்புக் குரியது.

*அன்பின் பாவலரே!*
*மறைந்து வரும் மரபுக் கவிதைகள் பற்றி திறந்து மனங் கொண்டேதும் செப்பாது-புறந் தள்ளி இருப்பது முறையோ? அன்றிருந்த நேரிசைகள் அரு வெறுப்போ? இன்றுள்ள இளந் தளிர்களுக்கு*

*க.இரத்தினசிங்கம்,*
*கிளிநொச்சி.*

தளிர்களுக்கு வேரின் ஆதாரத்தை புரிந்து கொள்ளும் பக்குவமில்லை- அறிந்து கொள்ளும் ஆற்றலுமில்லை இது தான் அனைத்திற்கும் காரணம்... அறியாதவர் செய்யும் சிறுபிழையை பொறுத் தருள்வீர்.

*பாவலரே வணக்கம்!*
*ஒரு கதையை எல்லோரும் சேர்ந்து கதைத்து விட்டு பின்பு ஒருவரில் மட்டும் பழிசுமத்துபவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*கி.சரிதா,*
*புதுக்குடியிருப்பு.*

கதைக்கக் கூடாததை கதைக்கக் கூடாததருணத்தில் கதைக்கக் கூடாதவர்களோடு கதைத்தால்.... பழியையும் ஏற்கத்தான் வேண்டும்.

*அன்பான பாவலரே?*
*தவறு என தெரிந்து கொண்டு தவறினை செய்து விட்டு தன்னில் பிழையில்லாதவர் போல் மேதாவித்தனமாக செயற்படுபவர்களுக்கு தங்களின் ஆலோசனை யாது?*

*சி. இன்பன்,*
*கிளிநொச்சி.*

இந்தச் சந்திரிகா, தந்திரம் நீண்ட காலத்திற்கு பயன் தராது பாருங்கோ... மற்றவர்களை பேதைகளாக்குவது மேதாவித்தனமல்ல கோமாளித்தனந்தான் பாருங்கோ!

*ஐயா பாவலரே!*
*முத்தையா முரளிதரனின் பந்து வீச்சை அவுஸ்திரேலியர்கள் பந்தை எறிகிறார் எனக் குற்றம் சாட்டுகிறார்கள். இதைப் பற்றி நீங்கள் கூறும் கருத்து என்ன?*

*வி.பிரவீன்*
*கிளிநொச்சி.*

பொறுக்காதார் புறுபுறுக்கிறார்கள்.... அவ்வளவுதான்.

*பாவலன் அவர்களுக்கு!*
*எமது பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுரைகூறும் நேரத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறுகின்றார்களே.*
*இதைப் பற்றி தங்கள் அறிவுரையை கூறுங்கள்!*

***K.ரமேஸ்,***
*பரந்தன்.*

பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்கே அறிவுரை கூறும் பேராசிரியர்களாக இருப்பது மாணவர்களுக்குப் பெருமைதானே... ஆனால் மாணவர்களிடம் தன்னடக்கம் வேண்டும்.

*பாவலருக்கு வணக்கம்!*
*போக்குவரத்து பேருந்து சாரதி கண்டெக்டர் இருவரும் சுடுநீரை காலில் ஊத்தியவர்கள் போல் மக்களோடு கொதித்து விழுகிறார்கள் இதைப்பற்றி தங்கள் கருத்து.*

***S.சுமன்,***
*கிளிநொச்சி.*

அவர்கள் கொதிப்பது பெருந்தன்மையினால்... எல்லாப் பயணிகளுக்கும் தமது பேருந்தில் இடம் கொடுக்க வேண்டும் என்ற கருணையினால்... இதையெல்லாம் பெரிதாக எடுக்கலாமா?

*அன்பின் பாவலரே!*
*தான் பிடித்த முயலுக்கு, மூன்று கால் என நிற்கும் மனிதர்களுக்கு தங்களின் ஆலோசனையினை கூறுங்கள்?*

*சி.மயூ,*
*தண்ணீரூற்று*

மேதாவிகளுக்கு ஆலோசனை கூறமுடியுமா?

*பாவலரே!*
*சமாதான முயற்சிகளில் பிக்குகள் அதிக ஆர்வம் காட்டுவதன் நோக்கம் என்ன?*

*பிரியா,*
*மல்லாவி.*

சமாதானம் ஏற்பட்டு விடக் கூடாது என்பது தான்!

*பாவலரே!*
*எரிபொருளின் விலை ஏறிக்கொண்டு வருகிறது, மீண்டும் பாதாளத்தை நோக்கி சென்று விடுமா?*

*சுகி,*
*ஸ்கந்தபுரம்.*

பாதாளத்திலிருந்துதான் எரிபொருளே கிடைக்கிறது தம்பி!




விடியல் படைமுகாமில்

'இதென்னடாப்பா சுத்த வரக் கிடங்கு இதுக்கயே ஆக்களப் போட்டு புதைக்கவோ'

"இல்லயடா மழைத் தண்ணி மைதானத்துக்க வராம குளத்துக்க ஓடிப்போக வெட்டியிருக்கு...."

அண்ணையாக்கள் அப்பிடியில்ல, இதுதான் நாங்கள் சண்டை நடக்கேக்க நகருற வழி. இதுக்கால தான் எங்களுக்குச் சப்ளை வரும். காயக்காரரைக் கொண்டு போறதும் இதுக்காலதான்"

"மேலாலபோனா..."

"விசரா மேலால விமானம் வரும்.."

"இல்ல விமானம் வருந் தான், எதிரியின்ர ரவையள் வரும். எழும்பி நிண்டு நேரா சண்டை பிடிச்சா.... உடல்ல குண்டுபாயும்."

" நீங்கள் கெட்டிக்காரர் தானே ஏந்தியடிப்பியள்"

" நாங்கள் இஞ்ச சினிமா எடுக்கேல்ல."

* * *

"இப்ப நீங்கள் எவடம் போகவேணும்?"

"அதைத்தான் இன்னும் தீர்மானிக்கேல்ல கையில ஒரு வீக்கம் ஆசுப்பத்திரிக்குத்தான் போக வேணும்."

" எங்க பாப்பம்.... எட உது வாய்வுக்கோளாறு போல உப்பிடித் தான் எனக்கு முதலொருக்கா காலில வந்தது. நான் கந்தையாப்பரியாரியட்டத்தான் மருந்துகட்டினனான்..." வைச்சிருக்காத வாய்வெண்டு, கையமுடக்கிப்போடும்.... உதுக்கெல்லாம் ஆசுப்பத்திரி சரிப்படாது. நீ.... நான் சொல்லுறன் கந்தையரட்டான் போ... என்ன யோசிக்கிறாய்...?

"இல்ல கந்தையர் உனக்கென்ன முறையா இருக்குமெண்டு யோசிக்கிறன்."

" ஆத்தில போட்டாலும் அளந்து போடு எண்டு சொல்லுவினம் நீ அறியேல்லயே."

''அறிஞ்சென்ன செய்யிறது"

"என்ன செய்யிறதோ.... ஏதோ உழைக்கிறதில வீட்டுச் சிலவு போக மிச்சத்தை ஒரு வங்கியில போடன். அப்பத்தானே முன்னேற"

" நானும் அப்படித்தான் நினைச்சன் ஆனா.. வங்கியில வெறுங்கைய எடுக்கமாட்டினமாம்."

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –90



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழுங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்–90

.............................................................
.............................................................
.............................................................
.............................................................

பெயர் : .............................................
முகவரி : .............................................
.............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –89



வா.கிருஷ்ணகரன்,
யோகேஸ் வீதி,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

*ஊர் சென்று உக்கார உயர் பாதுகாப்பு தடையாம்*
*உயரச் (தூர) சென்ற மீன் பிடிக்க உத்தரவுப் பத்திரமாம்*
*உயர்ந்திடும் வாழ்க்கைச் செலவைக்கரைசேர்க்க எண்ணிய*
*படகோட்டியே! உள்ளது ஒரே வழியே, நாம் பெற்றிடும் சுதந்திரமே.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஆசியாவின் கடல்கள் எல்லாம்*
*ஆண்டவன் எம் தேச தமிழன்*
*பேரினவாதியின் அடக்கு முறையால்*
*துறை ஒதுங்கி மீன்பிடிக்கிறான்.*

இ.தமிழ்பிரியன்,
அடம்பன்.

*வயிற்றுப் பசிபோக்க திண்டாடும்உறவுகளே!*
*செல்வம் தரும் எங்கள் கடலில்*
*சிங்கள கடல் படையின் நாசகார செயல்களால்*
*இக் குளமே எங்கள் வாழ்வின் வழி.*

ஐ.வாமதேவா,
கிளிநொச்சி

*கடல் வலயத் தடைச்சட்டத்தால்*
*தளராது எம் உள்ளம்.*
*கட்டுடல் உள்ளவரை கரையோர மீன் பிடித்து*
*எம் உறவுகளின் வயிற்றுப் பசி போக்குவோம்.*

சு.செல்வி,
பரந்தன்.

*ஏரிக் கடலில் சலிக்காது மீன்பிடித்து*
*ஏணியாக உயர்த்துவோம் எம் வாழ்வை*
*நாளை மலரும் தமிழீழத்தினை*
*பார் கடலில் மீன் பிடித்து வளமாக்குவோம்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*ஆழ்கடலிலோ இந்திய மீனவர்*
*நடுக்கடலிலோ சிங்கள மீனவர்*
*கரை கடலிலே வலை வீசி*
*வயிற்றுப் பசி போக்கிடுவீர்.*

க.கிசோ,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.